கற்பகக்கனிகள்

... BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

3698

ஸ்டார் பிரசுரம்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
...VALLUVAR LIBRARY, PAGANERI

...CHETTIAR

Y. M. C.
ASSOCIATION
PAGANERI

கற்பகக் கனிகள்

கட்டுரைகள்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

சுகி

V. M. Q.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை — திருச்சிராப்பள்ளி

No. 36 * ESSAYS

First Edition — Dec. 1946

COPYRIGHT

Price Rs. 2/8

STAR PUBLICATIONS

PALAKARAI — TRICHINOPOLY

PRINTED AT THE CITY PRESS, TRICHY. FOR STAR PUBLICATIONS
P. I. C. TY-9, A. (Q. H.) COPIES 1000.

3698.
Y.M.C. ASSOCIATION PAGANERI

அறிமுகம்

எந்தப் பாஷைக் கதைகளோடும் தமிழ்ச் சிறு கதைகள் தோள் தட்டி நிற்கின்றன. மேன்மைக்குப் பலவாறாக காரணம் சொன்னாலும் பள்ளிக்கூடத்திலே, கதை எழுத யாரும் அனுமதிப்பதில்லை; சொல்லிக் கொடுக்கிறதும் கிடையாது. கட்டுரை எழுதச் சொல்லிக் கொடுக்கிறார்கள்; அனுமதிக்கிறார்கள்! ஆகவே, தமிழ் பாஷையில் கட்டுரைகள் இல்லையென்று சொல்லும்படி அருகிப் போய் விட்டன. கட்டுரைக்குப் பதில், பள்ளிக்கூடங்களில் கதையின் தலையில் கை வைத்திருந்தால் இன்றைய தினம் கட்டுரைகள் வளம் பெற்றிருக்கும்.

சிறு கதைகள் அபாரமாக இருக்கின்றனவென்றாலும், கட்டுரைக்குள்ள ஒரு பெருமை கதைக்குக் கிடையாது. படித்த கதையின் தலைப்பைக் கண்டதும், அக்கதையின் சாராம்சம், துடிப்பு எல்லாம் இதயத்தில் எழுந்துவிடும். படித்த கட்டுரையின் தலைப்பில் அவ்வளவு விஷயங்களும் நினைப்பில் ஏறுவதில்லை. கட்டுரையில் ஏதேதோ உப நதிகள், ஜீவ நதியில் கலக்கிற மாதிரி தலைப்பிற்குப் புறம்பான விஷயங்களும்

கலந்திருக்கும். கதையிலே ஆரம்பம், மத்தி, முடிவு என்று மூன்று கட்டங்கள். கட்டுரையில் அப்படியல்ல. அது மேகத்தின் நிறம் போல பச்சோந்தியாக மாறிப்போகும். அது வாசகன் எண்ணங்களை ஏமாற்றிச் செல்லும். கதையை விட சிந்தனையைக் கிளறும் சக்தி கட்டுரைக்கு உண்டு. ஆகவே கதையைவிட, கட்டுரை எழுதுவது கடினம்.

கட்டுரையை விஷயச் செறிவோடு சொல்வது மட்டும் திறமையன்று. ஹாஸ்யம் கலந்து வரவேண்டும். விஷயங்கள் நட்சத்திரமானல், ஹாஸ்யம் நிலா மாதிரி. நிலவற்ற ஆகாயம் போன்றது, ஹாஸ்யமில்லாத கட்டுரை. கட்டுரையை எங்கு வேண்டுமானுலும் ஆரம்பிக்கலாம், எங்கு வேண்டுமானுலும் நிறுத்தலாம். ஆனல் ஆரம்பம் செய்வது கடினமா முடிப்பது கடினமா ?

கட்டுரையின் ஆரம்பம் சூரியோதயம் போல என்முல் அதன் முடிப்பு, சந்தியாவானம் போன்றது.

'சுகி' ஆறேழு வருஷங்களாக சிறுகதைகள், ரேடியோ நாடகங்கள் எழுதிவருவதை நாம் அறிவோம். ஹாஸ்யமாகவும், ஹாஸ்யமே இல்லாமலும் கதைகள், நாடகங்கள் எழுதி விடுவார். கட்டுரைகளில், ஹாஸ்யம் இருந்தே தீரும். தினசரிப் பத்திரிகைகளுக்கு தலையங்கம் மாதிரி கட்டுரைக்கு ஹாஸ்யம் தாய்ச் சரக்கு.

இவருடைய சிப்பாய் ஹிருதயம் (நாவல்), நமஸ்காரம் (கதைகள்), யுத்தகால இலக்கியம் (கட்டுரைகள்), முதலான புஸ்தகங்களிலிருந்து வேறுபடும் பல சிறப்புகள் இக்கட்டுரைகளில் இருக்கின்றன. ரேடியோ நாடகங்களிலே வருகிற சம்பாஷணை இக்கட்டுரைகளில் தலை நீட்டவில்லை. கட்டுரையாளன் என்ற நினைவில் எழுதி யுள்ளார். இவ்வளவு ஏன் சொல்ல நேரிடுகிறது என்றால் சிலர் நாடகங்களை, கதைகளை, வெறும் ஹாஸ்யத் துணுக்குகளை கட்டுரையெனச் சொல்லுவதனால்தான்.

'சரி ஐயா, இவ்வளவும் சொந்தச் சரக்கா?'

நன்றாய்க் கேட்டீர்கள். அப்படித்தான் கேட்கவேண்டும். தழுவல்கள் இருக்கின்றன ஒன்றிரண்டு கட்டுரைகளில். அதாவது கம்பன், வால்மீகியைத் தழுவி எழுதியமாதிரி ஆங்கிலக் கருத்துக்களைத் தழுவி எழுதியிருக்கிறார். இந்த உண்மை, படிக்கப் படிக்கப் புலனாகும்.

உங்கள் கையில் 'கற்பகக் கனிகள்' கொடுத்துவிட்டோம். கனிக்குக் கனி வேறுபட்ட சுவை என்கிறார்களே, அப்படி இருக்கிறதா கட்டுரைக்கு கட்டுரை? பாருங்கள்.

திருச்சி
22—12—46

ஸ்டார் பிரசுரம்

சமர்ப்பணம்

எனது இலக்கிய ஆர்வத்தை மறைமுகமாக வளர்க்கப், பாடப் புத்தகங்கள் தவிர, பத்திரிகைகள் நவீனங்கள் தொடவே கூடாதெனச் சொல்லிய என் அப்பாவிற்குச் சமர்ப்பணம்.

* * *

நன்றி

இக்கட்டுரைகளை ஏற்கனவே பிரசுரம் செய்த, வசந்தம், கலைமகள், சக்தி, ஆனந்தவிகடன், கல்கி, நவயுவன், சிவாஜி முதலான பத்திராதிபர்களுக்கு எனது நன்றி.

உள்ளுறை

			பக்கம்
1	கைக்கடிகாரம்	...	1
2	கடனும் கவிதையும்	...	8
3	சொர்க்கம் வேண்டாம்	...	15
4	சட்டைப் பைகள்	...	22
5	பாலூ.. ஊள...ஊள	...	26
6	காக்காய்	...	33
7	ஐயா கதாசிரியர்களே !	...	41
8	என் பிரசங்கம்	...	46
9	ஏழை பங்காளன்	...	50
10	கற்பகக் கனி	...	57
11	சொல்! சொல்!!	...	65
12	அருவி	...	69
13	வண்டு	...	77

14	தெரியாது	...	83
15	அந்திமந்தாரை	...	90
16	மழைக்காலம்	...	94
17	என் பேறு	...	100
18	தொலைந்த குடை	...	103
19	மகாநாடுகள்	...	108
20.	புது மொழி	...	117
21.	சங்கோஜம்	...	125
22.	மூக்கு	...	132
23.	நாமகரணம்	...	143
24.	அரிசியே !	...	148
25.	முன்னுரைக் கோவை	...	152

கைக்கடிகாரம் 3698

என் இருதயம் போய்க்கொண்டிருக்கிறதா நின்றுவிட்டதா என்று அடிக்கடி நான் தொட்டுப் பார்ப்பதில்லை. கடிகாரம் நின்றுவிட்டால், வேறு ஒன்றும் ஓடுவதில்லை. கடிகாரம் சரியாக ஓடினால் வேறு ஒன்றும் நிற்பதும் இல்லை.

கைக்கடிகாரம் என்னுடைய அவயவங்களுள் ஒன்றாகிவிட்டது. கையில் இருந்தால் அதைப் பார்க்காமல் கணக்காக மணி சொல்லுவேன். கையில் இல்லையென்றால், அத்தனையும் சந்தேகம். காலை மணி எட்டா பத்தா ஒன்றா என்ற சந்தேகம் வலுக்கும். ஒரு பொருளின் மகிமை எப்போது புரியும் என்றால், அந்தப் பொருள் தவறியபின்தான். கைக்கடிகாரம் இதற்கு விலக்கன்று.

கைக்கடிகாரம் எனக்கு அழகுச் சின்னங்களில் ஒன்றாக இருக்கிறதா, அவசியப் பொருளாக இருக்கிறதா? அவசியப் பொருள். ஆனால், கைக்கடிகாரம் இல்லாமல் ஆதி மனிதர்கள் எப்படி வாழ்க்கை நடத்தினார்கள்?

*

அந்தக் காலத்துக் 'கணிகள்', 'கடிகையார்', 'நாழிகைக் கணக்கர்' இவர்களெல்லாம் இன்று இருந்தால்? வீட்டுக்கு வீடு 'நாழிகை வட்டில்', 'மணற்புட்டி', 'சூரிய கடிகை' இவை இருக்கும். இவற்றுள் எதையும், நாம் மணிக்கட்டில் கட்டத் தான் முடியுமா? இல்லை, பைக்குள் சங்கிலி கோத்துப் போட்டுக்கொள்ளத்தான் முடியுமா?

சப்தமே கேளாமல் ஓடும் இந்தக் கைக்கடி காரம் எங்கே? 'நாழிகைப் பறை' என்று ஊரெங்கும் ஒலித்துச் சிதறும் பறை ஒலி எங்கே?

தமிழர் நாகரிகம் உச்ச நிலையில் இருந்த போதும், 'நல்ல வேளை, நல்ல பொழுது' என்று பஞ்சாங்கம் பார்த்தே செய்தனர். அதற்கென்று மான்யம் வழங்கப்பட்ட சிலர் காலநிலையைக் கணிப்பார்கள். இப்போது 24 மணியாக வகுக்கப் பட்ட நாளை, நாழிகை என்று 60 ஆகப் பிரித் தனர். இந்த நாழிகைக் கணக்கு வெகு ரஸமான விஷயம்.

ஒரு தண்ணீர்க் கொப்பரையில் சிறு துவார முள்ள வட்டில் ஒன்று மிதந்துகொண்டிருக்கும். அதனுள் தண்ணீர் செல்லச் செல்ல நிறைந்து அமிழ்ந்துவிடும். அப்படி அமிழ்ந்துவிட்ட நாழிகை வட்டிலைக் கண்ட கடிகையார் முரசு அறைவார்களாம். இதைக்கேட்டு ராஜா முதல் நகர மக்கள் வரையில் பொழுதை அறிந்துகொள் வார்களாம். இப்போதும் ஜெயில், தாலூகாக்

கச்சேரி, சீனி ஆபீஸ், பஞ்சாலை இங்கெல்லாம் மணியடித்தோ, சங்கு ஊதியோ பொழுதைக் காட்டுகிறார்கள் அல்லவா?

இதற்கு அப்பால் 'நாழிகை வட்டிலை' லக்ஷ்யம் செய்யாதவர்கள், தம் நிழலை அளந்தும், நக்ஷத்திர உதயத்தைக் கண்டும், இருப்பிடத்தைக் கணித்தும், மணியை அளந்துகொண்டார்களாம். எனக்கோ, துருவ நட்சத்திரத்திற்கும் விடி வெள்ளிக்கும் வித்தியாசம் தெரியாது. இப்போதுகூடப் புஷ்பங்கள் மலர்வதைக் கொண்டு மணிக் கணக்கைக் கண்டுகொள்ளுகிறார்கள். எனக்கு இந்த வித்தையாவது தெரிகிறதா?

காலைப் பொழுதை அறியச் சேவலும் கோழியும் இருக்கின்றனவாம். செந்தாமரை மலருவதும் அப்போதுதானும். கோழி என் பாடப் புஸ்தகத்திலும், தாமரை என் இலக்கிய புஸ்தகங்களிலுந்தான் இருக்கின்றன. கிராமத்தில் இவை சாத்தியப்படலாம். தன் நிழல் தன் அடியானால், மணி 12, அதாவது உச்சிப்பொழுது என்கிறார்கள்.

மாலைப் பொழுதை அந்தி மந்தாரையும் முல்லையும் அரும்பிக் காட்டுகின்றன என்கிறார்கள். இருக்கலாம்.

பூக்காரி வந்த பின்புதான் இந்தப் பூக்களை நான் பார்க்கிறேன். என் ஆபீஸில் இவைகளைப் பயிரிடுகிறார்களா? ஒருவேளை விவசாய இலா

காவைச் சார்ந்த ஆபீஸுகளில் இப்படி நடக்கலாம்.

நட்ட நடுநிசியில் பாரிஜாதம் மலரும். அப்படி இருக்க என்ன கஷ்டம்? எதற்குக் கடிகாரம்?—இப்படிக் கேட்கிறார் கவி தேசிக விநாயகம் பிள்ளை.

சுற்றுப் பொருளெல்லாம் உற்றுநோக்கி—அவை
சுட்டும் மணிநேரம் கண்ட றிவாய்
பெற்றமுத் தே! இந்த உண்மை அறிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி.

பள்ளிக்கூடத்தில் என்ன என்னவோ பாடங்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள். மணிக்கணக்காக. ஆனால் கடிகார உதவியின்றி எப்படி மணி அறிகிறது என்பதைச் சொல்லி வைத்தால் (பயனுள்ள எதையுந்தான் பள்ளியில் சொல்லிவைக்க மாட்டார்களே!) எவ்வளவு உபகாரமாய் இருக்கும்?

பள்ளிக்கூட நாளிலிருந்து கடிகாரம் பார்த்தே வாழ்க்கை நடத்த வேண்டியதாகிறது. எழுந்திருந்ததும், "பாரடா கடிகாரத்தை!" என்பது அப்பாவின் ஆக்ஞை. குளிக்கவில்லையா? "டேய்! கடிகாரத்தைப் பார்"! என்பாள் அம்மா. சரி, பள்ளிக்கூடத்திற்குப் போனதும், "பாரு, கடிகாரத்தை; நீட்டு கையை" என்பார் வாத்தியார்.

சினிமா, ரெயில், முக்கியமாக ரேடியோ எல்லாம் கடிகாரத்தின் சுழற்சியில் சிக்கியவை. இப்போது ஆபீஸில்நான் வந்ததும் கடிகாரத்தைப் பார்க்கிறுர் மானேஜர். இப்படி என் வாழ்க்கையே கடிகாரத்தில் ஆரம்பித்துக் கடிகாரத்திலேயே சுற்றிவருகிறது. கடிகாரம் எனக்கு எஜமான்; நான் அதன் அடிமை. என்னை அது தான் இழுத்த இழுப்பிற்கு ஆட்டி வைக்கிறது. ஒன்றுமில்லை, நாலாம் நாள் கைக் கடிகாரம் இல்லாமல் ரெயிலடிக்குப் போனவன், கடிகாரம் இல்லாததைப் பார்த்ததும் வீட்டிற்குப் போய் எடுத்துவர நினைத்தேன். உடனே வீட்டிற்குப்போய் எடுத்துக்கொண்டுவர எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று, மணிக்கட்டைப் பார்த்தேன்! எப்படி இருக்கிறது, வேடிக்கை? பழக்கத்தால் வந்த தோஷம்.

சுவர்க் கடிகாரம், அலாரம் கடிகாரம், கைக் கடிகாரம் என்னும் இம் மூன்றில் கடைசியாக இருப்பதுதான் நம் நிழலைப்போல, ஏன், இருதயம்போல நம்மோடு இருப்பது. கைக்கடிகாரங்கள் பல, புது மாப்பிள்ளையையும் பெண்ணையும் தீபாவளி சமயத்தில் பிரித்துவைத்துவிடவும் கூடும்! அதற்கு அவ்வளவு மதிப்புக்கொடுக்கிறவர்கள், தலைத் தீபாவளி மாப்பிள்ளைகள். என் கைக்கடிகாரமும் தலைத் தீபாவளியோடு வந்தது.

என் இருதயத்தைத் திறந்து பார்த்ததில்லை. அப்படியே என் கைக்கடிகாரத்தையும் காபந்து

செய்கிறேன். அது டிக்டிக் என்று அடித்துக் கொண்டிருந்தால் சரி. ஒரு மணியோ இரண்டு மணியோ முன்னே பின்னே போனால்தான் என்ன? விஷ்ணு மாதிரி காத்துவருகிறது. கோபிகைகள், கிருஷ்ணனிடம் அடிமை பூண்டது உண்மையோ, என்னவோ. நான் கைக்கடிகாரத்தினிடம் காதல் கொண்டவன்.

காதல் கொண்டதைப்பற்றிப் பலர் நகைக்கலாம். உலகத்திலே அணுக்குண்டு கண்டு பிடித்து ஒருவரை ஒருவர் அடக்கி ஆள நினைக்கிறார்கள். அவ்வளவு பயங்கரமான நாசகாரி வேண்டுமா, மனிதவர்க்கத்தை அழிக்க? எனக்குத் தோன்றுகிறது, யாராவது ஒரு விஞ்ஞானி, உலகத்தின் சகல பாகங்களிலும் உள்ள கடிகாரங்கள் அத்தனையையும், தாம் இருந்த இடத்திலேயே இருந்து ஏதோ ஒரு மாயா சக்தி மூலம் நிறுத்திவிட ஒரு யுக்தி கண்டுபிடித்தால் போதும்!

என்ன நடக்கும்? உலகம் பாழ் வெளி. கணக்காக ஆரம்பிக்கும் உலகத்து ரேடியோக்கள் 'களாம்புளாம்' ஆகிவிடும். ரெயில் வண்டிகள் ஓடமுடியுமா? ஆபீசுகள், நிர்வாகங்கள், பாங்கிப் பணம் எதுவும் புரளவோ நடக்கவோ செய்யாது. எங்கும் குழப்பம், தேக்கம், அசமந்தம், ஒரே கோரக்கூத்து நடக்காதா? உலகின் நாசமும் பாசமும் கடிகாரத்தின் ஓட்ட சாட்டத்தைப் பொறுத்தவை அல்லவா?

இவ்வளவு பெருமை வாய்ந்த கடிகாரத்தைப் பற்றி நான் பாடினுல் இப்படித்தான் பாடுவேன் என்பதைத் தீர்க்க திருஷ்டியோடு சொல்லிவிட்டான் ஒரு கவி.

சக்கரத்தி ஞல்அரவம் தாங்கலிஞல் முள்என்னும்
அக்கரத்தி ஞல்வேலை யார்வதஞல்—மிக்க அன்பர்
முக்கியமாய்க் கைக்கோள்லான் முத்துச்சு வாமிதுரை
கைக்கடியா ரந்திருமால் காண்.

திருமாலைப் பார்க்கவேண்டுமானுல் ஸ்ரீரங்கம் திருப்பதி போகவேண்டாம். கைக்கடிகாரத்தைப் பார் என்று சிலேடை சொன்ஞல், மிகவும் பொருந்தும். சக்கரம் தாங்கி, பாம்பால் தாங்கப் பட்டுச் சமுத்திரத்தில் பள்ளிகொண்ட திருமாலைப் பக்தர் கைக்கொள்ள நினைப்பது உண்மை. சக்கரமும், சப்தமும், முள்ளும் கொண்டு வேலை வாங்குவதால் சில அன்பர்கள் கைக்கெள்ளுகிருர்கள், கைக்கடிகாரத்தை என்பதும் சிலேடையாகப் பாட்டில் இருக்கிறது.

திருமாலானவர் இன்னும் 'கல்கி' அவதாரம் எடுக்கவில்லை என்று பக்த கோடிகள் சொல்லுகிருர்கள். கைக் கடிகாரம் கல்கி அவதாரம் அல்லாமல் வேறு என்ன ?

கடனும் கவிதையும்

"என்ன சார் உத்தியோகம் பார்க்கிறீர்கள்?" என்று எனது பால்ய நண்பர் சமீபத்தில் கேட்டார். நான் பார்ப்பது உத்தியோகமா?

"வேலை தானே, எழுத்து வேலை" என்றேன்.

"எழுத்தாளனா? அது சரி; சாப்பாட்டிற்கு என்ன செய்கிறீர்கள்?"

"கடன் வாங்குகிறேன்."

பால்ய நண்பர் உடனே நழுவி விட்டார். எங்கே கடன் கேட்டு விடுவேனோ என்று பயம்..

உலகத்திலேயே பரிபூர்ணமாக ஒரு விஷயத்தைப் பற்றி எனக்கு அனுபவம் உண்டென்றால் அது கடன் வாங்குவதைப் பற்றித்தான் இருக்க வேண்டும். என் தகப்பனார் தம்முடைய கலியாணக் கடனை இன்னும் அடைத்துக் கொண்டிருக்கிறார்; இந்த ரீதியில் என் கலியாணக் கடன் வேறு இருக்கிறது; என் பிள்ளைகளுக்கு கலியாணக் கடன் வாங்கியும் இருக்கிறேன்.

வாழையடி வாழையாக கடனும் கல்யாண மும் எங்கள் குலதர்மம். சுருங்கச் சொன்னால், நான் கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலேயே......முடியும் என்பது என் துணிவு.

நான் மட்டும் என்னய்யா? ஒரு தேசம் மற்றொரு தேசத்திடம் கடன் வாங்கித்தான் பிழைக்கிறது. முனிஸிபால்டி ஜில்லா போர்டையும், ஜில்லா போர்டு மாகாண நிதி இலாகாவையும், மாகாணங்கள் இந்திய அரசாங்கத்தையும், இந்திய அரசாங்கம் பிரிட்டன், அப்பால் அது அமெரிக்கா, இப்படி நெடுக ஒரே கடன் புராணம்.

தேசங்கள் பாடே கடன் வாங்கிப் பிழைக்கிறது என்றால், தனி மனுஷன் கடன் வாங்குவதில் என்ன அகௌரவம்?

நான் மட்டும் கடன் வாங்காமல் இருந்தால் என்னய்யா நடக்கும்? நடக்குமா, படுத்தல்லவா போகும்? இந்த பாங்கிகள், பண்டு ஆபீசுகள் எல்லாம்.

என்னைப் போன்ற தர்மாத்துமாக்களை நம்பித்தானே பாங்கிகள் தங்கள் நிகர லாப அட்டவணையைப் பக்கம் பக்கமாக வெளியிடுகின்றன. ஏழு லக்கம் எட்டு லக்கமென்று லாபஸ்தானம் வருகிறது என் சகோதரர்களால்தானே? கடனாளிகள் இல்லாவிட்டால் பாங்கிகளை, பண்டு ஆபீசுகளை, கூட்டுறவு நிதிகளை, சீட்டு நடத்தும் ஸ்தாபனங்களை இழுத்து மூடவேண்டும்.

பணத்துக்கு உயிரும், ஓட்டமும், இடமாற்றமும், ஏமாற்றமும், வாழ்வும், தாழ்வும் கொடுப்பது நாங்கள். பொருளாதார நிபுணர்கள் அல்ல.

ஆனால் 'கடன் வாங்கவும் வாங்காதே; கடன் கொடுக்கவும் கொடுக்காதே' என்று புத்திசாலிகள் சொல்லுவார்கள். 'ஆன முதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதிகெட்டு' என்ற பாட்டையும் 'வளவனாயினும் வரவறிந்துண்' என்ற பழமொழியையும் இன்னும் பல புத்திமதிகளையும் எடுத்தோதுவார்கள்.

அவ்வளவும் அபத்தம். பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது என்பது கடன் விஷயப் பொன்மொழிகளில் சரி. மனுஷன் என்றிருந்தால் ஒன்று கடன் வாங்கவேண்டும்; அல்லது கொடுத்தாக வேண்டும். இரண்டும் செய்யாமல் இருக்கிறவன் ஏன் மனிதனாகப் பிறக்கவேண்டும். ஆறுவது அறிவு என்பது எதற்கய்யா, எதற்கு?

கொடுக்கல் வாங்கல் இல்லா விட்டால், 'ஸிவில்' உயிர் வாழுமா? ஜட்ஜு முதல் ஜட்கா வண்டிக்காரன் வரை பிழைக்க முடியுமா? உலகத்தின் ஓட்டசாட்டம், கடன்காரர்களால் நடக்கிறது. கடனாளி சர்வஜன பரோபகாரி; உலகத்தின் இருசு.

கடன் வாங்குவதைவிட அதை அடைப்பதுதான் கஷ்டம் என்பார்கள் சிலர். என் அனுபவம் இதற்கு நேர்மாறு. அஹிம்ஸையும் காந்திஜியும்,

தத்துவமும் ராதாகிருஷ்ணனும், கேலிச் சித்திரமும் மாலியும் எப்படிப் பிரிக்கமுடியாதோ அப்படியே நானும் கடனும் பிரிக்கமுடியாத சிவசக்தி. சுப்புவுக்கு கிராமியக் கவிதைகள் எவ்வளவு சுலபமோ அப்படியே நான் கடனுக்குக் கடன், அந்தக் கடனுக்கு இன்னொரு கடன், இப்படியே கவியைச் சிருஷ்டிக்கிற மாதிரி நான் கடன்களை வாங்குவேன்.

கடன் கவிதையைப் போன்றது. இரண்டும் நெஞ்சோடு ஒட்டி உறவாடுகின்றன. நித்யத்துவம் பெற்றவை. நாம் மறையலாம்; நமது கடன் உயிர் வாழும். அதுவே அதனுடைய பணி. கடன் வாங்கிய நம்மை சுலபமாக மறையவிடுவார்களா? மாட்டார்கள்.

எனக்குத் தலையைக் காலை வலித்தால் கடன்காரர்கள் (என்னை நம்பி வயிறு வளர்க்கும் கடன் கொடுத்தோர்) உடனே டாக்டரை அழைத்து வந்து வைத்யம் செய்வர். என் ஆயுள் இரட்டிப்பாக இருக்கத் தவம்கிடப்பார்கள். கடன் கொடுத்தோர் யாருமே, கடன் கொண்டாருக்கு நோய் கண்ட விபரம் தெரிந்ததும், வயிற்றில் நெருப்பையும், கையில் டாக்டரையும் கட்டிக்கொண்டு வருதல் இயல்பு. உயிரோடு இருந்தால் பணம், வைத்யச் செலவு உள்பட பற்றிக் கொள்ளலாம். செத்தால்?

ஆகவே, நம்மையும் நம் கடனையும் உயிர் வாழச் செய்கிறார்கள். ஆயிரம் பதினாயிரம் உதவி

(வைத்ய உதவி) செய்தாலும் மனிதனை அமர னுக்க முடியுமா? முடியாது. ஆகவே கடன் கொண்டார் நெஞ்சம் கடனுக்கு அமரத்துவம் கொடுத்து, தான் செத்துச் சுண்ணும்பு ஆகிவிடு கிறது.

ஆனல், கவிகள் விஷயத்தில் கடனும் கவி தையும் பாக்யம் செய்தவை. கவிதை எழுதக் கூடியவர்கள் அநேகமாகக் கடன்காரர்களாகவே இருக்கிருர்கள். கவிகள் வாங்கிய கடன் சிலகாலம் உயிர் வாழ்ந்து, பின்னர் கவிதையை நித்தியமாய் நிர்மலமாய் உயிர்வாழ விட்டு விடுகிறது.

கடனைவிட மகா பயங்கரமானது கவிதை!

பாங்கிகள், நிதிச்சாலைகள், கூட்டுறவு நிலை யங்கள் கடனாளிக்குச் சொந்தமாக இருக்கிறது போல, கவிதைகளும் கடன்காரர்களுக்குத்தான் சொந்தம். பணத்தைப் போலவே பாட்டுகளும், கடனாளியின் செல்வங்கள்.

இந்த விதி தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், உலகமெங்கும் பணமும் பாட்டும் கடனாளி களுக்குத் தான் உரிமை பெற்றவை என்பதைப் பார்க்கிருேம்.

"ஹோமர் என்ற ஆதிக் கவியின் நாக்கு பாக் களை ருசி பார்த்தது; பதார்த்தங்களை ருசி காண வேயில்லை" என்ருன் கோல்டுஸ்மித் என்ற(கடன் கார) கட்டுரையாளன்.

ட்டாஸோ என்ற கவி, கடன் கொடுப்பார் யாருமில்லாமல் போகவே, கவிதை எழுது வதற்கு, விளக்கொளியாக பூனையின் கண் ணெளியை வேண்டி நின்ருனும்.

தமிழிலுள்ள தனிப்பாடல்கள் கடன் கொடாதவரையும், கடன் கொடுத்தவரைப் பற்றியும், பாடிய பாடல்கள் அனந்தம். வண்டிக் கணக்காக இருக்கின்றன. ஏழைகள் கவியெழுதி கடன்காரர்களாகச் சாவதில் வியப்பில்லை. ஆனல், இத்தாலிய பணக்காரன் தரும ஆஸ்பத்திரி கட்டி, பின்னர் கவியெழுத ஆரம்பித்தான்; ஆகவே அநாதையாக அந்த பெண்டிவோலிகோ, அவன் கட்டிய ஆஸ்பத்திரிக்குள் நுழைய அனுமதி கிடைக்காமல் செத்தானும். கவிதை அளித்த பரிசு!

ஆனல், சாவு பயனுள்ளது என்பதைக் காட்ட "நான் உயிரோடு வாழ்ந்தும் கடன் கொடுக்க முடியவில்லை. செத்தால், என் பிரே தத்தை தகுந்த டாக்டரிடம் விற்று, கடன்காரர் களே, நீங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங் கள்" என்று பிரஞ்சுக் கவிஞன் உயில் எழுதி ஞனும்.

கவிதையும் கடனும், சொல்லும் பொருளும் போல, சிவனும் சக்தியும் போல!

கவிதைக்கும், கடனுக்குமுள்ள தொடர் பைக் கண்டு அஞ்சியவர்கள், வசனத்தில் எழுதி

யாவது பணம் சம்பாதிக்க முயன்றார்கள். இதனால் தான் வசனம் பிறந்தது என்பது என் கட்சி.

கவிதையைப் பிடித்த வறுமை வசனத்தையும், வசன கவிதையையும் பிடித்திருக்கிறதைப் பார்க்கிறோம்.

"பணம் கள்ளைப் போன்றது. மருந்துக்காக சிருஷ்டிக்கப்பட்ட கள், எவ்வளவோ அனர்த்தங்களைச் செய்வதுபோல, மனிதன் சௌகரியத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட பணம், குட்டை குழப்பி வருகிறது" என்றும் 'பணம் பல பொருள்களின் மேல்த் தோலியை வாங்கும்; உள்ளேயுள்ள பருப்பை அது பெற முடியாது. ஆகாரம் தரும்; ஆனால் பசி தருமா? மருந்து தரும் ஆரோக்கியம் தருமா? பழக்கங்கள் உண்டாக்கலாம்; ஆனால் உயரிய நட்புத்தருமா? வேலைக்காரர்கள தரும்; ஆனால் அன்பர்கள் கிடைப்பார்களா? மனத்திற்கு இன்பங்கள் தரும்; ஆனால் நிம்மதியும் ஆனந்தமும் தருமா?' என்றும் அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பணம் இல்லாதவர்கள், உலகத்திற்கு ஒன்றை விட்டுச் சொல்லுகிறார்கள். அது இலக்கியம்.

இலக்கியத்தின் ஆணி வேர் கடன்; நான் அதில் ஒரு சல்லிவேர்.

சொர்க்கம் வேண்டாம்

நேற்று அதிகாலையில் வழக்கம்போல் காப்பி குடித்துவிட்டு என் நண்பனைப் பார்க்கச் சென்றேன். அவன் வீட்டை அடைந்தபோது மணி ஏழு, ஏழரை இருக்கலாம். நுழைந்ததும் பைத்திய ஆஸ்பத்திரிக்குள் வந்துவிட்டோமா என்ற சந்தேகம் தோன்றியது. அவ்வளவுதூரம் அமளி குமளி. அந்த வீட்டில் நண்பரின் மனைவி அவருடன் சண்டைபோட்டுக் கொண்டிருந்த தால் அவருக்கு வந்த கோபத்தில் குழந்தையை நாலு அடி வைத்தார். குழந்தை கையிலிருந்த மரப்பாச்சி பூனையைத் தாக்கியது. பூனை, தட்டு முட்டுச் சாமான்களை உருட்டி உடைத்துக் கொண்டு ஓடியது. சுருங்கச் சொன்னால் அந்த வீட்டில் பூகம்பம் நடந்துகொண்டிருந்தது. அவ்வளவுதான்.

விஷயம் பிரமாதம் ஒன்றுமில்லை. இன்னும் காப்பி சாப்பிடவில்லை அவர்கள். போன என்னை என் நண்பன் "வா" என்றுகூடச் சொல்லாமல் இருந்தான். அவன் முகத்தைப் பார்க்கச் சகிக்க வில்லை. நான் அவன் முகபாவத்தை ரஸித்துக் கொண்டிருந்த சமயம் என் காலை வெடுக்கென்று

பூனை கௌவியது. கீழே குனிந்து பார்த்தேன். பெருவிரலைக் கடித்துவிட்டு ஓடியது!

"என்னப்பா! உன் பூனை இப்படிச் செய்து விட்டது?" என்று சாந்தமாகக் கேட்டேன். சாந்தத்தின் காரணம் நான் நாலணு காங்கிரஸ் மெம்பர் — அதாவது அஹிம்சையின் அடிமை என்பதுதான்!

"நல்லவேளை, அதோடு போச்சே! சமயா சமயத்தில் ஆளுக்கே மோசம் வந்துவிடும்!" என்ருன்.

"என்னடா அதற்கு பைத்தியம் கியித்தியம் பிடித்திருக்கிறதா?"

"ஆமாம்; பைத்தியம். நாங்களாவது ஐந்து நிமிஷம் பொறுத்துக் கொள்வோம். அதனுல் ஒரு விளுடி கூடப் பொறுக்க முடியாது?"

"எதற்குப் பொறுக்க முடியாது?"

"காப்பி குடிக்க ஒரு நிமிஷம் அதிகமாய் விட்டால் இந்த மாதிரி ஆரம்பித்துவிடும்" என்ருன்.

"அட பாவி! காப்பி உன்னேடு, உன் குடும்பத்தோடு நிற்கக்கூடாதா? சிவ சிவா! பூனைக்குக்கூட காப்பிப் பைத்தியம் பிடித்து

விட்டால் கேவலம் மனிதன் என்னவெல்லாம் செய்யமாட்டான்! ஒருவேளை என்னைக் கடித்தாலும் கடித்துவிடுவாய்" என்று தலைகால் தெறிக்க ஓட்டம் பிடித்தேன். சிறிது தூரம் ஓடியதும், என் தலை சுழல ஆரம்பித்தது.

இந்த நல்லபழக்கம் இல்லாத ஜன்மங்கள் யார்தான் இருக்கிறார்கள்? நாளைச் சாகும் சுப்பம்மா ஆச்சி முதல், நேற்று பிறந்த 'ராஜா' வரை, எல்லோரும் காப்பியை அறிவார்கள். ஒருவேளை, இறந்துபோனவர்களும் பிறக்காதவர்களுமே இப்பழக்கம் இல்லாதவர்களாக இருக்கலாம்.

இப்படி நமது உயிரோடு ஒட்டிக்கொள்கிறதே இந்தக் காப்பி, இதை எப்படித் தயாரிப்பது என்பது நம்மில் கொஞ்சம் பேருக்குத்தான் தெரியும். 'அந்த கொஞ்சப்பேரில்' என்னையும் சேர்த்துவிடாதீர்கள். என் ஆயுளில் நான் ஒரே தடவை காப்பிபோட்டிருக்கிறேன். என் காப்பியைப்பற்றி நான் மதிப்புரை கொடுத்தால் என்னைப்பற்றி கண்ணியக் குறைவாக நினைப்பீர்கள். என் நண்பரின் மதிப்புரையை இங்கு 'காபி' செய்கிறேன்.

"உன்னைப்போல், என் மனைவி ஒருதடவை காப்பி போட்டுவிட்டால், அவள் இறப்பதற்காக நான் வருந்தப்போவதில்லை. அந்தக்காலத்தை ஆவலுடன் உன்காப்பி குடித்ததிலிருந்து எதிர்பார்த்து வருகிறேன்."

இது பரவாயில்லே. மற்றெரு நண்பனின் மதிப்புரை: "வெகுகாலமாக என் மனேவி கஷ்டப்பட்டாள். அவளது வியாதியால் லாபம் அடைந்த டாக்டர்கள் இருநூறுபேர். அவர்கள் பணக்காரர்கள் ஆனதைத்தவிர வியாதி சாக வில்லே. அன்று உமது வீட்டில் என் மனேவி ஒருமடக்கு காப்பிக்குமேல் குடிக்கவில்லே. அப்படியிருந்தும் வியாதி குணமாகிவிட்டது. சென்ற சிலமாதங்களாக 'வலிப்பு' வரவில்லே. அப்படியே வந்தாலும், உமது காப்பி இருக்கவே இருக்கிறது!" காப்பி போடுவதில் எனக்குள்ள திறமையை நிரூபிக்க இந்த இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுமே போதும் என்று நம்புகிறேன்.

காப்பி போடுவது, குடிப்பதைப் போன்று எளிதான காரியமன்று. மறுமலர்ச்சி தாண்டவம் புரியும் இந்தக்காலத்தில், அவரை விதை போட்டு அவரைச்செடி முளேக்கவைப்பதுகூட கலேதான். ஆனுல் காப்பிப்பொடி, சர்க்கரை, பால், மற்றும் உபகரணங்கள் உதவியினுல், நம்மால் காப்பி போடமுடியுமென்று, மீசையை முறுக்கி, மார்தட்டிக் கொண்டு முன்வர முடியுமா? அப்படியே வந்தாலும் நாம் போட்ட காப்பியை நாம் குடிக்கச் சம்மதிப்போமா? ஒரு நாளும் மாட்டோம்.

காப்பி தயாரிப்பது ஒருகலே. காப்பி போடுவது, கதை-கட்டுரை எழுதுவதுபோல என்று சிலர் நினேக்கலாம். வாஸ்தவம், ஒப்புக்கொள்ளு

கிறேன். ஆனால், முக்கியமாகத் தெரியவேண்டியது ‘டெக்னிக்’. இது தெரியாவிட்டால் அவ்வளவும் வீண். எழுதுவதில் ‘டெக்னிக்’ கொஞ்சம் முன்பின் இருந்தால் பாதகமில்லை. ஆனால் காப்பிபோடும் ‘டெக்னிக்’ தெரியாவிட்டாலோ பிரயோசனம் இல்லை.

இப்பொழுது பாருங்களேன். எதிர் வீட்டிலிருந்து காப்பிக்கொட்டை வறுக்கும் வாஸனை ஜமாய்க்கிறது. மேல வீட்டிலிருந்து டிகாக்ஷன் மணம் கிளம்புகிறது. அடுத்தவீட்டில் காப்பிப் பொடியின் கந்தம், காந்தம்போல் என்னை இழுக்கிறது. கீழவீட்டில் காப்பி கொதிக்கவைக்கும் வாஸனை என் மூக்கைத் துளைக்கிறது. நாலு வீட்டுக்கு அப்பால் ‘காப்பிகொட்டை இல்லை’ என்று மனைவி சொல்வதும், அதிலிருந்து தாம்பத்ய கலகம் ஏற்படுவதும் தெரியவருகிறது. ஆனால் இந்தக் கோபத்தின் முடிவு காப்பி குடித்ததும் நின்றுவிடுகிறது. ஒருவேளை, காப்பி இல்லாத வீடுகள் சுவர்க்கத்தில் இல்லாமல் போகலாம். (சுவர்க்கத்தில்தான் நமக்கு வேண்டிய பொருள்கள் இருக்காதே!) பூலோகத்திலோ நினைத்த மாத்திரத்தில் காப்பி போட்டு சாப்பிடவேண்டியதற்குரிய சாமான்களைத் தயாராய் வைத்திருக்கிறோம்.

காப்பி போடுகிற விதம் எப்படி என்பது சிதம்பர ரகசியம். இப்படித்தான் போடவேண்டு

மென்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. சொல்லி விட்டால் எல்லோரும் இலகுவாய்த் தயாரித்துவிடலாம். ஏன் சொல்லமுடியாது என்ருல், அதுதான் சுவாரஸ்யம். உதாரணமாகக் கவிஞனிடம் போய் 'நீ எப்படிப் பாடுஞய்? எப்படி இருந்தால் பாடமுடியும்?' என்று கேட்டால் 'பெப்பே, பெப்பே' என்று விழிப்பான். ஏன்? அதைச் சொல்ல முடியாது. காரணம், கவிபாடுவது ஒரு கலை. இதேபோல் காப்பி போடுவதையும் சொல்லமுடியாமற் போவதின் காரணம், அது கலையின் சிகரமாய் இருப்பதுதான். ஒருசிலர் சொல்ல முற்பட்டாலும், ஒருவர் சொல்லியதைப்போல் மற்றவர்கள் சொல்லமாட்டார்கள். சிலர் எனக்குச் சொல்லியதைப் பாருங்கள் :—

"கொதிக்கும் தண்ணீரை காப்பிப் பொடியில் கொட்டவேண்டும்."

—மேலவீட்டு அம்மாள்.

"காபி பௌடரை 'கோல்டு வாட'ரில் நன்ருக ஊறவைத்து பில்டர் செய்து, தண்ணீரை ஹீட் செய்து, டிகாக்ஷன் இறக்கவேண்டும்."

—லக்ஷ்மி, எஸ். எஸ். எல். சி.

"ஜலம் கொதிக்கிறதைச் சரியாக 55 நிமிஷம் $7\frac{3}{4}$ செக்கண்டு பார்த்திருந்து தூளைத் தூவித் தண்ணீரை வடிகட்டவேண்டும்."

—டாக்டர் ஸம்ஸாரம்.

இந்த மூன்று முறைமட்டுமல்ல; இன்னும் மூவாயிரம் விதங்கள் இருக்கின்றன. முதலில் இவற்றை முயன்று பாருங்கள். ஆனால், அப்படிப் போடும் காப்பியைக் குடித்துப் பாருங்கள் என்று சொல்ல அவ்வளவுக்குத் தைரியம் எனக்கில்லை.

காப்பி போடுவதைப் பற்றி எனக்கு எழுத மட்டுந்தான் தெரியுமென்று நீங்கள் தப்பபிப் பிராயம் கொள்ளாமலிருப்பதற்காக, எனக்கு காப்பி குடிக்கவும் தெரியும் என்பதை ஞாபகப் படுத்த வேண்டியதாகிறது. என்னிடம் துப்பாக்கியையும் காப்பியையும் காட்டி, 'உயிர் தேவையா? காப்பி தேவையா?' என்று கேட்டால், சந்தேகமில்லாமல் காப்பிதான் கேட்பேன்.

என்ன, ஐயா, உங்களைப்போல்தானே நானும்?

சட்டைப் பைகள்

வண்ணான் வந்துவிட்டால், எனக்கு ஒரே பயம். சட்டைப் பைகளில் உள்ள சாமான்களைத் துழாவ ஆரம்பித்தால், பூகம்பம் வந்தவீடு மாதிரி ஆக்கி விடுவேன். என் சட்டைப்பைகள், கணக்கு வழக்கு கிடையாது. கோட்டுகளில் உள்ள பைகள், தேனீக் கூண்டுமாதிரி அவ்வளவு அதிகம். இப்படி இருக்கிற பைகளில், நான் கைவிட்டால், பொடிமட்டைகள், கதை கட்டுரைகள், சீட்டுக் கட்டுகள், இங்ஙனமாகப் புறப்படும்.

மகுடியின் நாதத்தைக்கேட்டு பாம்பு வெளி வரும். வண்ணானைக் கண்டதும் அற்புதங்கள் வெளிவரும். கடிதங்கள்-நான் எழுதித் தபாலில் போடவிட்டுப் போனவை—வந்த தபால்களுக்குப் பதில் எழுதவேண்டுமென வைத்திருப்பவை —இப்படி அனந்தம். ஒவ்வொரு சாமானுக்கும் பைகளைப் பிரித்துவைத்திருக்கிறேன். கடிகாரம், திறவுகோல்—ஆபீஸ் ரகம் வேறு, வீட்டுச்சாவி வேறு, என இரு பைகள். கைக்குட்டை பஸ் டிக்கெட்டுக்கு என ஒவ்வொருபை. மூக்குக் கண்ணாடிகள்—படிக்க ஒன்று; பார்க்க ஒன்று

என இருவிதம்—இப்படி எது எதற்கெல்லாமோ என் சட்டையில் பைகள் உண்டு.

யுத்தத்தினால் என் பைகள் இன்னும் பெருக்கம் அடைந்தன. ரேஷன் கார்டுகள் என்ற வகையில் ஏழுபைகள் அதிகப்பட்டன. அரிசி, ம. எண்ணெய், சர்க்கரை (2 கார்டுகள்) விறகு, விருந்தினர் கார்டு, உளுந்து இப்படிப் பல கார்டுகள்.

இப்படியெல்லாம் ஒவ்வொரு சாமான்களுக்கென்றும் தனித் தனியான பைகள் இருந்தும் எப்படியோ சாமான்கள் தவறிப்போகும். கடலில் பெருங்காயம் கரைப்பதைப்போல, பைகளில் தவறிவிட்ட சாமான்களைத் தேடி எடுப்பது மகா கஷ்டம். வித்தைக்காரன் தோப்பிக்குள்ளிருந்து கோழியும் முட்டையும் மிட்டாயும் எடுப்பது போல, நான் திறவுகோல் (ஆபீஸ்) பையிலிருந்து பொடிமட்டையும், பொடிமட்டைப் பையிலிருந்து கைக்குட்டையும், கைக்குட்டைக்குண்டான பைகளிலிருந்து, 'பில்' களும் எடுப்பேன்!

சுருங்கச் சொன்னால், எந்தெந்தப் பையிலும் எது எதுவும் அகப்படும். இவை, எனது ஒழுங்கற்ற வாழ்வு முறையை விளம்பரம் செய்கிறன என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

பொதுவாக எனக்கு நேரம் போகவில்லை, சுவாரஸ்யமாகப் பொழுது போக்க வேண்டுமென்று நினைத்தால் பை பரிசோதனையில்

இறங்கிவிடுவேன். இதற்காக அடுத்தவன் பையில் கை போடமாட்டேன். அது வக்கீல்கள் செயல் அல்லவா?

ஒரு சமயம் நான் ரயிலில் போய்க் கொண்டிருந்தபோது 'டிக்கெட்' பரிசோதகன் வந்து சேர்ந்தான். ரயிலில் பாதிப்பேர் பிச்சைக்காரர்கள்; மற்றப் பாதிப்பேர் டிக்கட் பரிசோதகர்கள். இந்த இரு சாராருக்குமாக நான் பைகளை அடிக்கடி துழாவியதால், ஊழிக்காலத்தில் கடல் படு பொருள்கள் வெளி வருவது போல எவ்வளவோ வந்து குவிந்தன. பெரிய காட்சிச் சாலையே என் பைக்குள் இருந்தது. இரண்டொரு சுண்டெலி, ஒரு வௌவால் குஞ்சு (குட்டியா?) கூட இருந்தன. ஆனால் பரிசோதகர்கள் அதிர்ஷ்டமோ, பிச்சைக் காரர்கள் துரதிர்ஷ்டமோ என் பைகள் 63லும் பணமும் டிக்கட்டும் அகப்படவே இல்லை.

ஆனால்!

அகப்பட்ட வஸ்துக்கள், காந்திமதி காலையில் காணோமென்ற பெட்டிச் சாவி, குழந்தை கிலுக்கு, இரண்டு பாட்டில் மாத்திரைகள், (1943ல் எனக்கு கப ஜுரத்திற்குவாங்கியவை) 1930ல் வாங்கப்பட்ட ஒரு பிளாட் பாரம் டிக்கெட்! செல்லாத மூன்று அரையணுக்கள்-(தோசைக்கல் மாதிரி இருக்குமே, அவை) இன்னோரன்ன பிற. ஆனால் டிக்கெட், பணம் இவையெல்லாம் வண்ணானுக்குப் போடும்போது அவஸ்யம்

அகப்பட்டே தீரும். அல்லது என்னுடைய மேல் உத்யோகஸ்தன் நெருப்புக்குச்சி கேட்கும் போது கட்டாயம் நெருப்புக்குச்சி தவிர, டிக்கெட்டுகள் காலணக்கள், டார்ச் லைட், பேனக்கத்தி, க்ஷவர பிளேடுகள் அகப்பட்டே தீரும்.

இவ்வளவு கஷ்டங்களும் துன்பமும் தருகிற பைகளை வைத்துக் கொள்ளுவானேன்? நான் கேட்கிறேன், பெண்ணைப் பேயென்றும், விஷமென்றும், பாம்பென்றும், நெருப்பென்றும் என்னவெல்லாமோ சொல்லுகிறார்கள். அப்படியிருந்தும் கலியாணங்கள் நடக்கத்தானே செய்கின்றன.

அவை தவிர்க்க முடியாத தொல்லைகள், பெண்ணின்றி வாழவும் முடியாது என்ற உண்மையைப்போல, பைகள் என் விஷயத்தில் இருக்கின்றன.

சட்டைப்பைகள் விஷயத்தில் பெண்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களைப்பார்த்துப் பொறாமைப்படும் ஆண் வர்க்கம், சட்டைப் பைகள் விஷயத்தில் பெருமையுடன் தலைநிமிர்ந்து நடக்கலாம்! மற்றவர்கள் எப்படியோ! நான் அப்படித்தான் நடக்கிறேன்; நடந்து வருகிறேன்.

பா...லா...டை...டை

“இந்தியாவில் விற்பனை செய்யப்படும் பாலை லண்டனில் ஆராய்ச்சி செய்தபோது அது லண்டன் நகர சாக்கடைத் தண்ணீரைவிட மட்டமாக இருக்கிறது. இதையும் விற்பனை செய்கிறார்களே!” என்று பரிசோதனைக்காரர் வெளியிட்ட அறிக்கையைக் கவனித்து ஹிந்து தலையங்கத்தில் சில யோசனைகளும் எழுதிற்று.

“லண்டன் நகரத்து சாக்கடைத் தண்ணீர், இந்தியாவில் விற்கும் பாலைவிட உயர்வாக இருப்பதால் தயவுசெய்து சாக்கடைத் தண்ணீரைப் புட்டிகளில் அடைத்துவிற்க வந்துவிட வேண்டாம்” என்று இன்னொரு பத்திரிகை எச்சரிக்கைக் கொடுத்தது.

பாலை ஆராயும் திறமையும், அதை விற்பனை செய்யும் சாமர்த்தியமும் எனக்குக் கிடையாது. வாங்கும் சாமர்த்தியம் மட்டுமே எனக்குப் பிறப்புரிமை.

எனக்குப் பால், பாலாடை (பால் நிறம் கொண்ட ஆடை எனப் பொருள் கொள்க) பால் வடியும் முகம் மூன்றும் பிடிக்கும். பால்க்காரி

பாலை முகத்தில் வடித்துக்கொண்டு வந்தால், அடடா, அதுதான் பால் வடியும் முகம்! பால்க் காரன் எனக்குக் கர்ணன். பூலோக பிர்மா. ஆனால் பிர்மஹத்தி மாதிரி காலை, நாலு மணிக் குள்ளாக வந்து, அந்த சுபயோக சுபநேரத்தில் எழுப்பவேண்டுமா ?

பாலின் நறுஞ்சுவை, தீஞ்சுவை, மோர், தயிர், நெய் ஒன்றிலும் கிடையாது. அன்பும், முகமலர்ச்சியும் ததும்ப தவிர்க்கரங்கள் பாலேந்தி கட்டிலுக்குவரும் அந்த இன்ப நினைவு!......அது மட்டுந்தானா? '**பாலோ ஓ பாலூ...ஊ...ஊ......**' என்ற ஊகார ஒற்றே போதும். காய்கறி, பழம், கீரை விற்கும் வியாபாரிகள் இந்த ஊகாரம் போடக் காணோம். என் வீட்டுக்குக் கூடைக் காறிகள் வந்து கதவைத் தட்டுவார்கள். பால் காரன் '**பாலூ ஊ ஊ**' என்றால் போதும். கதவு தட்டவேண்டாம். அவன் எப்பொழுது வரு வானோ என்று தவம் கிடக்கிறோம்.

இருந்தாலும், பஞ்ச பஞ்ச உஷத் காலத்தில் என் தூக்கத்திற்கு எமனாக வந்து அப்படி உரத்துக் கத்தவேண்டுமா? ஒரு வேளை பாலின் குணகுணங்களைத் தெரிந்த பெருமிதத்தால் அப் படி கத்துகிறானோ? கூனூர் விளம்பரத்தைப் படித்தவன்போல் ஏன் கூப்பாடு போடுகிறான்.

"பால், புஷ்டி நிறைந்த ஆகாரம். புரதச்சத்து, கொழுப்பு, வைடமின்கள், கார்போஹைட்ரேட்,

இரும்பு, கந்தகம், மெக்னீஷியம், பொட்டாஸியம், ஸோடியம், பித்தளை, தாமிரம், இன்னும் சிறிதளவில் மாங்கினிஸ்......"

இப்படி எவ்வளவோ சத்துக்கள் இருப்பதாக நான் படித்திருக்கிறேன். பால் ஒரு சுரங்க பானம்! அதுமட்டுமில்லை. அதற்குள் இன்னும் எத்தனையோ பாற்கடல்கள் கிடப்பதாக ஒரு கவி சொன்னார்.

தெருவில் பாலை விலை பகர்
சிற்றிடைச்சியரே
அருட்பாலோ? பொருட்பாலோ?
காமப் பாலோ?
ஆழிதனைக் கடைந் தெடுத்த
அமுதப் பாலோ?
இருப்பாலே மனம்படைத்தீர்
நில்லீர்; சொல்லீர்;
எந்தப்பால் விற்க வந்தீர்
இயம்புவீரே!

விஞ்ஞானிகள் அதை ஒரு சுரங்க பானம என்றார்கள். ஆனால் தத்துவாசிரியர்கள், முப்பாலோடு திருப்பாற் கடலும் சேர்ந்தது என்றார்கள்.

குணத்திற்கு உவமை பால். குடம், விளக்கு இவைகளை நிறமாக விளக்கிவிட்டால் பால்போல் விளக்கிவிட்டதாகப் பெண்கள் பெருமையடிப்பார்கள். பால் என்றால் தூய்மையின் துளி, என்றாகிவிட்டது.

இந்தப் பெருமைகளை அறிந்துதான் அப்படிக் கத்துகிருளே? சிறுபிள்ளை முதலே (இவர்கள்) என் தூக்கத்திற்கு விரோதிகள். அவன் கர்ணன்தான்; ஆனால் நான் கும்பகர்ணன் ஆயிற்றே! வீட்டில் பால்க்காரன் வராவிட்டால் எனக்குச் சனிபகவான் தரிசனம் கிட்டும். எல்லோர் மூஞ்சியிலும் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். "சின்னப்பயலை அனுப்புங்கள்" என்பார்கள்.

நான் எழுந்து ஓடவேண்டும். எங்கேயிருந்தாலும் காதைப் பிடித்திழுத்துவரும்படி எனக்கு ஆக்ஞை கொடுப்பார்கள்.

நான் தெருத்தெருவாகச் சுற்றுவேன். இரண்டு முழக் கயிற்றை மாலையாக மடித்துப் போட்டுக்கொண்டு என்னையும் லக்ஷ்யம் செய்யாமல் சுற்றுவான். நான் அவன் காதை எப்படிப் பிடிக்கிறதாம்? அவன் ஓட்டமும் நடையும், மாட்டுக்குத்தான் கட்டுபிடியாகும்; என்னுல் பின்பற்ற முடியாது. வீதி வலம் வருவதற்குள், மூடுக்குகள் வழியாக அந்தர்த்தியானம் ஆகிவிடுவான். அன்று இன்றுவென்று நான் வீடு வரும்போது எல்லோரும் காப்பி சாப்பிட்டுவிட்டு, எனக்கு ஆறி அலந்த காப்பியை மூடி வைத்திருப்பார்கள்! இதனுல் பால்க்காரனைத் தேடிப்போக மறுத்த காலம் சிறுவயதில் இருந்தது. இப்போது என்னடா என்ருல், தூக்கத்திற்கு எமனுய் வந்து நிற்கிருன்.

அவன் ராத்திரி பூராவும் தூங்கியிருக்கலாம். எல்லோரும் ஒரே நேரத்தில் தூங்கவேண்டு மென்ற சட்டம் அமுலுக்கு வரவில்லை. தூக்கம் அவனவன் இஷ்டத்திற்குள்ளான விளையாட்டு. நான் பகலில் தூங்குகிறது இல்லை; சும்மா ஜட்கா வண்டிக் குதிரைமாதிரி புரளுகிறது. (படுக்கை யில்தான் !) இரவில் அதிகாலையில்தான் இமை யோடு இமை பசை அப்பிய மாதிரி கண்ணைச் சொக்கும். அந்த வேளை வந்து அவன் கதறு கிறான்.

நான் கண்ணை மூடுகிறது அவனுக்குத் தெரி யுமோ, அல்லது அவன் மாட்டிற்குத் தெரி யுமோ? 'அம்மா !' என்ற ஹுங்கார சப்தம்; அதோடு ரீங்கார சுருதி சேர்க்கும் கன்றுக்குட்டி. 'பாலூ...ஊ...ஊ' என்று பால்காரன் குரல். அவனுக்கு முன்னால் நாலைந்து தகரவாளிகள்; அதோடு அளவுப் படிகளின் லொட லொட சப் தம். இவ்வளவும் எங்கே? என் படுக்கையறை ஜன்னல்ப் பக்கத்தில் நடக்கிற இடியோசைகள். நாலு ஐந்து வாளிகளும், இரண்டு உழக்கும் சேர்ந்து வானமும் வையமும் சேர்ந்து நடுங்கும் படி எப்படித்தான் சப்தஜாலம் செய்யுமோ? இந்த சப்த ஜாலங்கள் பால்க்காரன் வாளிக்குத் தான் சொந்தம். போதாக்குறைக்கு '**தீன கருணா கரனே**' '**கோழியைப் பாடும் வாயால்**' என்ற பாட் டுக்கள் வேறு. சமயா சமயங்களில் நகைச்சுவை அரசனாகக்கூட ஆகிவிடுவான் !

அவனுடைய ஊர்வம்பு, சகோதரத் தொழிலாளியின் பாசம் எல்லாம் என் செவிட்டில் அறைகிறமாதிரி கேட்கும். இரண்டு பேரும் உத்சாகமாக விவாதிப்பார்கள். சகோதரத் தொழிலாளி, பெண்பாலாக இருந்துவிட்டால் பேச்சு முறையே ரஞ்சகமாக இருக்கும். தேனில் பால் கலந்த மாதிரிதான்! உல்லாஸமும், ஹாஸ்யச் சல்லாபமும் அடாடா! தகரவாளிகள் மத்தளம்கொட்ட, மாடு கன்றுகள் சங்கு ஊத......... கணுக்காணுவார்கள். ஆம், என் படுக்கையறை ஜன்னல்ப் பக்கத்தில் இது நித்திய நாடகம்.

அவனைக் கண்டிக்க நினைத்தது உண்டு; ஆனால் சொன்னதில்லை. அதற்குப் பதிலாக என்னையே திட்டிக்கொள்வேன். என்னால் அந்த வேளையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியாது; எழுந்தாலும் கொட்டுகிற பனி, மழை பாராமல் நடக்க விரும்புவேனோ? நான் நடந் நடந்தாலும், என் நாவு 'தீன கருணாகரனே' பாட ஒப்புக்கொள்ளாது! வாய்விட்டு விசில்கூட அடிக்க முடியாது. தினந்தினம் இந்தக் காட்சி என் காதில் விழுகிறது. காலைத் தூக்கத்தைத் துறந்தவன் பெரிய தியாகி; மனிதருள் மாணிக்கம் என்று வணங்குகிறேன்.

ஆனால் ஒரே ஒரு குறை. சுகாதார நிபுணர்கள் பாலின் சத்தைக் கண்டுபிடித்ததுபோல, சப்தம் போடாத பால் வாளிகள், தூக்குகள், கண்டுபிடித்துக் கொடுப்பார்களா?

யுத்தம் முடிந்துவிட்டது. வருங்காலத்தில் செய்யப்போகும் 'உத்தாரண வேலைகளில் இது தும் ஒன்ருக இருக்கட்டும். ஆனல், அவர்கள் பசும்பாலை பசுவிளிடமிருந்து கறக்காமல், தாரெண்ணெய்யிலிருந்தோ, அல்லது கண்டங் கத்திரிச் செடியிலிருந்தோ அல்லவா கறந்து விடுவார்கள்!

குறிப்பு: நான் சொன்ன பால்காரன் பக்கத்து வீட்டுக்கு வருகிற பேர்வழி; என் வீட்டு ஜன்னலில் மாட்டைக் கட்டிக் கறக்கிறவன். எங்கள் வீட்டுக்கு வருகிறவன் காலை பத்து மணிக்குத்தான் வருவான். அவன் கதையே வேறு!

காக்காய்

என் கவனத்திற்கு வருமுன்பே காக்காயைப் பல புலவர்கள், ஒருகண் வைத்துவிட்டார்கள். புலவர் ஒருவர் பெயரே **காக்கை பாடினியார்.** காக்கையின் நிறம் வெள்ளையன்று, ஹிமாசலத்தில் அதன் நிறம் பசும் பொன்னிறம் என்பதை,

> ....பனிமால் இமயப்
> பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும்
> பொன் னிறமாய் இருக்கும்

என்று பாடினார் அமிதசாகரர்.

காக்காய் இல்லாவிட்டால், காவேரி ஸ்நானம் செய்யமுடியுமா ? தஞ்சை ஜில்லா **நெற்களஞ்சியம்** எனப் பெயர் பெறவும் முடியாது. அகத்திய முனிவரை வஞ்சித்து சிவகுமாரன் காக்காய் ரூபமாக கமண்டலத்தைக் கவிழ்த்தான் ! காவேரிக் கரையிலுள்ளோர், காக்காய்க்கு நன்றி செலுத்த வேண்டும். நானோ பொருநைக் கரைவாசி ; காக்கையின் பெருமை விளங்காதுதான்.

பொல்லாத்தனம் வாய்ந்தது என்பதை ராமபாணம் பாய்ந்தது மூலம் உணர்கிறேன். புரா

3

ணத்தில் இடம் பெற்ற இந்த ஜந்து எனக்குச் செய்த தொண்டு ஒன்றே ஒன்று. தன்னுடைய வஞ்சனையை எனக்கு வழங்காது, தனது நிறத்தை மட்டும் வஞ்சனையில்லாது வழங்கி விட்டது.

காக்கை குருவி எங்கள் சாதி என்ற பாரதி யாரும் என்னைப் போல கருப்புத்தானே என்னமோ? காக்கைச்சிறகின் நந்தலாலாக் களில் நானும் ஒருவன்! என்னிடம், நான் முன்னுக்கு வராததைப்பற்றி நண்பர்கள் (காக்காய் பிடிப்பவர்கள்) பலர் குறைபட்டுக் கொள்ளுவார்கள். அதற்குக் காரணம் சொல்லுகிறேன்.

கறுப்பும் அவலட்சணமும் சேர்ந்த இந்த ஜந்துக்கள் கழுத்தில் மட்டும் சாம்பல் வர்ணம் இருக்கிறது. இது, அவலட்சணத்திற்கு அவலட்சணம் செய்வதுபோல ஆகும். காகத்தின் உருவமோ, பெரிதும் அல்லாத சிறிதும் அல்லாத அவலட்சணப் பிம்பம். குருவியைப்போல் சிறிதாக இருந்தாலும், பருந்தைப்போல் பெரிதாக இருந்தாலும் பறக்கிறதிலே அழகும் வேகமும் காணமுடியும். இத்தனை விகாரங்களும் நிறைந்த இதனிடம் நம்முடைய தலைவிதியும், விருந்தாளிகளும் சிக்கிக்கொள்ளுகிறார்கள்.

எதிரே வந்தால்-வலமாக வந்தால்-அதிர்ஷ்டமாம். அட, காக்கையே! உன் குரலில்தான் என்ன கோரம்! காக்கை கரைகிற தாம். இதற்கு

மரபுச்சொல் வேறு கேடு. விருந்தாளிகள் ரயிலோ மோட்டாரோ ஏறியதும், எப்படித் தான் ஞானேதயம் ஏற்பட்டு, பந்துக்கள் வீட்டின் கூரையில் உட்காருமோ, இது காகாசுரனுக்குத்தான் வெளிச்சம். இது, விருந்தாளிகள் வரவை அறிவிக்கிறதோடு எமலோகத்தில் பாபிகள் கண்ணைப் பிடுங்குமாம். எமனுடைய கையாளாம்—கண்ணைப் பிடுங்க. ஒருவேளை காக்காய் பிடிப்பவர்களின் கண்ணுக இருக்கலாமோ ?

நான் சிறு வயதில் இந்தக் காக்கையைப் பாடப் புத்தகத்தில் பார்த்தேன். அப்போது எனக்கு ரொம்ப ஆச்சரியம். எவனே காக்கையைப் பிடித்து விட்டானே என்று பெருமிதம். வயசு ஆக ஆக, காக்காய் பிடிக்கமுடியாது, அது ஒரு லளித கலை என்று சொன்னுர்கள். புஸ்தகக் காக்காய் வேறு; வாழ்க்கைக் காக்காய்கள் வேறு. காக்காய்கள் என் வாழ்வையும் அரிசியையும் (விருந்தினரை வரவழைத்துக்) கெடுத்தனவோ என்னவோ, காக்காய் பிடிப்பவர்கள் மட்டும் என் வாழ்வையும் அரிசியையும் கெடுக்கிருர்கள்.

எனக்குச் சம்பளம் மேலே உயரவொட்டாமல், சந்தைக்கடை வடையைக் கொத்திய காக்கை போல, காக்காய் பிடிக்கிறவன் கொத்திக் கொள்ளுகிருன். அரை கெஜம் துணியை எனக்கு முன்னதாக இன்னொருவன் அமுத்தி விடுகிருன். நல்ல அரிசி எனக்குக் கிடைக்காத

படிச் செய்கிறது காக்காய் அன்று; காக்காய் பிடிக்கிற பயல்கள். பஞ்ச தந்திரம் முதலான கதைகளில் காக்கையை வஞ்சனையின் உருவக மாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். கதைகள் வாழ்க்கையின் பிரதி பிம்பம் என்பதைக் காக் காய்க் கதைகள் மூலமாகத்தான் அறிகிறேன்.

காகம், இலக்கியப் பலகணியின் கதவு, தாழ்ப்பாள், கொண்டி எல்லாம். காக்காயிடம் வஞ்சனை மட்டுமில்லை; வேறு நல்ல குணங்களும் இருக்கின்றன. அவை உண்டு காட்டிகள். ஆகா ரத்தில் விஷமோ, குற்றமோ இருக்கிறதா எனப் பார்க்க, நாம் உண்ணுமுன் அவற்றுக்குச் சமர்ப் பித்து விடுகிறோம். இது நம்முடைய வஞ்சனையி லிருந்து பிறந்த பழக்கம். காகத்தின் மீது பிறந்த இரக்கம் அல்ல. நமது உணவைக் காகம் உண்ட பின்பு நாம் உண்டால், சாதத்தில் விஷமில்லை யென அறிகிறோம். அது உண்ண மறுத்தாலோ, இறந்தாலோ நாம் சாப்பிடாது இருந்து விடலாம்.

காக்கை, நம்போன்ற ஏழைகளுக்கு 'உண்டு காட்டிகள்.' ராஜாக்களுக்கு மலிதக் காக்கைகள் உண்டு. ராஜாவோடு சமபந்தியில் உட்காரு வார்கள். அவர்களை 'உண்டு காட்டிகள் என்பது' மரபு. 'உண்டு காட்டி'கள் உண்ட பின்பு, ராஜா உண்பாராம். ராஜாவுக்குத் தன் சாப் பாட்டில் அவ்வளவு நம்பிக்கை! யாரேனும் விஷமிடத் துணிந்தால், 'உண்டு காட்டி'கள்

சாவார்கள் அல்லவா? நமக்கெல்லாம் 'உண்டு காட்டி'கள் காக்கைகள்தான். ஆதியில், 'உண்டு காட்டி'கள் ராஜாவைக் காக்காய் பிடித்தார்கள். அன்று ஏற்பட்ட பழக்கம் இன்றும் நிலவுகிறது.

எனக்கு வீட்டிலும் காக்காய் பிடிக்கத் தெரியாது, வெளியிலும் தெரியாது. வீட்டில், காக்காய் (என்னையும், காகங்களையும்) பிடிக்கிற வள் காந்திமதி. ஆனால், ரேஷன் வந்த பின்பு காக்காய்களுக்குச் சாதம் சமர்ப்பணம் செய்வதை விட்டு விட்டாள்.

காரணம், காக்காய்க்குச் சமர்ப்பணம் பண்ணுகிற அளவுக்குத்தானே ரேஷன் அரிசியில் சாதம் இருக்கிறது என்கிறாள். காகம் சாகிற துக்குப் பதில் நாங்கள் (சாதம் இல்லாமலே) சாக நேரிடுவதால், அந்த வழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தாள். மேலும், நம்மைப்போல அவைகளுக்கு ரேஷன் அரிசி ஒத்துக் கொள்ளு மோ என்னவோ? ஒரு சமயம் கோதுமையும் அரிசியும் கலந்து சமைத்தாள் காந்திமதி. 'கா... கா...கா...' என்றாள். கா...கா...கா வந்தது. அந்தக் காக்கை அரிசிச் சாதத்தைமட்டும் தின்று விட்டுக் கோதுமைச் சாதத்தை அப்படியே விட்டுச் சென்றது. அது ஒரு **அன்னக் காக்கை.** அன்னத்தைப் போலவே, அரிசியைப் புசித்து விட்டுக் கோதுமையை விட்டுவிட்டது. அடடா, அன்னக் காக்கையே காக்கை!

என் குரலைக் கேட்டாலே காக்கைகள் வருகிறதில்லை. ஆனால், காந்திமதி ஒரு குரல் கொடுத்தால் போதும். ஊர்க் காக்காய்கள் எங்கள் வீட்டு முகட்டில் கூடிவிடும். 'கா...கா...காகா' என்று ககனமெங்கும் கேட்கும். பின்னர் எதிரொலிகள் எழும். அவளுடைய குரலிலே காக்கைகள் மயங்கி விட்டனவா? அல்லது தம்மினத்தின் குரலெனத் தடுமாறி வருகின்றனவா! காந்திமதி என்ன, எந்தப் பெண்மணியும் கா...கா என்றால், காக்கைகள் வந்துவிடும். ஆண்கள் குரல் என்றால் அப்படி அப்படித்தான். வேப்பம் பழத்தைப் போலவே, பெண் குரல் மீதும் காக்கைகள் அபார மோகம் கொண்டிருக்கின்றன.

எனக்குக் காக்கையை வசீகரிக்கும் குரலும் இல்லை. காக்கையின் சுபாவமும் இல்லை. காக்காய் பிடிப்பவர்கள் என்னதான் செய்தாலும், காக்கையைப்போல் தோட்டி வேலை செய்ய முடியுமா? அது காக்கையிடமுள்ள பெருங்குணம். ஆகாயத் தோட்டி என்று சிறப்பான பெயர் பெற்ற காக்கையைப்போல், காக்காய் தாசர்களும் ஏதாவது சுத்தம் செய்கிறார்களா? இல்லை.

அதற்கு எதிரிடையாகச் சமூகத்தில் அசுத்தம் செய்கிறார்கள். இலக்கியத்தில் போலியை வளர்க்கிறார்கள். நிர்வாகத்தில் ஊழலைப் பெருக்குகிறார்கள். அரசியலில் குட்டை குழப்புகிறார்கள்.

இன்னோரன்ன அனந்தம். சுருங்கச் சொன்னால், கறுப்புச் சந்தைக்காரர்கள் இந்தக் காக்காய் பிடிப்பவர்கள். தமது நோக்கையே ஒற்றைக் கண்ணால் பார்ப்பவர்கள். நேரடியான பார்வை கிடையாது.

ஆனால், காக்காய் பிடிக்கிறவர்கள், பிடிபடு பவர்களைவிடக் கெட்டிக்காரர்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது. எட்டாத தண்ணீரை எட்டிக் குடிக்க ஜாடிக்குள்ளே கல்லைத் தூக்கிப் போட்ட காக்கையைப்போல, பிடிபடுகிறவன் தலையில் ஒவ்வொரு கல்லை (முக ஸ்துதியை)ப் போடுவது சகஜம். காரியம் நிறைவேறும்போது பாறுங்கல்லாகப் போடுவார்கள். காகத்திற்குத் தண்ணீர் கிடைத்ததுபோல், காக்காய் தாசர் களுக்குக் காரியம் ஜயமாகும்.

என்னதான் காக்காய் தாசர்கள் கெட்டிக் காரர்களாக இருந்தாலும், குள்ள நரிகளிடம் ஏமாந்து விடலாம் என்பதை "வடை—காகம்—நரிக்" கதை எடுத்துச் சொல்லுகிறது. காக்காய் தாசர்களுடைய முதுகுக்கு மண் காட்டக்கூடிய குள்ள நரிகள் ஒரு சில இருப்பதால்தான் உலகம் இன்றுவரை சுமாராக ஓடிக்கொண்டிருக்கிறது. அல்லாத பட்சம் உலகத்தின் ஓட்ட சாட்டமே நின்றிருக்கும்.

பிரம்மாவைவிடப் பிரம்ம சிருஷ்டியில் நான் மனம் லயிக்கிறவன். காகத்தைவிடக் காக்காய்

பிடிக்கிறவர்களிடம் என் மனம் லயிக்கிறது. ஏகலைவனைப்போல மானசீகமாக வணங்கு கிறேன். அவர்களும் காணிக்கையாக எனது கட்டை விரலை மட்டுமா பறித்துக்கொண்டார் கள்? சுண்டு விரல், பாம்பு விரல், மோதிர விரல் எல்லாவற்றையும் பிடுங்கிவிட்டார்கள்!

நான் அப்பாவியாக வாழ்வதில் என்ன ஆச்சரியம்?

ஐயா கதாசிரியர்களே !

உங்களுக்குக் காதல், விஷம், கைக்குட்டை, ஆற்றங்கரை, மனோகரமான மாலை வேளை, நிலாக் கிளம்பும் கடல், மனித ரத்தம், துப்பாக்கி, கொள்ளை, கொலை, வழிப்பறி......இன்னோரன்ன விஷயங்களிலேயே மோகம். குளிர்சுரம், ஆட்டுப்பால், ஒட்டு மாங்கண், ஸேப்டி ரேஸர் இம்மாதிரி உபயோகமுள்ள விஷயங்களை ஏன் எழுதக்கூடாது ?

ஆசிரியர்களே ! மனுஷன் வாழ்நாள் முழுவதும் காதல் உலகில் மட்டுந்தானா நடமாடுகிறான் ? வயிற்று நோவு, மண்டையிடி, மாந்தம் வந்தால் என்ன வைத்தியம் செய்து கொள்ள வேண்டும் ? மிளகாய்ச் சட்னி சாப்பிடுவதோடு போச்சா ? மிளகாய்க்கு வரும் சுருட்டை நோய் அது தெளியும் விதம் எழுதினால் எவ்வளவு நலமாக இருக்கும் ?

சோளக் கொல்லையை வர்ணிப்பதோடு உம்முடைய வேலை முடிந்துவிடும். கரிப்பூட்டை நோய், பூஞ்சக்காளான், குருத்துப்பூச்சி இதையேன் அந்தக் கதாநாயகன் கண்டுபிடித்து எங்களுக்குச் சொல்லக்கூடாது ?

அடிக்கடி உமது கதாபாத்திரங்களுக்குத் தலை வாரிவிடும் நீர்—அவர்கள் தலை கருநாகப் பாம்பு, நெளி நெளியாகவே இருக்கும், சுருண்ட ரோமங்கள் படியாமல், பிறை நெற்றியில் வந்து புரண்டுகொண்டிருக்கும்—எங்காவது ஒரு பக்கத்தில் சொந்த க்ஷவரம் செய்யும் முறை, கூந்தல் தைலம் காய்ச்சும் வழிகள் முதலான குறிப்புக்கள் கொடுக்கலாகாதா?

காப்பியும் கையுமாக கதாநாயகிகளை நிறுத்தும் நீங்கள், பாலில் டிகாக்ஷன் சேர்ப்பதா, அல்லது டிகாக்ஷனில் பால் சேர்ப்பதா, முதல்த்தரமாக எப்படி காபி போடுகிறது என்று சொன்னால் எவ்வளவு ருசியாக இருக்கும்! ரத்தக் குறியும், கைக்குட்டையும் யாருக்கு வேண்டும்?

கதையில் வாயுவேக மனோவேகமாக விடுகிற மோட்டார்களுக்கு, எல்லையேயில்லை. அது பேஷாக இருக்கிறது. கரி—மோட்டாருக்கும் பெட்ரோல்—மோட்டாருக்கும் உள்ள மூன்று முக்கிய வித்தியாசங்களை எழுதினால், படிக்கிறவன் கார் வாங்கும் சமயம், எதை வாங்கலாம் எனச் சுலபமாகச் செய்யலாமே!

எங்காவது கதையில் விருவிருப்புத் தட்டினால் இயற்கையன்னையின் மடியில் கை வைக்கிறீர்கள். கடலைக் கபளீகரம் செய்கிறீர்கள். ஆறு, சோலை, மரங்களின் கூட்டம், தோப்புத்

துரவு, இவற்றின் அழகும், குயிற்கணங்களின் இன்னேசையும், கிளிகளின் வர்ண ஜாலங்களையும் புகழப் புறப்படுகிறீர்கள். ஆனால் குயில் எப்படி காகத்தின் கூட்டிற்குள் முட்டையிடுகிறது என்று சொன்னால் ஜீவ தத்துவ நூல் அறியமுடியலாம். இதுதான் ஒரே கல்லில் இரு குருவி விழுகிற வழி.

ஹோட்டலுக்குள் உருளைக்கிழங்கு தின்று கொண்டிருந்தார்கள் என்பீர்கள். உருளைக் கிழங்கு பயிர் செய்யும்விதம், அதற்கு வருகிற கிராக்கி, அதிலுள்ள வைட்டமின்கள், இதெல்லாம் உமக்குத் தெரிந்தால் அல்லவா உம் கதாபாத்திரங்கள் பேசப்போகிறார்கள்! அத்தோடு கிராமப் புணருத்தாரணமும் செய்ய வழியிருக்கிறது?

அநேகமாக மாலை வேளையில்தான் எங்களுக்கு மந்தை மாடுகள் வருவதையும், மலைவாயில் சூரியன் பூமி தேவிக்குத் திலகம் இட்டு மறைவதையும் சொல்லுகிறீர்கள். அப்படிவந்த மாடுகளில் வாய் நோய்—கால் நோய் கண்டவை எவை, அடைப்பான், கண் நோவு, கொம்புக் காய்ச்சல், திமிர்வாதம் உள்ளவை எவை என்பதோடு சிகித்ஸை வகைகளும் சொல்லிவிட்டால் எவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கும்! பிரசாரந்தான் இலக்கியத்தின் மகரந்தமென்றும், இலக்கியத்தை வாழ்க்கைக்குப் பயனுள்ளவை ஆக்க

வேண்டுமென்றும் சொல்லுகிறுர்களே, இப்படி நவீனங்களில் எழுதினுல் ரொம்ப லாபமாக இருக்காதா?

மனக்கொதிப்பு, இதயக் குமுறல், உள்ளக் கிளர்ச்சி இதெல்லாம் வர்ணிக்கிறீர்களே, இந்த இடங்களிலே இதய பலஹீனத்திற்குச் செய்ய வேண்டிய பரிகாரங்களை எழுதினுல்? மனப் போராட்டங்களை எழுதப்புகுந்த ஆசிரியர், இன் ஷூரன்ஸ் ஏஜண்டு, பஸ் கண்டெக்டர் இவர்க ளோடு போராடும் விதங்களையும் சொன்னுல் எல்லோருக்கும் பயன் ஏற்படலாமே!

பஞ்ச தந்திரக் கதைகள் உயிர் வாழ்வதும், இலக்கிய எழுத்தாளர்கள் கதைகள் மறைவதும் கண்கூடாகப் பார்க்கிறேும். காரணம், படிப் பினையை உள்ளடக்கிய கதைகளே சிரஞ்சீவி யாக வாழ்கின்றன.

இவ்வளவு ஏன் சொல்லவந்தேன் என்றுல், அன்றுடம் முக க்ஷவரம் செய்து செய்து எனக்கு ஏற்பட்ட புண்களைப் பார்க்கும்போது இன்ஞெரு முகம் வேண்டும்போல் தோன்றுகிறது. எந்த ஆசிரியனுவது, இதை நலம்படச் சொன்னுல் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம்.

கற்றுக்கொள்ளும் மார்க்கத்திற்கு கதை ரூபந்தான் சிறந்தது என்று பலர் கதைக்கிறுர்கள். நான் கவிஞனை எவ்வளவு தூரம் தலை வணங்கக்

கையெடுக்கிறேனே, அப்படியே நாவிதனைக் கண்டும் செய்கிறேன்! வசனம்போல் இருக்கும் என் மூஞ்சி, தலை, இவைகளை ஒரு காவ்ய மாளிகையாகவல்லவா ஆக்கிவிடுகிறான்! அவனி டம் சற்று ஏறுமாறாக நான் நடந்துகொண்டால், அவ்வளவுதான் என் முகம் தலையெல்லாம் வசன கவிதையாகிவிடுகிறது. ஏற்றத் தாழ்வு, குறுக் கல், நீட்டல், மேடு பள்ளம் எல்லாம் தலைநீட்டு கின்றன.

கதைகளோடு, இம்மாதிரி வாழ்க்கை லக்ஷ் யங்களையும் புகுத்தி யார் எழுதப்போகிறார் களோ, அன்றுதான், நாம் உயிர்வாழ்ந்து சாக முடியும்!

என் பிரசங்கம்

நண்பனுக்கு:

உபயக்ஷேமம். பத்திரிகையில் நான் பிரசங்கம் செய்த செய்தியைப் படித்துவிட்டு நீ ஆச்சரியப்பட்டிருக்கிறாய். எந்த மடை......என்னைப் பிரசங்கம் செய்யக் கூப்பிட்டார் என்பது உன் கேள்வி. அதன் சாராம்சம் அறிய நீ ஆவலுடன் இருக்கிறாய். ரொம்பவும் சந்தோஷம்.

நடந்த விஷயத்தை அப்படியே எழுதுகிறேன். மறதியின் காரணமாக சில விஷயங்கள் விட்டுப் போகும். அவ்வளவுதான். மற்றப்படி வரிக்குவரி என் பிரசங்கம் பின் வருமாறு ஆற்றப்பட்டது.

“அன்பர்களே! அன்புமிக்க சிவ நேய, வைகுண்ட (வைஷ்ணவ என்று சொல்லுவதாக நினைப்பு) அன்பர்களே! வயிற்றுவலி வாழ்க! (கரகோஷம்) இன்று ஞானமும் அஞ்ஞானமும் என்பதைப் பற்றிப் பேசவிருந்த பிரசங்கியார் வரமுடியவில்லை. அதற்குக் காரணம் ‘வயிற்றுவலி’. ஆகவே அதை நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

" அன்பர்களே, முன்பொரு சமயம் நான் ஜெயிலில் பிரசங்கம் செய்தேன். இது எனது இரண்டாவது முயற்சி. பிரசங்கம் கேட்க வந்த வர்களை யெல்லாம் முட்டாள்கள், அறிவீனர்கள் என்று நினைத்துக்கொண்டால்தான் பேசுகிறவன் துணிச்சலாய்ப் பேசமுடியுமாம். அப்படி நினைக்க முடியவில்லை.

" சமயப் பிரசங்கம் கேட்க இந்த மண்டபத் தில் இவ்வளவு கூட்டம் வந்திருப்பது வெகு அபூர்வம். என் பிரசங்க ஆரம்பத்திலேயே, ஆடாமல் அசையாமல் கற்சிலைபோல் கேட்கிறீர் களே? எண்பது பேர் நிறைந்த கூட்டத்தில் நான் பேசும் பாக்கியம் பெற்றேன். இது ரொம் பவும் ஆச்சரியம். அதிலும் கோவில் மண்டபத் தில் நடப்பதைப் பார்க்கவும் கேட்கவும் வந்திருக் கிறீர்கள். இம் மாபெரும் கூட்டத்தில் என் பேச் சைக் கேட்க எழுந்தருளியுள்ள 63 **நாயன்மார் களுக்கும்** என் நன்றி. இதோ இடப் பக்கத்தி லுள்ள அகஸ்தியர். ஆகா! அகஸ்தியர் முன்னிலை யில் 'ஞானமும் அஞ்ஞானமும்' பேசுகிறேன். அதோ தமிழ் முனியின் பக்கத்திலே தமிழ்த் தெய்வம் முருகப் பெருமான் ஆறு முகத்தோடு வந்ததல்லாமல் தன் தேவி இருவரோடு, எட்டுப் பேராகக் காட்சியளித்துக் கூட்டத்தைச் சிறப் பிக்கிறார்!

" எண்பது பேர் நிறைந்த கூட்டத்தில் $63+1+8$ எழுபத்திரண்டு பேர் என் பேச்சைக்

கேட்கு முன்பே, கல்லாய்ச் சமைந்து விட்டார் கள். மிச்சமுள்ள எட்டுப் பேரும் ஞானிகள். அவர்களையும் கல்லாக்கிவிட விருப்பமில்லை. (கரகோஷம்.)

"பேசாத் தெய்வங்கள் 72ம் பேசும் தெய் வங்கள் 8ம் சேர்ந்து என் கற்பனையைத் தூண்ட வில்லை. கோவில் தர்மகர்த்தா என்னிடம் வேண் டிக் கொண்டார். நான் முருகப்பெருமானை வேண்டிக்கொண்டேன். நானும் வந்தேன்; முருகனும் எட்டுமுகத்தோடு பிரசங்கம் கேட்க வந்துள்ளார்! அத்தோடு எனக்கு ஒரு ரோஜாப்பூ மாலையும் ஒரு எலுமிச்சம்பழமும் கொடுப்பதாகத் தர்மகர்த்தா சொன்னார். எனக்கு எலுமிச்சம் பழம் என்றால் பைத்யம். ரோஜாப்பூ மாலையிடம் உயிர். இதற்காகவே ஞானமும் அஞ்ஞானமும் பேச ஒப்புக்கொண்டேன்.

"பேசும் தெய்வங்களில் ஒருவரானவர், 63 நாயன்மார்களுக்கும் பின்னால் ஒளிந்துகொண் டிருக்கிறார். அவர் ரோஜாப்பூ மாலையையும், எலுமிச்சம் பழத்தையும் இப்போதே கொண்டு வந்து கொடுக்கட்டும். ஏனென்றால் நான் பேச ஆரம்பித்தால் நிறுத்துவேனே, மாட்டேனே! நிற்கிறவர் தலை கிறங்கிக் கீழே விழலாம். இல்லை, தூங்கவும் செய்யலாம். நின்றுகொண்டு தூங்கு கிறது மனிதப் பிறவியிடம் இல்லை. அவை விலங் கினங்கள். நாம் மனிதர்கள். ஆகவே, ரோஜாப்பூ

மாலைக்காரர், தம் உயிரின்மீது ஆசை வைத்திருந்தால், என் பேச்சில் மயங்கிக் கீழே விழுமுன்பு எனக்கு மாலையிடட்டும். (கரகோஷம், மாலையிடல்.) நன்றி."

பிறகு சபையை ஊன்றிக் கவனித்தேன். அப்போது கூட்டத்திற்கு இன்னும் சிலர் வந்திருப்பதை அறிந்தேன்.

"அன்பர்களே! கூட்டத்திற்கு 80 பேர் வந்திருப்பதாகச் சொன்னேன். அது ஏமெரி. (தவறு) இன்னும் 9 பேர் வந்திருக்கிறார்கள். அதாவது பிரசங்கம் ஆரம்பமாவதற்கு முன்பே ஒருவருக்கொருவர் வக்கரித்துக்கொண்டு நிற்கிறார்கள். இந்த நவக்கிரகங்களையும் சேர்த்துக் கொண்டால் இந்தக் கூட்டத்திற்கு 89 பேர்கள் வந்த பெருமை ஆகிறது. (கரகோஷம்.)

"அஞ்ஞானிகள்தான் ஞானிகளின் உயிர் நாடி. அஞ்ஞானிகள் இல்லாவிட்டால் ஞானிகளால் பிரகாசிக்க முடியுமா? ஞானிகள் எப்போதும் அஞ்ஞான விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பதும், அஞ்ஞானிகள் ஞானமார்க்கத்தைப் பற்றிச் சிந்திப்பதும் உலக வழக்கு!......"

*　　*　　*

இப்படிப் பலப்பலவாறாகப் பேசி ஞானியாகிய நான் அஞ்ஞானங்களை எடுத்தோதி அந்த மாபெரும் அஞ்ஞானிகள் கூட்டத்திற்கு ஞான மார்க்கத்தைப் போதித்தேன்.

உனதன்புள்ள,
சுகி.

ஏழை பங்காளன்

நமக்குச் சிரிப்பூட்டவும் நகைப்பூட்டவும் கூடிய வஸ்துக்களில் தலை சிறந்தது, வாழைப் பழத்தோல் ஒன்றே. எனக்கு வாழைப் பழங்கள் சாப்பிட்டுப் பழக்கம். அதை வாங்கப் போன சமயம் விலை அதிகமாகச் சொன்ஞன்.

நண்பன் "அதென்ன ஆரஞ்சா, இல்லை சப்போட்டாவா, மாம்பழமா இவ்வளவு விலை கொடுத்து வாங்க. வாளைப்பளத்திற்கு இவ்வளவு விலையா?" என்று நையாண்டி செய்தான். மன்மதனுக்குச் செவிசாய்க்காத சிவபெருமான் போல நான் பழங்களை வாங்கி முடித்தேன்

கனி வர்க்கங்களின் தத்துவங்களை அறிந்திருந்தால் என் நண்பன் அப்படிச் சொல்லுவாஞ? பழங்களின் விசித்திர அமைப்பு அவன் இதயத்தோடு ஒட்டவில்லை. பழ வினங்களின் உள்ளான தத்துவ உண்மைகளைக் கலைப் பொருளாகக் காணும் கண் அவனுக்கிருந்திருந்தால், இப்படி ளகரம் போட்டு, இளக்காரம் செய்வாஞ?

வாழைப் பழம், பழ வர்க்கங்களின் ராஜா. எல்லாப் பழங்களும் இந்த உயர்வான மணி மகு

டத்தை எட்ட முடியாது. வானத்தை முட்டி நிற்கும் இமயம், நம்மூர் உம்முணும் பொத்தைக் குச் சரியாகுமா? வாழையடி வாழையாக உன் னத நிலையுள்ள இதன் நிறம் மஞ்சள். ஆகா! தூய்ய மஞ்சள்; மங்களகரமாக இருக்கிறதால் உயர்வு அல்ல. எவ்வளவு அழகாக இருக்கின்றன. பொன்னிறத்திலே அடுக்கடுக்காக அணி வகுத்த சிப்பாய்கள் போல இருக்கின்றன!

புற அழகு மட்டும் போதாது; அக அழகு தான் இலக்கியத்தின் ஜீவன் என்கிறார்கள். வாழைப்பழமே இதற்கு எடுத்துக் காட்டு; சான்று.

செக்கச் சிவந்த மாதுளை, மெல்லியலாரின் பவள வாய் மலர்ப் புன்னகை தவழும் பற்களின் வரிசையை நினைப்பூட்டும் மாதுளை. அடடா! இதை டாக்டர் நம் பல்லை உதிர்ப்பது போல் சுலப மாக உதிர்க்கத்தான் முடியுமா? அந்தச் செங் கதிர் முத்துக்கள் உதிரும்போது சாறெல்லாம் வீணுகப் பாயும். வாயில் போட்டு ஒரு குறிப் பிட்ட பலத்திற்கு அதிகமாக சப்புக் கொட்டினுல் பற்கள் கிடுகிடுக்கும். அதிலும் சொத்தைப் பற்களை நினைப்பூட்டும் முத்துக்களைத் தின்று விட்டால் தும்மல் வரும் மூஞ்சி போல் ஆய்விடும்; தும்மல் மட்டும் வராது.

போகட்டும், இந்த மாதுளை. வாசப் பலாக் கனியை எடுத்துக் கொள்வோம். முள்ளம் பன்றி

உருக்கொண்ட இந்தப் பலா இருக்கிறதே, அதன் வாசனை மூக்கை அப்படியே துவாரம் போட்டு விடும். சிவ சிவா! அதை அறுத்துச் சுளைகளைத் தேடி எடுக்குமுன் கையும் காலும் பிசின் பிசினுக ஒட்டிப் பிராணனை வாங்கி அரை டின் தேங்கா யெண்ணெய்யும் காலியாகும். கொழுக்கட்டை தின்ற நாய்க்குக் குறுணி மோர் தக்ஷிணை என்ற கதையாக இவ்வளவும் செய்து, பழம் கூழை யாகப் போய் விட்டால்......? முயற்சி இகழ்ச் சியே! என்னைக் கேட்டால், கல்லில் நார் உரிப் பது இதைவிட எவ்வளவோ சிறந்த முயற்சி என்பேன்.

சிறந்தது, உயர்வு வாய்ந்தது எனக் கொண் டாடப்படும் ஆரஞ்சு என்ன வாழ்கிறது? இதைத் தோலுரிக்கும் போது நகக்கண் காந்தும். சுளையை மேல் நார் உரித்துக், கொட்டை நீக்கி உண்ண நினைத்தால், ரஸா பாஸம் விளைகிறது. அப்படியே சுளையை வாயில் போட்டாலோ அந்த நாரும் தோலும் சேர்த்துச் சுவைக்கிறோம். கொட்டை யைக் கடித்து விடாமல் நாக்குப் புரட்டிக் கொடுக்க வேண்டும். சிறிது தவக்கம் நேர்ந்தால், அந்த அசட்டுக் கசப்புச் சொல்லி முடியாது.

மாம்பழம்! ஓ, மாம்பழமே! உன்னைப் பெண் ணின் கன்னக் கதுப்புக்கு உவமை கூறுகிறார்கள். உண்மை. பெண்ணைப்போல் தோலையுடையாய், நீ! பெண்ணின் கன்னத்திற்காகத் தன் இரத்த மெல்லாம் சிந்தி, உழைத்த பணமெல்லாம் விரயம்

செய்து நிற்கிருன் ஆடவன். அதே கதை தான் உன்னைத் தோல் சீவி உண்ணும் போதும். கையின் விரல்களைச் சீவிவிடாமல்ப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு மாம்பழம் கூட ரத்தக் கறை படாமல் நான் நறுக்கியதேயில்லை. இப்படி மாப்பழம் நறுக்கும் போது, கட்டி மாம்பழம் மூக மூகா கொழ கொழாத் தான். தோல் சீவிய மாம்பழம் கையிலிருந்து எகிறி எகிறிப் பாயும். ஒரு மாம்பழத்தைக் கை நழுவாமல் என்றுல் நறுக்க முடியாது. என் அனுபவத்தில், பிறந்த குழந்தையை நாலு மாதம் வரை தூக்கிறுலும் தூக்கலாமே யொழிய மாம்பழம் நறுக்கவே முடியாது. இப்படியெல்லாம் மூக மூகா கொழ கொழா ஆகாமல், இந்திர மகேந்திர ஜாலம் செய்து நறுக்கிறுல் பழத்தில் முக்கால் வாசி கொட்டை. அதுவும் புளிப்போ! இனிப்போ! அசட்டு அழுகல் நாற்றமோ! இந்தத் திகில் எல்லாம் மணப் பெண் எப்படி வாய்ப்பாளோ என்று கதி கலங்கும் பிரமச்சாரியைப் போன்றது. மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கிறவன், இந்த மாம்பழம் நறுக்கு கிறவனைவிட யூகசாலி தான்.

கிச்சிலியை எடுத்துக் கொள்வோம். சரி, எடுத்ததை நாலுபேர் முன்னிலையில் அப்படியே சாப்பிட்டோம் என்று உண்டா? அடிக்கடி எழுந்துபோய் ஜன்னலுக்கப்பால் துப்பி வரவேண்டும்; ஆளைப் பார்த்துத் துப்பவேண்டும். 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற நரி பெரிய

குள்ள நரியாக இருக்கவேண்டும். வெள்ளரியும், கொய்யாவும், தக்காளியும் பழங்கள் தான். அருவருப்பு, பல்லுக்குத் தொல்லை, சட்டைக்கு அபிஷேகம் முதலான இம்சைகள் வேண்டு மானால் இவை தின்னலாம். இந்தப் பழவர்க் கங்களை நான் தொட்டாலும் என் நாவு தொடாது.

கனிகள் நிறைந்த கூட்டத்தில், வாழைப் பழத்தையே நான் பொறுக்குவேன். மற்றப் பழங்களைத் தின்பதிலுள்ள சிரமமே எனக்குப் பெரிதாகப் படுகிறது. உண்ணும் நிலைமைக்குக் கொண்டு வருவதற்குள் நாலு வாழைத் தோட் டத்திற்குத் தண்ணீர் இறைத்துவிடலாம். ஆனால் ஆஹா, வாழைப்பழம்! அதைப் 'பழவேந்திரன்' என்கிறேன்.

வாழைப்பழம் தின்னச் சிரமம் உண்டா? சுத்த வீரன் உடைவாளை எடுப்பது போல சீப்பிலிருந்து பிய்த்து விடுகிறோம். குழந்தை யுள்ளம், பட்டுப் பூச்சியை ஸ்பரிசம் செய்வது மாதிரியே நம் கைக்கு உணர்ச்சி உண்டாகிறது. கையால் உரிக்கிறபோது நகக்கண் காந்தல் எடுக்கிறதா? கத்திதான் வேண்டுமா? இல்லை, அரைடின் தேங்காயெண்ணெய் தேடுகிறதா? பற்களுக்குள்ப் புகுந்து வாருகோல் குச்சியால் இடுக்கி எடுக்கவேண்டுமா? ஒன்றுமில்லை. சூரிய னுடைய இளங்கதிர் பட்டதும் தாமரை மலர

வில்லையா? அப்படியே வாழைப்பழமும் மலர்கிறது.

தாமரை எப்படி மலர்கிறது என நம்மால் பார்க்கமுடியாது. அது தாவர நூலின் தத்துவம், கவிதா உணர்ச்சி உள்ளவர்களின் ஆத்மானுபவம். காவ்யசந்தம் நிறைந்தது அம் மலர்ச்சி. வாழைப் பழத்தோல், வழுக்கு மரத்தில் இறங்குபவன் போல உரிகிறது. நாலு பேர் மத்தியில் சுத்தமாக, நாகரிகமாக ர ஸா பா ஸ மின்றிச் சாப்பிடலாம்.

குழந்தைகள்கூட அதிகமாகத் தின்று நோய் வாய்ப் பட்டதாக நான் கேட்டறியேன். ஆனால் மற்றப் பழங்கள் அளவுக்குமிஞ்சினால் பசும் பாலையும் வயிற்று வலியையும் தேடும். டாக்டர் கொய்யா, எலுமிச்சை, முந்திரி, மாதுளை எல்லாம் 'சப்போர்ட்' செய்கிறார். ஆரஞ்சுப் பழத்தின் மேல் அத்தனை டாக்டர்களும் விழுந்து கசக்கிப் பிழிகிறார்கள். ஏதோ 'காலரி விடமின் புரதம்' இருக்கிறதாகவும் சொல்லுகிறார்கள். எந்த டாக்டரும் வாழைப் பழத்தைச் சிபார்சு செய்கிறதைக் காணோம்.

வாழைப்பழம்! தாமரைபோல் மலர்ந்தும் சுகமாகவும் சுத்தமாகவும் ரஸாபாஸமின்றியும் நாலுபேர் அல்ல, நாலாயிரம் பேருக்கு நடுவிலே யாரும் உண்ணலாம். க த லி யே ா, பூவனோ,

மொந்தனோ, சிங்கமோ, படத்தியோ, பச்சையோ எதுவாக இருப்பினும் சரி, மற்றப் பழவர்க்கங்களைப்போல் தொல்லையும் சிரமமும் தருகிற காரியமும் இதனிடம் இல்லை. ஆராய்ச்சியாளர்கள் வாழைப்பழத்தில் ஏ முதல் இஸெட் வரை வைடமின்களையோ, புரதச் சத்துக்களையோ கண்டுபிடித்தாலும் கண்டுபிடிக்காவிட்டாலும் நம்முடன் பிறந்த வியாதிக்கு நல்ல மருந்தென ஒப்புக்கொள்ளுவார்கள் என நினைக்கிறேன்.

பசிப்பிணி, என்ற தீராத நோய் இருக்கிறது பாருங்கள், அதற்கு இது நல்ல மருந்து. வாழைப்பழம் பொதுஜனப் பிரியன்; ஏழை பங்காளன், காலங்கடந்து கடவுளைப்போல் நம்மைக் கோடையிலும் குளிரிலும் அன்றும் இன்றும் தடுத்தாட்கொள்ளும் தயாநிதி.

அது, பழவேந்திரன் !

கற்பகக்கனி

"உனக்கு மனச்சாட்சி இல்லையா?" என்று என் மனச்சாட்சி என்னிடமே கேட்டது.

"ஓகோ! நீ இருப்பதை இன்று தான் அறிந்தேன். உனக்கு என்ன வேண்டும்?"

"உன் நெஞ்சிலே கைவைத்துச் சொல். சென்ற கட்டுரையில் நீ என்ன எழுதினாய்?"

"மறந்து விட்டது."

"நன்றி கெட்டவனே, ஆரஞ்சுப் பழத்தைப் பற்றி படுகேவலமாக இப்படிச் சொன்னாய் :—

ஆரஞ்சாம், ஆரஞ்சு! இதன் மேல் டாக்டர்கள் விழுந்து படுத்துகிறபாடு கொஞ்ச நஞ்சமா? சிறந்ததாம். பழங்களில் உயர்ந்ததாம். தோலுரிக்கும் போது நகக்கண் காந்தும். சுளையை, மேல் நார் உரித்துக்கொட்டை நீக்கி உண்ண நினைத்தால் ரஸாபாஸம் விளைகிறது. அப்படியே வாயில் போட்டாலோ அந்த நாரும் தோலியும் சேர்த்துச் சுவைக்கிறோம். கொட்டையைக் கடித்துவிடாமல் நாக்குப் புரட்டிக் கொடுக்க வேண்டும். தவக்கம் நேர்ந்தால் அந்த அசட்டுக் கசப்புச் சொல்லிமுடியாது.

" இருக்கலாம். அதனால் என்ன?" என்றேன். மனச்சாட்சி, என்னமோ சிரிப்பாய்ச் சிரித்தது. நான் எழுதியதைப் பார்த்துப் பிறர் சிரிப்பதென்றால் சரி, ஆனால் மனச்சாட்சி சிரிப்பதா? அதை அழ அழவைக்க நினைத்துக் கொண்டிருந்தேன்.

எனது நினைவு வளராதபடி வானொலியில் யாரோ பேசுங் குரல் கேட்டது:

"ஆரஞ்சும் நம் நார்த்தங்காயும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன. ஆனால் இப்பொழுது சற்றே வேறுபட்ட வெவ்வேறு பொருளைக் குறிக்கின்றன. நம் நார்த்தங்காய், மலையாளமொழியில் 'நாரங்காய்' என வழங்கிற்று. அது தான் 'நாரங்க்' என பெர்ஸியன் மொழியிலும், 'நாரஞ்ச்' என அரேபிய மொழியிலும் 'ஆரண்சியோ' என இத்தாலிய மொழியிலும், 'ஆரஞ்சு' என பிரெஞ்சு ஆங்கில மொழிகளிலும் திரிந்து திரிந்து வழங்கி மீண்டும் நம்மிடையே வந்திருக்கிறது. எனவே நமது பழைய 'நாரங்காய்' என்னுஞ் சொல்லே 'ஆரஞ்சு' என்னும் புதுச்சொல்லாக நம்வீட்டிற்குத் திரும்பி வந்திருக்கிறது!"

சொல்லாராய்ச்சியில் வியந்து விட்டேன். சற்றே வேறுபட்டு வெவ்வேறு பொருள்களைக் குறித்தாலும், மாடு பசுவாகுமா? நாரத்தங்காய், மாடு; ஆரஞ்சு பசுப்போன்றது என்பது என் சித்தாந்தம். நாரத்தங்காயிலிருந்து ஆரஞ்சு பிறந்திருப்பது, ஹிரண்யனுக்குப் பிரகலாதன் பிறந்த மாதிரி!

ஆரஞ்சு, ஜீவநதி போன்றது. கோடை, வெயில், மழை, பனி எப்போதும் கிடைக்கும். வேறு பழங்களுக்கு இல்லாத இந்தப் பெருமை ஒன்றே போதும். ஆனால் இதனுள் எத்தனையோ அற்புதங்கள், ஏ. ஆர். பி. குழிக்குள் நீர் வாழ்வன இருப்பதுபோல் இருக்கின்றன. ஆரோக்கியத்தை அள்ளிக்கொடுக்கும் தன்வந்திரி! இன்புளுயன்ஸாவை விரட்டி அடிக்கும் சக்தியும், உடம்பைப் பளபளப்பாக்கும் மெருகும், இதனுள்ளே சுளை சுளையாக இருக்கிறதாம்!

ஆனால் ஆரஞ்சு என்றாலே, வியாதி, வியாதிக்காரன், படுக்கை இவைதான் நம் நினைவிற்கு வரும். பாற்கடலில் விஷம் பிறந்த மாதிரி, இந்த எண்ணங்கள் எழுகின்றன. இருந்தாலும் நான் இதனுடைய இன்ப ரஸத்திற்கு அடிமை. நறுஞ்சுவைக்குத் தாஸன். மேல்த் தோலியைப் பிறர் கண்ணில் பீச்சி, கண்கலங்க வைப்பதில் எனக்கு வெகு பிரியம்.

அந்த ஹிரண்ய பரம்பரை, அதுதான் நாரத்தங்காய், எலுமிச்சை, கொளிஞ்சிக்காய் இவை எனக்குச் சிம்ம சொப்பனம். இதைப் பச்சை பச்சையாக என் நண்பர் வெளுத்து வாங்கிவிடுவார்! கொளிஞ்சிக்காய் பத்துப் பதினைந்து அப்படியே நாலாக நறுக்கி, உப்போ புளியோ (எதுவென்று நினைப்பில்லை) தொட்டுக் கொண்டு நாட்கணக்காகத் தின்பார். அந்தக்

காட்சியைப் பார்க்கும்போது எனது பல் 32-ம் கூசும். பொய்ப்பல் போல கடகட வென ஆடும். கொடிய புளிப்பைப் பல் கூசாமல், முகத்தையும் சுளிக்காமல், கண்ணை அகல விரித்தபடியே சுவைத்துச் சுவைத்து அவர் தின்பதைப் பார்க்கும்போது, ராமனும் சீதையும் இதயம் மாறிப்புக்கு எய்திய காட்சி நினைப்பு வரும். மனைவி மக்கள், இந்தத் தேசம் இதெல்லாம்விட, கொளிஞ்சிக்காய் என்றால் நண்பருக்கு உயிர்.

ஹிரண்ய பரம்பரைகளில் ஒன்றை அழிக்க (கொளிஞ்சி, எலுமிச்சை, நாரத்தை) மற்றொன்றை உபரியாகச் சேர்த்துக் கொள்ளுவார்கள் ஒரு சிலர். கொளிஞ்சிக்காய் தின்ன எலுமிச்சை சேர்த்துக் கொள்ளுவார்கள். எலுமிச்சை தின்ன கொளிஞ்சி நாரத்தை இரண்டும் சேர்த்துக் கொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள். ஏன் இருக்கக்கூடாது? கொளிஞ்சி, எலுமிச்சை, புளியங்காய், மாங்காய், கிளாக்காய், நெல்லிக்காய் இவ்வளவையும் ஒரே வாயில் உத்சாகத்தோடு போடுகிறவர்கள் இருக்கும்போது........!

அட எஞ்சிவனே! ஆரஞ்சுப்பழம் என்றதும், குற்றால அருவியின் ஸ்நான சுகம் ஏற்படுகிறது. கொடிய மழை பனி வாடையல்ல அது. சுகந்தமான தென்றல். அதன் தங்க வர்ண நிறம், மஞ்சள் வெயிலோடு மலைவாயிலில் விழும் சூரியனை நினைப்பூட்டும். மற்றொரு சமயம்

செம்பந்துபோல், செவ்வானில் மறையும் பரிதியின் வட்டமாகப் பிரகாசிக்கும். மாலைச் சூரியனின் வர்ண விசித்திரங்கள், இன்ப ஜாலங்கள் எல்லாம் கற்பகக் கனியிலே பார்க்கிறோம். உள்ளத்தின் நிறைவையும், கண்ணின் பத்தையும், வாய்க்கும் ஈயப்படுகிற இந்த வருஷாந்தரப் பழரஞ்சனை என்னென்றுசொல்வது !

அது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனுக்குச் சாதியா ? மனுஷ வர்க்கத்தின் அகத்தழகு முகத்தில்த் தெரியும் என்பார்கள். தெரிவது கஷ்டம். ஆனால் ஆரஞ்சின் பழத்தழகு தோலியில் நன்கு தெரியும்.

'ஐயா, என்னிடம் வெளிவேஷம் கிடையாது. அத்தி, ஆப்பிள், பலா மாதிரி கோணங்கித் தனமும் இல்லை. என் தோலியில் மாசு மறு இல்லை. நான் உசத்தி. என் உள்ளே உள்ள ரஸத்தை மேல்த் தோலியாகிய கண்ணாடிக்குப் பூசியுள்ளேன். உன் கண் கொண்டு பார். கடைக்காரன் பைக்குள்ப் போடுமுன் என்னைத் தடுத்து விடலாம்!' என்று சொல்லுகின்றன கோடூர் சாத்துக்குடிப் பழங்கள்.

பஞ்சு மெத்தைபோல் மெத்து மெத்தென்று கண்ணைக் கவரும் அழகுடன் குடு குடுவெனக் குலுங்கி, பற்றற்ற துறவிபோல் தோலிக்கும் சுளைக்கும் சம்பந்தமின்றி இருக்கும் கொடையாரஞ்சு ! அடடா ! அதன் அழகே அழகு.

இந்த ஒப்புயர்வற்ற கற்பகக் கனியை மறந்து, துறவிக்குப்போய், புளியம் பழத்தை உவமையாக்கினார்களே, துறவி என்றால் புளிப் பான விஷயமா? உலகை உய்விக்கும் அரும் பெரும் காரியமல்லவா? ரஸமான விஷயமல்லவா? உலகத்தோடு ஒட்டாமல் தனிமைபட நிற்கிற தன்மையை, இனி ஆரஞ்சுடன் பிணைப்பார் களாக! துறவிக்குவமை, இனி கற்பகக் கனியே.

ஆரஞ்சு, இது வியாதியின் எதிரி; ஆரோக் கியத்தின் நண்பன்; ஏழையின் விரோதி; பணக் காரனின் பந்து; இனிமையின் இருப்பிடம். ஆனால் இதன் குணமறிந்து **இனியவை நாற்பது** பாடிய புலவர் சொன்னார். அதை இடைச் செருகல் எனத் தள்ளிவிட்டார்கள்!

கவியைப் பாருங்கள். ஆரஞ்சு என்றால் எவ்வளவோ தூரம் மனஸைப் பறிகொடுத்து விடுகிறோம். பேரஞ் செய்து வாங்குவோம். விலைக்குப் பயந்து வாங்காதவர்களும் உண்டு. அது தவறு.

ஆரஞ்சைக் காண்டலும் இனிதே;

முதலடியில் கண்டதே போதும். இத்தோடு ஏகாரம் இன்னும் பல வகையான செயல்கள் வருவதை அறிவிக்கிறது. பேரம் செய்து ஆரஞ்சு வாங்குதல் அவசியம் என்கிறார் கவி.

ஆரஞ்சைக் காண்டலும் இனிதே; பேரஞ்செய்(து)
ஆரஞ்சை வாங்குதலும் இனிதே;

கண்டோம்; கொண்டோம். ரொம்ப சரி. கவிஞருக்கு டார்வின் பரிணும தத்துவத்தில் ஈடுபாடு உண்டு. பலர் (கடித்துத் தின்பதை) அப்படிச் செய்வதைப் பார்த்ததால், நம்மை எச்சரிக்கிருர்.

—அதனிலும்
உரையை உரித்து சுளே காண்டல் இனிதே;

கவிஞர் நம் உள்ளக்கிடக்கையை எவ்வளவு ரஸமாகப் பார்க்கிருர். சுளேயைப் பார்ப்பதிலேயே இனிமை சொட்டுகிற தென்ருர். 'உரையை' என்பதில் உள்ள ஐகாரம் அழுத்தமாகச் சொல்வதின் தாத்பரியம், ஒட்டிக்கிடக்கும், சிறு சிறு மென்மையான தோலிகளேயும் உரியுங்கள் என்று ஆயிற்று. உடனே வாயில் போடலாமா? கூடாது. என்ன செய்யவேண்டுமாம்? பாட்டைப் பார்க்கலாம்.

விரையைத் தெரித்து விழுங்குதல் இனிதே;

அடாடா! தெரித்து என்பதில், என்ன நயம் பாருங்கள்! ஆரஞ்சிலுள்ள சிறுசிறு விதைகள் நம்முடைய சுட்டுவிரலுக்கும், பெருவிரலுக்கும் ஊடே அகப்பட்டு, அப்படியே தெரித்துத் தெருப் பக்கம் ஜன்னல் வழியாக விழும் காட்சி

நம் கண்முன் எழவில்லையா? உரையை உரித்து, என்பதிலே தயக்கமும், விரையைத் தெரித்து, என்பதிலே வேகமும் பார்க்கிறோம்.

பாடல் பழம் பாடல்; பழைமையான பாடலும்கூட! சுளை கண்டு, விழுங்கவும் வாங்கவும், ஏன் காண்டலும் முடியாத அன்பர்கள் இக் கவியைப் பார்த்துப் பார்த்துச் சுவைத்தலே போதும்.

ஆரஞ்சைக் காண்டலும் இனிதே; பேரஞ்செய்(து)
ஆரஞ்சை வாங்குதலும் இனிதே; —அதனிலும்
உரையை உரித்து சுளை காண்டல் இனிதே;
விரையைத் தெரித்து விழுங்கலும் இனிதே!

* * *

"பேஷ்!" என்ற குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தேன். அது எனது மனச்சாட்சி.

"கற்பகக் கனி வாழ்க!" என்று மீண்டும் சிரித்தது மனச்சாட்சி.

சொல்! சொல்!!

சில நாட்களுக்கு முன் என்னைச் சந்தித்த நண்பரொருவர், "சரிதான் ஸார், காவடி எடுத்தாச்சு; இனிமேல் என்ன? கலியாணம் ஆக வேண்டியதுதான்" என்று சொன்னார்.

"ஆமாம், கலியாணத்திற்கு முன்னால், காவடி எடுப்பது எங்களில் சம்பிரதாயம்" என்று சொன்னேன்.

அவர், "அதற்கென்ன, காவடி எடுக்காமல் முடியுமா? எடுக்க வேண்டியதுதான் ஸார், எடுக்க வேண்டியதுதான்!" என்று சொன்னதோடு, சிரித்தார். சிரிக்கவேண்டிய அவசியம் என்ன?

சொல்லிய வார்த்தையில் சிலேடைச் சித்திரம் இருக்கிறது. கலியாணம் செய்கிறவன் தன்னைக் 'காவடி' (அதாவது ஆண்டி) ஆக்கிக் கொள்ளுகிறான்!

'காவடி' எடுத்தலுக்கும் முருகப் பெருமானுக்கும் இருந்த தொடர்பு மலையேறி விட்டது. ஐ. பி. கொடுத்தல், கஞ்சிக்கு லாட்டரி அடித்தல், கால் தம்படிக்குத் தாளம் போடுதல் என்றெல்லாம் அர்த்தம் ஏற்பட்டு விட்டது.

காவடியைப் பிடித்த சனி தீபாவளிக்கும் பிடித்திருக்கிறது. தீபாவளி என்றதும் குதூகல மான எண்ணெய்க் குளிப்பு, மஞ்சள் தடவிய கோடி வஸ்திரம், புத்தம் புதிய பண்ட பக்ஷணங் கள், இவற்றின் ஞாபகம் மத்தாப்புச் சுடர்போல எழவேண்டு மல்லவா? எழுகிறதோ? இல்லை!

"அவனு? பெரிய 'தீபாவளி' ஆச்சுதே" என்கிறோம். மங்களகரமான பண்டிகையைக் குறிப்பிடும் சொல், ஊதாரிப் பயலுக்குத் துணையாக, சொக்கப்பனைபோல் நிற்கிறது!

வழக்கத்தின் தோஷத்தால் நானே சொக்கப்பனையைத் தப்பிதமாக உபயோகிக் கிறேன். உபயோகமில்லாத மனிதனைப் பார்க்கும் போது, சொக்கப்பனை என்கிறோம். கார்த்திகை யின் தத்துவத்தை விளக்கி நிற்கும் சொக்கப்பனை என்ற ஜோதி வெள்ளத்தைப் பொங்கல் போட்டு விட்டோம்.

அடாடா! பொங்கல் எவ்வளவு அருமை யான சொற்றொடர்? (வெண் பொங்கலையோ, பயத்தம் பருப்புப் பொங்கலையோ சொல்லவில்லை) சங்கராந்திக்குப் 'பொங்கல்' எனச் சிறப்புப் பெயர் கொடுத்த நாம், இப்போது அதைப் பொங்கல் வைத்துவிட்டோம்! வருஷத்தின் செல்வ நிலையையும், விளைவின் செழிப்பையும், குடியானவர்களின் சந்தோஷப் பெருக்கையும் நினைப்பூட்டிய 'பொங்கல்' இப்படியா சட்னி

(இந்தச் சட்னி இட்லிக்கு உபயோகப்படாது!) ஆகவேண்டும்?

"அடேய்! உன்னுடைய 'தீவாளி'ப் புத்தியை நம்மகிட்ட காட்டாதே; காட்டி ஞயோ, வைக்கோல் போரெல்லாம் 'சொக்கப் பனை'தான்! அப்புறம் உன்னையே 'பொங்கல்' வைச்சுப் போடுவேன். தம்பி, 'காவடி' எடுக்கப் பார்க்கிருயா?" என்றெல்லாம் வைது கொள் வதை நாம் கேட்கிறேம்.

இப்படி, பண்டிகைகளையும் பக்திப் பெருக் கையும் உணர்த்தும் சிறந்த சொற்களை **பஸ்பம்** செய்துவிடும் ஆசாமிகளுக்கு நாலு **டோஸ்** கொடுத்தால்தான் என்ன?

ஆதியில், வியாதி சொஸ்தமாகக் கொடுப்பது டோஸ்; இப்போது, எதிராளியை மட்டந் தட்டுகிறது டோஸ். இதைப்போல, 'பஸ்பம்' செய்தலும் தாயாதி கொண்டாடுகிறது. பஸ்பம், டோஸ், இரண்டுக்கும் வேறு பொருள் வந்து விட்டது. இனிமேல் இந்தச் சொற்களுக்கு என்னதான் **மாத்திரை** இழைத்தாலும் ஒப்பேருது; கைவிட வேண்டியதுதான்.

மாத்திரை என்ற பதம் நாளடைவில் வைத்திய நூலைவிட்டு வழக்குச்சொல் ஆகிவிட் டது, **பதம்** வார்த்தையைக் குறித்துவந்து, இப் போது ஒருவகை சாகித்தியத்தைக் குறிப்பதே

போல. வார்த்தைகள் காலப்போக்கில் அர்த்த மாறுபாடு அடைவதை நான் ரஸிக்கிறவன். ஆனால், ருசியும் சத்தும் நிறைந்துள்ள கறிகாய்களைப்போய் மனித குணத்திற்கு ஒப்பிடுவது கட்டோடு பிடிக்கவில்லை.

"அவனா வெறும் **வெண்டைக்காய்**" என்கிறார்கள். வெண்டைக்காயிலுள்ள மேலான சத்துக்களும் ருசியும்போய் வழவழப்பையே சிறப்பாகச் சூட்டுகிறது ஒருபக்கம் இருந்தாலும், என் கையைக் **கருணைக்கிழங்கிற்கு** ஒப்பிடுவதை மறுக்கிறேன். ருசியில் மாறாத காய்கறிகளைக்கூட அர்த்தபாவத்தில் மாற்றிவிடுகிறோம். 'க'விற்குப் புள்ளி வைத்தால் 'க்'. இந்தப் புள்ளியின் அர்த்தமும், கனா ஒரு **புள்ளி** என்பதும் ஒன்றா? இன்ப ஸ்வரங்களைப் பெய்துவந்த **தந்தி** சங்கீத உலகிலிருந்து விஞ்ஞான உலகிற்குப் போய், நமது இதய வீணையை மீட்டுகிறது. கவிதையைவிட கணப்பொழுதில் நம் மனசைக் கவர்வதில், சொற்செட்டும் அர்த்தபுஷ்டியும் நிறைந்த பொருளாய் விட்டது 'தந்தி'.

மாறுவேஷம் போட்டுக்கொள்வதில் நடிகர்கள்தான் முன்னேற்றம் அடைகிறார்கள் என்பது போய், வார்த்தைகளும் போட்டியிடுகின்றன. மாற்றம் தானே, முன்னேற்றத்தின் அறிகுறி! நம்மைப் போலவே, சொற்களும் மாறிவருகின்றன. மாற்றியும் வருகிறோம்.

அருவி

குற்றாலத்தில் சீசன் ஆரம்பித்து சாரல் கட்டுகிறது. மேகங்கள் பொதிகை மலையில் குவிகின்றன. அருவியிலே தண்ணீர் குதித்தோடுகிறது.

பத்திரிகை படித்த என் மனம் நேரடியாக அருவிக்குள்ளே போய்விட, என் ஸ்தூல சரீரமோ இருநூறு மைல்களுக்கு அப்பால் பத்திரிகையுடன் உட்கார்ந்திருக்கிறது!

சீசன் என்றதும் மனம் குதித்தோடியதன் காரணம், சென்ற ஒரு வருஷமாக நான் குழாயடியில் குளித்து வருவதே. குளிப்பது என்றால், அரைக்கால் இஞ்சுக் குழாயடியில் குந்திக்கொண்டு தண்ணீர் எனப்படும் திரவ பதார்த்தத்தில் உடம்பை நனைக்கிற ஒரு சடங்கு. பட்டணவாசிக்கு அது ஆகாச கங்கை. இப்படி உடம்பில் தண்ணீர் தேய்த்துக்கொள்வதை ஸ்நானம், குளிப்பது, புனல் விளையாட்டு என்று சொல்லக்கூடாது.

'குளிக்கிறது, நீராடுகிறது, ஸ்நானம் செய்கிறது, முழுக்குப்போடுகிறது' என்றால்

ஆற்றையே இரண்டாகக் கலக்கிக் குளிக்க வேண்டும்; முங்கி, மூழ்கி, கும்மாளம் போட வேண்டும். அப்படிக் குளிப்பதில் உண்டாகும் ஆனந்தத்தைக் கேவலம் வசனத்தில் சொல்ல முடியாது.

ஆறோ, குளமோ, சமுத்திரமோ இவைதான் ஸ்நானக் கட்டங்கள். குளத்தில் நம் மனம் போனபடி நீந்தலாம்; ஆற்றில் அதனுடைய மனப்போக்கின் படி நீந்தி விளையாடலாம். சமுத்திரத்தில் அலைகளின் ஏற்றத்தாழ்வோடு அல்லாடலாம். நீச்சல் அடித்து, முங்கிமூழ்கி, குதித்து ஓடியாடி, தொட்டுப்பிடித்து, குட்டிக் கர்ணங்கள், அந்தர்கள் போட்டு விளையாடலாம். முக்குளித்து நீச்சல் அடிப்பதோடு மல்லாக்காக நீச்சல் அடிப்பதில் ஈடுபட்டால் அடடா......

அரைக்கால் இஞ்சுக் குழாயில் எங்கே விளையாடுகிறது? எங்கிருந்து குதிக்கிறது? ஆறு குளம் இவை அடுத்து நிற்கும் மரக்கிளை மேலிருந்து விரால்ப்பாய்ச்சல் பாய்வோமே, குழாயில் இது நடக்கிற காரியமா? நடக்கிறதாவது மண்ணாங்கட்டியாவது!

ஆற்றிலிறங்கி அழகுபடக் குளிக்கத் தெரியாத பட்டணவாசிகள், மாற்றுவேஷ்டியைக் கட்டிக்கொள்ளத் தெரியாத அப்பாவிகள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? தண்ணீரை அனுபவிக்கத் தெரியாத அப்பாவிகள், பாவிகள் என்பது என் கூற்று.

தண்ணீரில், ஆற்றுத் தண்ணீர்தான் உசத்தி. அதன் சுகம் தனி. அலாதியானது. அதிலும் எங்களூர் நதி தாமிரவர்ணி! அடடா. பிரம்மானந்தம்; பேரானந்தம்; நித்தியானந்தம். பாரதியின் வாக்குப்படி, தமிழ்கண்ட பொருநை நதி. அந்நதிதீரத்தில் தமிழ் வளத்தைப்போலவே நீர்வளமும் ஓடுகிறது, சாடுகிறது. 'வளம்' என்றதும் மற்ற நதிகளில் வருகிற வண்டலைச் சொல்லவில்லை. காசு செலவின்றி காஷாய வஸ்திரமாக்குகிற நதிகளைப்போல பொருநையின் தண்ணீர் இருக்குமா? இருக்காது.

பளிங்கு என்றால் தாமிரவர்ணிச் சீமையில் தண்ணீருக்குச் சொல்லுவார்கள். நதிக்கரையின் ஓரமாக நின்றால், நமது முகச்சாயலைத் தண்ணீரில் காணலாம். அப்படிப் பளிங்குபோல இருக்கும். வாயில் ஊற்றிக்கொண்டால் கருப்பஞ்சாறு. குளிர்ச்சியோ பன்னீர் மாதிரி. குளிக்கக் குளிக்க இன்னும் குளிக்கவேண்டுமென்று தோன்றும். குழாயடியில் குளிக்கும்போது, நம்மில் எத்தனைபேருக்கு கூடச் சிறிது நேரம் சுகத்திற்காகக் குளிப்போமெனத் தோன்றுகிறது?

தாமிரவர்ணி ஆற்றுக்குள் இறங்கிவிட்டால் கீழே தூய வெண்மணல், மிருதுவாக மல்லிகைப் பூப்போல இருக்கும். ஆற்றின் நடுவே, குத்திட்டு நிற்கும் பாறைகள்; பாறைகளுக்கு ஊடாக

சரட்டென வெள்ளி உருகி கிளுகிளு வென்று சப்தத்தோடு ஓடும். தண்ணீரின் பாய்ச்சல், ஆளைக் கவிழ்த்தும் விடாது; அசமந்தமாகவும் இருக்காது. உடம்பை ஊடுருவி குளுகுளு வெனச் செய்யும். சுழல்களும், குமிழிகளும் கும்மாளமிட்டு, நுங்கும் நுரையுமாகக் காலைக் கதிரவன் கிரணங்களின் வர்ணபேதங்களைப் பிரதிபலிப்பதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் குளிர்ந்து புளகிதம் அடைகிறது.

ஆனால், ராம...ராம...குழாயடியில் குளிக் கிறவர்கள் சிலர், ஸ்நானம் செய்கிறது என்றால் மூஞ்சி கழுவிக் கொள்ளுகிறது என்று பொருள் சொல்லுவார்கள். குழாயடியில் முகத்தை அலம்பி அலம்பி, அந்த முகமே மூஞ்சியாக மாறி விட்டது. குழாய் நமக்குத்தந்த கலைச்சொல் மூஞ்சி. தண்ணீர் பிடிக்கவந்த குழாயடியில் மன அசுத்தமான 'மூஞ்சியில் விழிக்கமுடியாத' பேச்சுக்களும் ஏச்சுக்களும் நடப்பதைக் காணலாம்.

நதிக்கரையில் அப்படியா? எத்தகைய அழகிய காட்சிகளைக் காண்கிறோம்? காலை நேரத்தில் உதய சூரியனோடு குளித்த பெண்கள், கோதிய கூந்தலை எடுத்துச்செருகியோ, அல்லது துவளத்துவள தொங்கவிட்டோ, ஈரப்புடவை யைத் தண்ணீர் சொட்டச் சொட்ட உடம்போடு உடம்பாக இறுகச்சுற்றி, வலக்கையை வீசிவீசி நடக்கும் காட்சி காணக்கிடைக்காத காட்சி!"

பளபளவென மின்னும் குடங்களின் ஒளியும், கால் மெட்டிகளின் ஓசையும், கை வளையல் களின் கலீன் கலீன் நாதமும் பட்டணங்களில் பார்க்கவே முடியாது.

மாலை நேரத்தில், வானம் தன் சோக நாடகத்தை மலைகளுக்கும், மரங்களுக்கும் அப்பால் நடத்த, குளக்கரையோ நதிக்கரையோ நோக்கி ஜோடி ஜோடியாகவும் கூட்டம் கூட்ட மாகவும் சிரித்து விளையாடி விந்நியாசப் பேச் சொலியோடு, வர்ண விஸ்தாரமாக நடந்து செல்லும் பெண்களின் ஒயிலும் சாயலும், எந்தக் குழாயடியில் காணமுடியும்.

இந்த நினைவெல்லாம் இப்போது வருவா னேன்? ஆமாம் 'குற்ருலத்தில் சீசன்' என்ற செய்தியல்லவா இப்படி ஸ்நானத்தின் பெருமையை நினைப்பூட்டிற்று! அடடா. தன் தரையில் ஓடும் நதியின் சிறப்பே இப்படி யென்ருல், நிற்கும் நதியின் பெருமையைக் கேட்கவா வேண்டும். குற்ருலத்தில்—நீர்வீழ்ச்சி இல்லை—அருவி இருக்கிறது.

ஒருசமயம், அருவியைப் பார்க்கவந்த இருவர் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். 'ஏனய்யா' என்று கேட்டேன். 'இது எப்பொழுது நிற்கும்? அதைப் பார்த்துவிட்டுப் போகலாம்' என்ருர்கள். இராப்பகலாக ஓயாது ஒழியாது இருதயத்தின் துடிப்புப்போல ஓடிக்கொண்டே இருக்குமென்

ருல் அவர்கள் நம்பவில்லை. ஒருவாரம் இராப் பகலாக இருந்து நான் சொல்வது உண்மை யென்று நம்பினுர்கள். இந்த நண்பர்களுடைய ஊரில் ஆதிசேஷன் தலையைத் தடவினாலும் ஒரு சொட்டு ஜலம் கிடையாது. இவ்வளவு தண்ணீர் கொட்டிக்கொண்டேயிருப்பதைப் பார்த்து ஒரே வியப்பு, ஆச்சர்யம். அத்தோடு, இரவு 11 மணிமுதல் காலை 4 மணிவரை யாரும் குளிக்க இயலாமல் வீணுக விழுந்து போய் விடுகிறதே என அங்கலாய்த்தார்கள். ஆனாலும் அருவி இடையருது பொல பொல, சட சட வென விழுந்துகொண்டே இருக்கிறது.

தூரத்திலிருந்து அருவியைப் பார்த்தால் படுத்திருக்கும் ஆறு திடீரென எழுந்து சாய்ந்து நிற்பதுபோல காட்சியளிக்கும். நிற்கிறபோது பாலைக் குடங்குடமாக கொட்டிக்கொண்டே இருக்கும். கிட்டே நெருங்கினால் திவலைகள் பன்னீர்த் துளியாகத் தெளிக்கும். அருவிக்குள் தலையைக் கொடுத்தால்...........அவ்வளவுதான் ஒரே பிரம்மானந்தனம். உச்சி முதல் உள்ளங் கால்வரை ஒரு கிளுகிளுப்பு. என்னமோ துடிப்பு ஓடுகிறது. சிவபெருமாளுகமாறி கங்காதேவியை சடைமுடியில் தாங்கியதுபோல நாமும் அருவி யைத் தாங்குகிறோம். விடியவிடிய நின்றாலும். அலுப்போ சலிப்போ தோன்றுகிறதா? அரைக்கால் இஞ்சுக் குழாய் கண்ணீர் வடிக்குமே அப்படியா தண்ணீர் விழுகிறது. ஆயிரம் யானைகள் அள்ளி அபிஷேகம் பண்ணுகிறது

போல 30 அடிக்கு மேலான அகலத்தில் ஒரே அடுக்காக விழுகிறது. விழுந்துகொண்டே நிற்கிறது.

மனித வாழ்க்கையில், அருவியில் குளிப்பதைவிட உயர்ந்த யோகமோ போகமோ இல்லையென உணரலாம். நமக்குப் பணம் காசு இவையே 'தண்ணீர் பட்ட பாடு' என்றால் தண்ணீரை என்ன படுத்துவோம்! அருவியில் மூழ்கி அதன் உணர்ச்சிப் பிரவாகத்தால் சொக்கிப்போன சம்பந்தர், மனங்குளிர வாய் குளிரப் பாடிய அடிகள் எனக்கு ஞாபகம் வருகின்றன.

அருவியோடு புஷ்பங்களும், பொன்னுமே தத்தித் தெறிக்கின்றனவாம். புஷ்பங்களில் எவ்வளவோ வகை. போதும் பொன்னும் புடை சூழ நமது தலையிலே வீழ்கிறதாம். 'சோ' வென இறைந்து வீழ்கிற அந்தக் காட்சியைக் காண, பதினாயிரம் கண்கள் வேண்டும். தூவானமாகச் சிதறிவீழும் நுண் திவலைகளின் ஸ்பரிச இன்ப வேதனையை உணர்ந்தாரே அறிவார்.

" போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழ
கூதல் மாரி நுண் துளி தூங்கும் குற்றாலம்!

என்று சம்பந்தர் இப்படியாகப் பாடிய பதிகப் பாடல்கள் நினைப்பில் வருகின்றன.

எனக்கு இந்த ஆலியில் குற்றாலம் போக முடியவில்லை. ஆனால் நினைத்த மாத்திரத்தில்

குற்ருல மலையின் காம்பீர்யத்தையும், செடிகொடி களின் பசுமையையும், அருவியின் கீதத்தையும் காணவேண்டுமென நினைத்தால், ஆசை பிறந் தால் சம்பந்தரின் குற்ருலப்பதிகம் படிப்பேன்.

ஐந்தருவிகளின் தோற்றத்தையும், எல்லா விதமான காட்சிகளையும் ஏன் குற்ருல சீசனையே அனுபவிக்க நினைத்தால், குறவஞ்சியை எடுப் பேன். மழையோ, பனியோ, வெயிலோ அருவிக்குள் நுழைந்து இன்பமாகக் குளிக்கும் எண்ணங்களிலிருந்து மெதுவாகத் தேனரு விக்குத் தாவிவிடுவேன்! ஏறுகிறதில்லை.

நின்று குளித்திடவேள் அருவியுண் டு—வந்தோர்
நெஞ்சங் குளிருமட்டும் நிற்பதுமுண் டு
சென்று குளிப்பதற்குச் சேண்பகாட வி—உயர்
தேனருவி ஐந்தருவி தொலைவிலுமுண் டு

என்கிருர் கவிஞர் 'சோமு'. எனது சூட்சம மனசைப் பொறுத்தவரையில் உயரத்திலுள்ள தேனருவியும், தொலைவிலுள்ள ஐந்தருவியும், அருகருகேயுள்ளவை. எனது ஐம்புலன்களும் தனித்தனியே ஐந்தருவியில் குளித்து வரு மென்ருல் வேறு என்ன சொல்ல?

குழாயில் ஐம்புலன்களையும் அடக்கி ஒடுக்கினுலும் நனைய இடமேது? நினைத்தாலே குடங்குடமாக வியர்வை கொட்டுகிறது. இதை மாற்ற, சம்பந்தரின் பதிகமும் குறவஞ்சிப் புஸ்கதமுமே எனக்கு வழிகாட்டிகள்.

குற்ருலம் போக வேறு வழி என்ன?

வண்டு

என் வீட்டு முகட்டுக்கு ஊடு சட்டமாகவும் உத்திரமாகவும் தென்னை வளை போட்டிருக்கிறார்கள். இதில் ஏதோ குற்றம் குறை இருப்பது போல, கருவண்டு ஒன்று இதைத் துளைத்துக் கட்டையைத் துருவித் துருவிக் கீழே உதிர்த்துக் கொண்டே இருந்தது. நானும் பலநாள் சகித்து வந்தேன். ஒன்று இரண்டாகி மூன்றாகிப்பெருகத் தொடங்கவே, தொல்லை சகிக்கமுடியவில்லை. மரத்துகள் வீடெங்கும்பரவி உபத்திரவமாயிற்று. கோபத்தில் ஒரு வண்டை அடித்துவிட்டேன்; வீரனைப்போல் சந்தோஷப்பட்டேன்.

என் கண்ணுக்குக் கேவலம் வண்டாகத் தெரிந்தது, பிறர் கண்ணுக்கு எப்படி யெல்லாம் படுமெனச் சிந்தனை செய்தேன்.

கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையின் ஒரு பாட்டு ஞாபகத்துக்கு வந்தது:

> 'இருளு மகலும்; இரவியும் தோன்றும்;
> பொருவிலித் தாமரைப் பூவும் மலரும்,
> மலரும் பொழுதிவ் வன்சிறை நீங்கி,
> உலகி லெங்கும் உலவித் திரிந்து,

பூவெழு பற்பல புதுவனங் கண்டு
நாவெழு சுவைதரு நறைமிக உண்டு,
வாழ்குவன் ' என்றொரு மதுகரம் இருப்பத்
தாழ்மத வேழமோன் றூழ்கய மிறங்கிப்
பாசிலை பூவெலாம் பறித்து
வீசி யெறிந்து வெறிகோண் டதுவே!

தேனுண்ணப்போன வண்டு, அந்தி நேரத்தில் தாமரைக்குள் அகப்பட்டுக்கொண்டது. உதய சூரியனுக்காகத் தாமரைக்குள்ளிருந்து ஏங்கித் தவித்த சமயம், யானை யொன்று அத் தாமரையைப் பிடுங்கி எறிந்துவிட்டது. இந்தப் பாடலைப் படிக்கும்போதெல்லாம் இப்படி நிர்க்கதியாய்ப் போய்விட்ட வண்டுக்காக, என் மனம் உருகாதிருப்பதில்லை. இப்போதோ, அந்த யானையைவிடக் கொடியவன் ஆகிவிட்டேனே!

அன்றொருநாள் ஒரு மாம்பழத்தை நறுக்கும்போது, வண்டொன்று வெளிப்பட்டது. என்ன விந்தை! ஓடியாடித் திரியாமல் எப்படித்தான் ஹடயோகம் செய்து வாழ்ந்து வளர்ந்து வந்ததோ? கடவுளின் சிருஷ்டி அதிசயம் என்னைப் பரவசமடையச் செய்தது.

வண்டு என்ற ஜீவன் இல்லாதிருந்தால், என்ன நடந்திருக்கும்? ரஸமான சம்பவங்களும் உயர்தரமான காவ்யங்களும் பிறந்திருக்க மாட்டா.

முக்கியமாக, ‘சாகுந்தலம்’ தோன்றிருக்க முடியாது. காளிதாசனுக்கு, சகுந்தலையும் துஷ்யந்தனும் கை கொடுத்து உதவவில்லை! வண்டுதான், ஆபத்பாந்தவனாய், அனாத ரக்ஷகனாய், காவ்யத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறது.

இவ்வளவு தூரம், ஒரு காவ்யத்தின் உயிர் நாடியாக இருந்ததுபோலவே, மயில் ராவணனின் உயிர்த் தத்துவமாக விளங்கியதும் ஒரு வண்டு தான். வேறு எந்த ஜீவனிலும் தன் உயிரை மயில் ராவணன் ஒளித்துவைக்கவில்லை.

இதுதான் இப்படியென்றால், சுக்கிராச்சாரியாரின் குயுத்திக்கு, வண்டின் ரூபந்தானே ஏற்றதாக இருந்தது? பரமசிவம் அடங்கி ஒடுங்கியதும் இந்த வண்டினால்தானே? ‘நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே’ என்ற வீரவாக்கியத்தை நக்கீரருக்கு ஊட்டியதும் ஒரு வண்டேயல்லவா?

‘வண்டினமுரலும் சோலை,’ ‘வண்டு மொய்க்கும் கூந்தலாளே’ ‘வண்டார்க்கும் தார் மார்பா’ என்று வர்ணிக்காமல் எந்தக் கவிதான் இருந்தான்? கவிகளுக்கு வரப்பிரசாதம் வண்டு; கம்பனும், காளிதாசனும், புகழேந்தியும், வண்டோடு கட்டிப் புரண்ட மாதிரி, பல வர்ணனைகள் புனைந்துள்ளதை நாம் கேட்கிறோம்.

வண்டு இல்லாவிட்டால், காவ்ய ரஸனை இல்லை. சுருங்கச் சொன்னால் காவ்யமுமில்லை; கவிகளுமில்லை.

கவியும் காவ்யமும் போனால் போகட்டும். மன்மதனுக்கு அல்லவா ஆபத்துவந்துவிட்டது! காதல் இல்லாவிட்டால் வாழ்க்கையில் உப்புசப்பு ஏது? காரசாரம் இல்லாமல் இருக்குமே! மன்மதனுக்கு மலரம்பும் கரும்பு வில்லும் இருந்துவிட்டால் போதுமா? மலரம்பின் பின்னே, கருவண்டு அம்மையும் எய்யாவிடில் காதலர் உள்ளத்தைத் துளைக்க முடியுமா? வண்டு போய் விட்டால், மன்மதனுக்கு வேலை போச்சு; மக்கள் சமூகத்தின் ஆனந்தமும் அற்புதமும் போச்சே. காதலர்கள், வண்டைத் தூதுவிட முடியாமல் போய்விடுமே! **காதல்—தபால் இலாகா** சேவகர்களில் முக்கியத்துவம் பொருந்திய வண்டை ஒழித்துவிட்டால், காவ்வியத்தோடு காதலும் மறைந்துவிடும்!

கவிகள் தங்கள் காவியங்களிலேயும், மன்மதன் தன் அம்பறுத்தூணியிலும், பெண்கள் தங்கள் மலர்க் கூந்தலிலும் வண்டுக்கு இடங் கொடுத்திருக்கிறார்கள்.

நானோ, அதை அடித்துவிட்டேன். என் மனம் எவ்வளவு கீழாகப்போய்விட்டது? உத்திரத்திலும், முகட்டு வளைகளிலும் ஒரு வண்டு இருக்க இடம் கொடுக்க எனக்கு

மனம் வரவில்லை. என் கடின சித்தத்தை அறிந்துதானோ, வாசல்முன் நிற்கும் மல்லிகை மலர்கள் :

வண்டின் வரவெதிர் பார்த்து நிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசி நிற்போம்.
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
உட்காரப் பீடமும் இட்டு வைப்போம்.

என்கின்றன? வண்டின் உயர்வையும், அதனால் அடைந்த காவ்யச் சிறப்பையும் நினைக்காமல், செய்த பாவத்துக்கு நான் என்ன செய்கிறது?

ரோஜாவுக்கு இருக்கும் உயர்ந்த தியாக புத்தியும் நல்ல மனசும் எனக்கு இல்லையே. இருந் திருந்தால், நான் வண்டை அடித்திருப்பேனா? நல்ல வேளையாக அது சாகவில்லை. வண்டைப் பார்த்து,

கரும்பினிலும் இனியரஸம் கருதிவைப்போம்-அதை
விரும்பிவரும் பாணருக்கு விருந்தளிப்போமே!

என்று ரோஜா சொல்லுகிறது. மலரில் மது வருந்த இந்த, பாணன் (வண்டு) செல்லட்டும். இப்படிச் செய்தாலும், நான் அதை அடித்த பாவம் தீருமோ, என்னவோ?

புல்லாங்குழல் தோன்றிய வெகு காலத் துக்குப்பின் நான் பிறந்தேனே, அதுவும் உலகத் தின் பாக்கியமே யாகும். மூங்கில்த்தோப்பில்

6

வண்டுகள் புகுந்து துவாரங்கள் போடுவதைப் பார்த்துக் கோபங்கொண்டு, அவற்றை நான் முன்னுளில் விரட்டி ஓட்டி யிருப்பேனுனுல், இன்று நீங்கள் குழலின் கீதாம்ருதத்தைப் பருகத்தான் முடியுமா ?

வண்டின் சப்த ஜால, வர்ண விசித்திரங்களை அறியாத என் போன்றவர்கள் உலகத்தில் நிறைந்திருந்தால், கவி, காவ்யம், சங்கீதம் இந்த மூன்றும் எப்போதோ இறந்திருக்கும்; இக்கலைகள் உயிருடன் இருப்பது என் போன்றவர்கள் குறைவாக இருப்பதால்தான் என்றே எனக்குத் தோன்றுகிறது.

தெரியாது

நான் எழுத நினைத்திருக்கும் புஸ்தகத்தின் பெயர், தெரியாது. புஸ்தகமாக இல்லாமல் ஒரே இதிகாசமாகவும் இருக்கலாம்.

அந்த அற்புதமான புஸ்தகத்தில் உலகத்துப் பாஷைகளில் உள்ள அருமை அருமையான விஷயங்கள் பக்கம் பக்கமாக இருக்கும். படங்கள், ஓவியங்கள், வர்ண வர்ணமாகக் காட்சியளிக்கும். முக்கியமாக எனக்குத் தெரியாதவை அதில் இருக்கும்.

எனக்கு, ஆதிநாவல் எழுதத் தெரியாது என்பதை எடுத்துக்காட்ட, வடுவூர் நாவல்களை அப்படி அப்படியே பக்கம் பக்கமாகக் காப்பி செய்வேன். துப்பறியும் நாவலுக்கு, ரங்கராஜு இருக்கவே இருக்கிறார். கதைகள் என்று வந்து விட்டால் தமிழ்நாட்டுக் கதாசிரியர்கள் அவ்வளவுபேரும் எனக்கு உதவிபுரிவார்கள்.

தமிழ் மொழியில் உள்ள அவ்வளவு கட்டுரைகளையும் நாவல்களையும் என் புஸ்தகத்தில் போடுவேன். வங்காளம், ஹிந்தி, மராத்தி,

தெலுங்கு, கன்னடம் முதலான கதைகளின் மொழிபெயர்ப்பையல்லவா தமிழ் நாட்டில் வெளியிடுகிறார்கள். எனது தெரியாது என்ற புஸ்தகத்தில் மூலத்தையே வெளியிடுவேன். சுந்தரத்தெலுங்கும், மலையாளமும், துளுவமும் மற்றும் ஏனைய பாஷைகளும் எனக்குத் தெரியாது. உலக பாஷைகள் எல்லாம் என் அறியாமைச் செல்வங்கள்.

கவிகள்கூட என் அறியாமைச் செல்வர்கள். எனக்கு விருத்தம் எழுதத்தெரியாது என்பதைக் காட்ட கம்பனும், வெண்பாவிற்கு நான் விரோதி என்பதைப் புகழேந்தியும் சொல்லுவார்கள். சமய விஷயங்களில் என் அறியாமைப் பரப்பைச் சுட்டிக்காட்ட பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரிநாதர் முதலாக ஆழ்வாராதிகள் உட்பட பலரும் என் புஸ்தகத்தில் ஒன்று கூடுவார்கள்.

இலக்கியம் தவிர விஞ்ஞானத்திலுள்ள பொக்கிஷங்கள் என்னென்ன எனக்குத் தெரியாது? எவ்வளவு எவ்வளவோ இருக்கின்றன.

சங்கீதத்தில் எனக்கு ஜன்ய ராகத்திற்கும், கர்த்தா ராகத்திற்கும் வித்தியாசம் தெரியாதது பெரிதல்ல. தோடியா, இல்லை கீர்வாணியா, புன்னாகவராளியா என்று சொல்லமுடியாத அவ்வளவு அறிவிலி. என் அறிவுக்குப் புறம்பான

ராகம், தாளம் முதலான பல சாஸ்திரங்களையும், பரதம் உள்பட இட்டு நிரப்பினுல் எவ்வளவு ரஸமாக இருக்கும்.

இப்படி ஒரு கோடு, அப்படி ஒரு கோடு போட்டு இதோ சித்திரம் என 'மாலி' கொடுப்பாரே, அது என்னுல் முடியாத விஷயம். மாலியின் கேலிச்சித்திரம் முதல் ரவிவர்மாவின் வர்ணப் படங்கள் வரை என் புஸ்தகத்தில் இடம்பெற யோக்கியதை உள்ளவை. வங்க சித்திரங்கள் இருக்குமா இருக்காதா என்பது இன்னும் நான் தீர்மானிக்கவில்லை.

நுண் கலைகள்தான் போகட்டும், சாதாரணமாக நெற்பயிருக்கு வரும் வியாதிகள்தான் தெரியுமா? சம்பா நெல் எது? சிறு மணி, குருவை, கல்மணவாரி, ஆனைக்கொம்பன் ஆகிய நெற்களின் ரகம் என் புத்தியில் குடியானவன் சொல்லும்போது படும். அப்பால் களத்தை விட்டு இந்தப் பக்கம் வந்தால் எல்லாம் நெல் மணிகள், அவ்வளவே. குற்றியலிகரம்,' குற்றிய லுகரம் இரண்டும் ஒன்றே என்பதாக நினைக்கின்ற நானு, நெற்பயிருக்கும், நெல் பிரட்டிக்கும் வித்தியாசம் கண்டுகொள்ள முடியும்? களையும் பயிரும் ஒன்ருகவே என் கண்ணில் படலாமா? பண்ணையாள், இது களை, இது பயிரின் மூடு என்று சொல்லும்போது எனக்கு ஒரே வியப்பு, ஆச்சர்யம், பிரமிப்பு.

போகிறது. புஷ்பங்களிடம் எனக்கோ உயிர். அடிக்கடி பழகுகிறேன். ஜாதிப் பூ என்பது பிச்சியா, இருவாச்சியா, மல்லிகையா? என் சந்தேகம் அடிக்கடி எழுந்து அடிக்கடி தீர்ந்துபோன காரியம். என்றாலும் அடிக்கடி சந்தேகம் வருவது நிற்கிறதா? புஷ்பங்களால் வண்டு அடையும் நன்மை மூன்று கூறு என்றால் மூன்றும் பூஜ்யம். அழகுள்ள புஷ்பம் வாசனை யற்றும், அழகற்றவை வாசனையோடும் இருப் பானேன் என்பதற்கு ஏதாவது விடை இருக்கவேண்டும். எனக்குத் தெரியுமா? தெரியாது.

வண்ணான், இடையன், ஹோட்டல் பையன் இவர்கள் எல்லாம் ஞாபக சக்தியில் வல்லுநர் கள். என் வீட்டிலுள்ள உருப்படிகளில் என் உருப்படியைக் கண்டுபிடிக்கச் சொன்னால் அத் தனையும் தப்பும் தவறு. ஆயிரக்கணக்கான பேர் வழிகள் துணிமணிகளில் என் துணிமணியைக் கண்டுகொள்ளும் வண்ணானும், நூற்றுக்கணக் கான குட்டிகளை, ஆடுகளை, "இதன் குட்டி இது, இதனுடைய தாய் அது" எனப்பிரிக்கும் இடையனும், இன்னின்னார், இன்ன பண்ட பதார்த்தம் இவ்வளவுக்குச் சாப்பிட்டார்கள் என நினைவு கொள்ளும் ஹோட்டல் மணியும் என் ஆச்சர்யத்திற்கு ஆளான புருஷர்கள். இவர்கள் திறமையைக் கண்டு தலை வணங்கு கிறேன்.

கூட்டத்திற்குப் போனால் எனது கால்ச் செருப்புகள் எனக்கே அடையாளம் தெரியாமல் தடவுவேன். எல்லோரும் போட்டுக்கொண்டு போன பின்புதான் என்னைப்போல ஒரு அறியாமைச் செல்வன் அந்தக் கூட்டத்திற்கு வந்தான் எனப் புலப்படும். என் கால் செருப்பை அவன் கால் கௌவிக் கொண்டு போய்விட்டது!

வீட்டிற்குள் எவ்வளவு எவ்வளவோ அறியாமைப் பொருள்கள் இருக்கின்றன. எழுதும் பேனா, ஓடும் கடிகாரம், பேசும் ரேடியோ, தொண தொணக்கும் மனைவி, ராகம் பாடும் குழந்தை ஆகிய பொருள்கள் எல்லாம் என் அறிவிற்கு அப்பாற்பட்டவை. காரண காரியத்தை நறுக்கித் தெறித்து அளவிட்டுக் கூற இயலாது. என்னைக் கண்டு நகைக்கும், நவீன நாகரிக நகைகளின் பெயர்களைச் சொன்னால், அவை எனக்கு வியப்பைக் கொடுக்கும். விதவித மான துணிகளுக்குள்ள பெயர்கள் தெரியாத அப்பாவி நான். வீட்டுக்கு வெளியிலே என் அறியாமைக் களஞ்சியங்கள் பலவாக இருக் கின்றன. ஜடசங்கமப் பொருள்கள் என் அறியாமைப்பற்றி கடாவுகின்றன. கேவலம் புல் எம்மாத்திரம்? அது "எனக்குப் பச்சை நிறம் எப்படி வந்தது? பசு வயிற்றில் எப்படிப் பாலாக மாறுகிறேன்? என்னிடமுள்ள விடமின் கள் எவை? நீ புல்லைத் தின்றால் உன் குணம் பசுவாக மாறுமா? இல்லை மாடாகவே இருக்

குமா?" என்று கேட்கும் கேள்விகளுக்கு என் பதில், விழிப்பு.

நான் விழிக்கிறேன். தலை நிமிர்ந்து வானத்தைப் பார்த்தால், துருவ நட்சத்திரத்திற்கும், வியாழனுக்கும் வித்தியாசம் தெரியாது. பஞ்சுப் பொதி மேகங்கள் "நாங்கள் யார்? ஏன் கருமை கொண்டோம்? ஏன் இடிமுழக்கம்? இடிக்கும், மின்னலுக்கும், மின்சாரத்திற்கும் சம்பந்தம் உண்டா?" இப்படிப் பல கேள்விகள். அறியாமையால் தலைகுனியாமலும் தலை நிமிராமலும் நேரடியாகப் போனால் தந்திக் கம்பங்கள், "நாங்கள் ஏன் நிற்கிறோம்?" என்கின்றன. ஓடிவரும் மோட்டார் தன்னிடமுள்ள கிளச், கியர், பெட்ரோல் பற்றிய விளக்கங்கள் தேவை என்கின்றன. தெருவிலே போட்டுள்ள தாரெண்ணெய் எந்த வகை எள்ளிலிருந்து எடுக்கிறார்கள்? அத்தரிலிருந்து விளையும் புஷ்பங்கள் யாவை. குழம்பிலிருந்து விளையும் தான்யங்கள், கரியிலிருந்து விளையும் மரங்கள்.........எல்லாம் என் மகத்தான அறியாமைச் சுரங்கத்தைப் பறை யறைவிக்கின்றன.

எங்கு நோக்கினும்,பக்தன் கண்ணில் கடவுள் தெரிகிற மாதிரி என் அறியாமைச் சின்னங்களைப் பார்க்கிறேன். வானத்தில், கானத்தில், ஓடையில், மேடையில், வயலில், வரப்பில், வீட்டில், காட்டில் எங்கும் என் அறியாமைகள் நீக்கமற நிறைந்திருக்கின்றன.

கேவலம் அணுக்குண்டு பற்றிக்கூட எனக்கு ஒன்றும் தெரியாது என்ருல் வேறு எதைப்பற்றி நான் அறிந்தவனுக முடியும்?

ஒவ்வொரு மனுஷனும் அழகான புஸ்தகம் ஒன்று எழுதக்கூடுமானுல் அதற்குரிய விஷயங்கள் அவரவருடைய 'அறியாமைகள்' தான். இதைவிட நல்ல விஷயம் உலகில் இல்லை. கொஞ்சமும் சிரமமின்றி, மொழி பெயர்க்காமலேயே உலகத்துப் புஸ்தகங்களிலிருந்து சகல குறைகளையும் வெளியிடலாம்.

நீங்கள் இந்த யோசனைக்கு மறுப்புச் சொல்கிறீர்களோ. அபிப்பிராய பேதம் கொண்டால், அதுவே அறியாமையில் எழுகிற சிந்தனைதான். நான் அறியாமையில் மன்னன் என்ருல், தாங்கள் அறியாமைச் சக்கரவர்த்தி. சக்கரவர்த்திக்கு முன் மன்னன் எம்மட்டு? தலைவணங்குகிறேன்.

உலகம் சுவாரஸ்யமாகவும், புதுமை நிறைந்த பொக்கிஷமாகவும் இருப்பதின் ரகஸ்யம் இதுதான். நமது அறியாமைகள் அனந்தம். தெரியாதன கோடாநுகோடி. தெரிந்தது கைமண்ணளவு.

அறியாமைகள் நித்யமானவை; அவை புதிர் நிறைந்தவை. இதை நாம் மறுக்க முடியுமா?

அந்திமந்தாரை

அந்திமந்தாரையை கிராமங்களில் தலைக்குப் பூவாகவும், விளக்குக்குச் சரமாகவும் கட்டிக் கொள்ளுவார்கள். பட்டணத்துப் பெண்கள் இதைத் தலையெடுத்துப் பார்க்காமல் கனகாம்பரம், நீலாம்பரம், வெட்டிவேர் இவையெல்லாம், வைப்பார்கள்! அந்திமந்தாரை வைப்பது அநாகரிகம். இது பட்டணப்போக்கு.

மந்தாரையில், வெள்ளை, ரோஸ், மஞ்சள் இந்த நிறங்கள் தான் நான் பார்த்தது. சங்கு புஷ்பம்கூட விளக்குக்கும் பூஜைக்கும் உண்டான பொருள். பட்டணத்திலே இதைச் சொன்னால் சிரிப்பார்கள்.

தும்பைப் பூவை, பிள்ளையாருக்கு அப்படியே கொட்டி அபிஷேகம் செய்ய, தேனீபோல ஒவ்வொரு பூவாக நான் பொறுக்கியதுண்டு. பவள மல்லிப் பூ சேகரம் செய்ய காலை நாலு மணிக்கே, கொட்டுகிற பனியில் குடலையுடன் செல்வதை நினைத்தால், பல்லோடு பல் கிடு கிடுத்து உடம்பே சிலிர்க்கிறது.

அவ்வளவு கரடு முரடான மரத்துண்டில், மொரமொரப்பான இலைகளின் இடையே, எப்படித்தான் மென்மையான பவளமல்லி மலர்கிறதோ? பாலை வனத்தில் சோலை கண்டது மாதிரி, பவளமல்லி மரத்தில் பவளமல்லிப்பூ! சேற்றில் மலர்ந்த செந்தாமரையைவிட, பவளமல்லிப் பூக்கள் உயர்வு பெற்றவை.

புஷ்பம் என்ற ஒன்றைக்கண்டு நான் சிரிக்கப் பழகியது அந்திமந்தாரையால்தான். பள்ளிக் கூடத்திலே, கடிகாரம் நின்றுபோனால், ஒரு பயல் போய் அந்திமந்தாரையைப் பார்ப்பான். அது மயங்கும் மாலைச் சூரியனிடம் சிரித்துக் கொண்டிருந்தால் மணி நாலு, (யுத்தகாலத்தில் மணி ஐந்து) என்று தெரிந்து 'டாண் டாண்' என மணி முழங்கும். என் தோழர்களுக்கும் எனக்கும் பள்ளிக்கூடச் சிறையிலிருந்து விடுதலை.

மழையோ வெயிலோ அது மணிகாட்டுவதில் தயங்குவதில்லை, தவறியதில்லை. டி. கே. சி. கவிதையைப் படிக்கிறமாதிரி பள்ளியில் நாங்கள் அந்திமந்தாரையை ரஸித்து வந்தோம்.

இதற்குப் பின்னும் நான் எத்தனையோ புஷ்பங்களைப் பார்க்க நேர்ந்தது. கவிதாரஸம் கொண்ட பூக்கள், தெய்வீகத்தன்மை நிறைந்த மலர்கள், மனதை மயக்கும் புஷ்பங்கள், வாசம் வீசி வலை விரிக்கும் பூக்கள்-இவையெல்லாம்,

அந்திமந்தாரைக்குப் பிறகே என் மனசில் இடம்பெறும்.

தாமரையைத் தண்டிலிருந்து அப்படியே கட்டமுடியுமா? இதழ் இதழாகப் பிய்க்க வேண்டும். ரோஜா, பூக்களின் ராஜாவாம். மாலை கட்டியபின்பு கவரிமான்போல இதழ்களை உதிர்த்துவிடும். அந்திமந்தாரை அப்படியா?

மோகனமாக விரிந்து, "என்னை வந்து பறித்துச்செல்லேன்."—இப்படிக் கொஞ்சும். அதைப் பறித்துச் சேகரம் செய்வதும், முல்லை, இருவாச்சி, பிச்சிபோல பொரநாட்டியம் சிரமம் தரும் காரியமா? சுலபம். வெகு சுலபம். காம்பின் நீளம், மாலை கட்டுவதற்கு ஏற்ற நீளம். வர்ண விசித்திரங்கள், மாலையாகக் கட்டிவிட்டால் துல்லியமாக இருக்கும். மதுரமான ஒரு ஸுகந்தம் வேறு மணக்கும்.

இதை, கிராமப் பெண்கள்தான் வைக்க வேண்டும்; செழித்து வளர்ந்த காட்டுக்கொடியில் பூக்கள் பூத்தமாதிரி கண்ணுக்கு ரம்மியமாக இருக்கும். பட்டணத்து போஞ்சான், சவரித் தலையோடு, கண்ணைக் கரிக்கும் நாகரிகச் சின்னங்களுக்கு ஊடாக, அந்திமந்தாரை வைக்காமல் விட்டது நாம் செய்த பாக்கியம்.

அழகுக்கு அழகு செய்வதில் ஒரு அழகு இருக்கிறது. அந்திமந்தாரையை சூரியன் பிரதி

பிம்பமாய் நிலவுவதாக மலரும் மாலையும் சொல்லுகிறது.

"விண்மணி ஆழியில் வீழ்வதுண்டு—வாசம்
வீசு மந்தாரை மலர்வதுண்டு."

அந்திமந்தாரை அழகானது. அந்தியின் மயக்கத்திற்கு ஒரு ஆறுதல் நமக்கு ஏற்படுகிறது. இந்தப் பூவின் பெயரழகு, வேறு எந்தப் புஷ்பத்திற்கு இருக்கிறது? ரோஜா, தாமரை, பாரிஜாதம், செண்பகம், ஆம்பல், நீலோற்பலம். எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். மூன்று முறை சொல்லிப் பார்த்தால் அந்திமந்தாரை என்ற இனிய நாதம், அமிர்த தாரைபோல விழுவதைக் காணலாம்.

மழைக்காலம்

மழையே நீ வா, வா, வா என்று தவளைகள் ஆதியில் ங, ஞ, ண, ந, ம, ன சொல்லின.

தவளைக்குப் பின் கவிஞன் தன் கவிகளிலே மழையைப்பற்றி, அமிர்த தாரையாக ஏக்கக் குரல் கொடுத்தான்.

பிறகு டாக்டர்கள் மழைக்கு ஏங்கிக் கிடக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

இன்று மழையை வரவேற்கிற நபர்கள் டாக்டர், கவிஞன், தவளை. மழை வர்ணனை பாடாத கவி, கம்பன் முதல் பாரதி வரை யாரும் இல்லை. 'மழையுள்ளபோதே மருந்தை விற்றுக் கொள்' என்பது மருத்துவ காலப் பழமொழி.

மழைக்காலம் என்றால் எனக்கு ஒரே பயம். மேகத்தைக் கண்ட மயில்போல ஆகவேண்டும். எனது கலாபமான போர்வை, கம்பளி, ஃப்ளானல் முதலானவை பெட்டியை விட்டு வெளி வந்து விரிக்கப்படும். கட்டிலும் மெத்தையுமாக கிடக்கவேண்டும். படுக்கையில்தான் என்னை மூன்று ரஸிகர்களும் சந்திப்பார்கள்.

கொட கொட என தோட்டத்தில் மழைத் தாரைகள் விழும் ஓசை. சவுக்காலடிக்கப்பட்ட சிங்க கர்ஜனை போன்ற இடியின் நாதம். ஒரே குளிர்ச்சி வெட வெடக்கும். கவியும், டாக்டரும் என் கையையும் காலையும் பற்றிக்கொண்டு தரிசனம் தருவார்கள். என்னை சாந்தப்படுத்தி தூங்க வைப்பார்கள்.

ஆனால் தோட்டத்து மண்டூகங்கள் இன்னும் மழைப்பாட்டு பாடிக்கொண்டிருக்கும்.

என் அறையிலுள்ள கவிகள் காதலர்களுடைய மழைக்காலப் பிரிவை அருமையாக வர்ணிப்பார்கள். மழையிலேதான் காதல் பிறக்கிறது போலும். இல்லாவிட்டால் 'மேகதூதம்', 'கார் விடு தூது' என்ற காவியங்கள் பிறக்குமா? மேகத்தில்தான் காதலியின் முகம் தெரியும். மழை முகிலில், அவள் கருங்கூந்தல் காட்சியும், இடித்துத் தெறிக்கும் மின்னலில், இடையும் காதலர்கள் கண்களுக்குத் தெரியும்!

டாக்டர் கண்களிலே மேகம் எப்படிப் படுகிறது? தூற்றல் எப்படி ஸ்பரிசம் கொடுக்கிறது? தூற்றல் தும்பல், அடைமழை, இடியோசை இவைகளிலே இன்புளுயென்சா, கப ஜுரம், பித்த ஜுரம், மலேரியா, காலரா இவைகளைக் காண்கிறான். அது டாக்டர் கண் திருஷ்டி.

மழை, கவிஞனுக்கு கவிதையும், டாக்டருக்கு நோயாளியும், தவளைக்கு மெல்லினமும் கொடுக்கின்றன. நமக்கோ இல்லாத பொல்லாத அசௌகர்யங்களை அள்ளி வழங்குகிறது. வீட்டுக்குள்ளேயே 'ஷவர்பாத்' செய்ய நேரிடுகிறது. இதைவிட, வெளிப்பக்கம் போய் சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்யலாம். ஆனால், எங்கு பார்த்தாலும் ஒரே ஜலப் பிரளயம். குமிழித் தரங்கங்கள், தண்ணீர் ஓடைகள். வீட்டுக்குள் தெப்போற்சவம். சிவ சிவா! துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை, என்றாரே வள்ளுவர், அதுபடி எங்கும் துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கியாக இருக்கும். ஆனால் குழாயடியில் போய்ப் பார்த்தால், அது 'தூ...தூ உ' என தும்மிக் கொண்டிருக்கும். பொட்டு ஜலம் வருமா என்றால், வராது.

குழாயில் ஜலம் வராவிட்டால் நாம் ஒன்றும் செய்யமுடியாது. மழையை நம்பி சாதகப் பட்சிகளோ, சகோரப் பட்சிகளோ வாழ்கிறதாம். ஆனால் நமக்கு மழையில்லா விட்டால் அதை வரவழைக்கப் பல வழிகள் தெரியும்.

சுப்பம்மை ஆச்சி, வத்தல் வடகம் போட்டால் வானத்திலே கருமேகங்கள் 'கடாம் புடாம்' என உருளும்.

உளுந்து நனைத்தால் ஆலங்கட்டி மழைக்குப் பதில் அப்பளக் கட்டி மழை பெய்கிறது என்பாள், காந்திமதி.

என் வரையில், குடையில்லாத சமயம் மழை கொட்டுவதைப் பார்க்கிறேன். வெளுத்த வேஷ்டி, சட்டை போட்டு விட்டால் மழை வந்து என்னைக்காஷாய வஸ்திரதாரி ஆக்கிவிடும்!

ஒருவர் உளறினர், "நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" யென்று. வாஸ்தவம். என் உளறலுக்கு, (அதாவது என் குடையை யாராவது அபேஸ் செய்து கொண்டு போனதும் என் உளறலுக்குப்) பயந்து என் தலையில் மழை பெய்கிறது.

மழை பெய்ய வேண்டுமானல், தெருவிலே கொடும்பாவி கட்டியிழுத்து ஒரே ஒப்பாரி வைப்பதும், வருண ஜபம், சாமவேதம் செய்வதும் எனக்குத் தெரியும், ஆனல் ஜப்பானியர்களுக்கு கொடும்பாவியும் வருண ஜபமும் தேவையில்லை. ஒரு கருப்பு நாய் போதும். வருண ஜபம், கொடும் பாவி இரண்டும் செய்கிற வேலையை ஒரு கருப்பு நாய் (பலியிட்ட பின்பு) செய்கிறதாம்!

ஜாவாத்தீவில் நாயைவிட பூனைக்கு முக்யத்துவம் கொடுக்கிருர்கள். இரண்டு பூனைகளை குளிப்பாட்டி (ஆணும் பெண்ணுமாக இருப்பது முக்கியம்.) ஊர்வலம் விடுவார்களாம். அடாடா, பூனை அழுத கண்ணீரன்றோ மழையாக வருகிறதாம்!

அஸ்ஸாமில் ஆட்டுக் குட்டியை மலையுச்சியில் கொண்டு பலியிட்டால்தான் மழை வரும் என்கிருர்கள்!

ஆனால் ஆந்திரர்கள் தங்கள் சுந்தரத் தெலுங்கில் பாட்டுப் பாடுவார்கள். அந்தப் பாட்டு கும்மியாக இருக்கும். கும்மியடிக்கும் பெண்கள் கூட்டத்தின் மத்தியில் சுளவு தாங்கிப் போவார்கள். அதில் வேப்பிலை போட்டு மூடியிருப்பார்கள். அந்த வேப்பிலைக்குள் இருப்பது தவளை! அடடா, மழையை 'வா வா வா' என அழைத்த ஆதிக் கவியையே வான மண்டலம் அனுப்பி மழையைப் பெற, தூது அனுப்புகிறார்கள் போலும்.

பொதுவுடைமைத் தத்துவக்கார ரஷ்யர்கள் (Fir tree) என்பதில் ஏறி ஒருவன் முரசறைவான். (இது இடியென்பது ஐதீகம்.) இன்னொருவன் தீவட்டி (இது மின்னலாம்) காட்டுவான். தீவட்டி மின்ன, முரசொலிக்க அவ்வேளையில் மாங்குழையால் புரோக்ஷணம் செய்கிற மாதிரி தண்ணீரை இறைப்பானும்! இதைக்கண்டு வருணன் வெட்கி மழை பொழிவானும்.

எனக்கு என்னமோ இதெல்லாவற்றையும் விட சீனர்கள் செய்கைதான் பிடித்திருக்கிறது. காகிதத்தால் ஓர் பொம்மை அல்லது கட்டையில் உருவம் செய்து, அந்த மழை வரும் வரை பொம்மையை அடியும் உதையும் கொடுப்பார்கள். அவர்களுடைய Lung Wong (லங்-வொங்) என்ற தெய்வத்தை 1888ம் வருஷம் மழை கொடுக்காத குற்றத்திற்காக ஐந்து நாள் கடினக் காவலில் வைத்திருந்தார்களாம்! எப்படி

யோசனை? நல்லவேளை, தூக்குத் தண்டனை இல்லையே!!

நீங்கள் சொல்லலாம் சயாமியர்கள் செய்கை தான் வேடிக்கை யானது, சுவாரஸ்ய மானது என்று. நான் ஒப்புக்கொள்ளவில்லை.

சயாமியர்கள், தங்கள் தெய்வத்தை மழை வேண்டுமானால் கூரையைப் பிரித்து வெய்யிலில் உலர்த்துவார்கள்; மழை பெய்யும். வெயில் வேண்டுமானால், கூரை வேய்ந்து இருட்டடிப்புச் செய்வார்கள்; வெய்யில் அடிக்கும்.

இதைத்தான், என் வீட்டு முதலாளி செய்கிறனே! ஆனால் ஒரு லாபம். அவர் கூரை வேய்கிறதும் பிரிக்கிறதும் இல்லை. சதா சர்வதா நான் சயாமித் தெய்வம்போல், வெயில் காலத்தில் அதிக வெயிலும், மழைக் காலத்தில் அதிக மழையும பெற்று வாழ்கிறேன்.

என் தோட்டத்து ங, ஞ, ண, ந, ம, னக்கள் மழைப் பாட்டுப் பாடுகின்றன.

என் புஸ்தகத்துக் கவிகள் "இன்னும் மழை, மழை, மழையே வா" என இடியோசை போடுகின்றனர்.

எனது டாக்டருக்கு உச்சி குளிர்ந்து விடுகிறது.

எனக்கு ஜன்னி பிறக்கிறது!

என் பேனா

எழுத்தாணியால் எழுதினால் 'கிறுக்கு கிறுக்கு' என்று ஓசை செய்யும். பேனா அப்படிச் செய்யாது. வாஸ்தவம். என் பேனாவால் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடியிருக்கிறார்கள். வில், வாள், துப்பாக்கி இதைவிட என் பேனா வலிமை வாய்ந்தது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

என் பேனா எழுதியதை நான் படிக்க முயல்வேன். காந்திமதி நான் படித்ததை மறுப்பாள். இருவருக்கும் தர்க்கம் வரும். யார் படித்தாலும் ஒருவர் படித்ததைப்போல இருக்காது. மேக வர்ணப் பட்டிலே நினைத்த நினைத்த வர்ணங்கள் பிரதி பலிப்பதுபோல, மனோரஞ்சிதப் பூவிலே எண்ணிய வாசனை எழுவதுபோல, படிப்போருக்குப் புதிய புதிய கருத்துக்கள், வாக்கியக் கோவைகள் புலனாகும்.

எனக்கும், காந்திமதிக்கும் ஏற்படுகிற தர்க்கத்தைக் கேட்டுச் செவிடாகப் போனவர்கள் அனந்தம். ஒரு சின்ன உதாரணம். என் பேனா எழுதியிருக்கிறதை நான் படிக்கிறேன்.

"நயம் தேங்கா யெண்ணெய் சிரங்கில் பட்டால், தேங்கா யெண்ணைக்கு ஆபத்து ஒன்றும் இல்லை. புண்ணுக்கும் ஆபத்து இருக்காது. இரண்டும் பரம செளக்யமாக இருக்கும்."

இது என் வாசகம். இதே விஷயத்தை அவள் பின் வருமாறு படிப்பாள்.

"நல்ல தேங்காயைச் சிரட்டையில் நெய், மண் ஒன்றும் இல்லை. புண்ணுக்கு, சப்பாத்தி எடுக்க கரண்டிக்கு செளக்யமாக இருக்கும்."

மூன்ருவது நபர் படித்தால் அது இன்னும் விசித்திரமாக இருக்கும். படிக்கவே முடியாது என்பதே விசித்திரம். ஆனல் இதை எப்படித் தான் அச்சுக் கோப்பவன் படிக்கிருனே.

என் பேனுவுக்குச் சோம்பல் அதிகம். வேக மும் ஜாஸ்தி. ஆரம்பத்தில் வேட்டை நாய் மாதிரி புறப்படும்; எழுத்துக்கள் முயல்க் குட்டி கள்போல் குண்டு குண்டாக இருக்கும்; பிறகு, போகப் போக, வரிகள் புளிமூட்டையாக முட்டி மோதிக்கொண்டு, மூன்ருங்கிளாஸ் பிரயாணி போலத் திணறும். டிக்கட் வாங்குகிற இடத்தில் ஒருவர் மேல் ஒருவர் எகிறிக் குதிக்கிற காட்சி தெரியாதவர்கள், என்னுடைய கையெழுத்துப் பிரதியிலுள்ள, வரிப் பிளப்புக்குமேல் வரி பிளப் பைப் பார்த்தால் போதும். ஒரே அடித்தல், திருத் தல், நீக்கல், குறைத்தல். இவை எறும்புப் புற்றில் ஒரு துண்டு நெருப்பு விழுந்ததும், எறும்புகள் சாரைசாரையாக திக்குத் திசை கெட்டு அலையும்

பரிதாபக் காட்சிதான். பின்னர் போகப்போக எட்டுக்கால் பூச்சி மைக்கூட்டிற்குள் விழுந்து, ஒரு ஐரோப்பிய நடனம் செய்த நிழற்காட்சி தோன்றும். சுருங்கச் சொன்னால், என் சொல்லோவியம் வங்க சித்திரமாகக் காட்சியளிக்கும்!'

என் பேனா என் கற்பனைக்கு வாகனம். குதிரை மாதிரி என்று சொல்லலாம். இதற்குப் பேப்பரைக் கண்டால் கடிவாளம்தான். ஆனால் என் பஞ்ச விரல்கள், சட்டைப்பை இவற்றைக் கண்டால் கொள்ளுப்பை மாதிரி வாயைத் திறந்து விடும். மையாபிஷேகம் சொல்லி முடியாது.

இக்கொடிய ஆயுதத்தைக் கையால் தொடுவானேன்? ஜலதோஷமுள்ள மூக்கை யாரும் கிள்ளிவிடுகிறதில்லை. பணம் இரும்புப் பெட்டியில் இருப்பதைவிட கையிலிருப்பது மேலன்றோ. பேனாவே எனது தெய்வம். தெய்வம் எனக்கு என் பேனாதான். முருகனுக்கு வேலும், சரஸ்வதிக்கு வீணையும், மாரனுக்கு கரும்பு வில்லும் எப்படியோ அப்படியே எனக்குப் பேனா.

இன்னும் என்ன சொன்னாலும் மிகையாகவேபடும். என்னை அரிச்சந்திரனாகச் சற்று பாவித்துக்கொள்ளுங்கள். அப்படியானால் என் பேனா சந்திரமதி! அவள் மாங்கல்யம், அரிச்சந்திரன் கண்ணுக்குத் தெரிந்தது, உலகத்துக்குத் தெரியவில்லை. என் பேனா சந்திரமதியின் மாங்கல்யம் போன்றது!

'சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை' என்ற கவியின் வரியோடு என் பேனாவின் பெருமையையும் சேர்த்துக் கொள்வதில் என்ன தவறு?

தொலைந்த குடை

எங்கோ ஒரு புண்ணியசாலியிடமுள்ள குடை என்னிடம் வரத் துடி துடிக்கிறது. ஆனால் ஊமையான அது எப்படிப் பேச முடியும்?

நம்மோடு பழகிவிட்ட பொருள்கள்—பேனா, கைத்தடி, விசிறி......முதலியவை—நம் பழக்கத்தை நன்கு அறிந்தவை. (மனைவியர் இதற்கு விதிவிலக்கு.) கடையிலிருந்து எஜமான் என்று ஒருவனைக் கைப்பற்றிக்கொண்டால், அவை நம் மீதும், நாம் அதன் மீதும் ஒன்றி விடுகிறோம். பரஸ்பரம் காதல்! தொலைந்துபோன என் குடை பேசமுடியுமானால், இப்படித்தான் சொல்லும்:—

"ஐயா, என்னை என் எஜமானரிடம் கொண்டுபோய்க் கொடுத்து விடும். உமது பழக்க வழக்கம் நடை உடை எனக்குப் பிடிக்க வில்லை. நானும் அவரும், வெயிலும் நிழலும் போல் வாழ்ந்தோம். என்னைக் கணமும் மறக்கவே மாட்டார். எங்கு போனாலும் பகலோ இரவோ, சதா அவர் கைப்பிடி எனக்குள் அடக்கம். நான் இல்லாமல் வெளிக் கிளம்பு வாரா?

"எங்கெல்லாம் சுற்றிப் பார்த்திருக்கிறோம்? ரயிலில், மோட்டாரில், வில் வண்டியில் ஏன் ஸைக்கிளில் கூட நான் அவரோடு போய் இருக்கிறேன். அவரைத் தவிர, யாரும் என்னைத் தொட்டு அறியார்கள். ஊர் ஊராக, அப்பப்பா, எவ்வளவு ஊர்கள்! ட்ராமும், பஸ்ஸும் சடுகுடு ஆடும் பட்டணம், உப்புப் பொதிந்த கடற்கரை ஊர்கள், புழுதியும் புழுக்கமும் நிறைந்த ரோடுகள். ஆம், மரங்கள் தரும் குளிர் நிழல்போல அவரும் நானும் ஒன்றே; கவிதையும் சங்கீதமும் போல், பாவமும் பாட்டும் போல நாங்கள்."

"ஒரு சமயம், காசி வரைக்கும் போய் வந்திருக்கிறேன். வருகிற வழியில், வெயில் கொளுத்தும் ஆந்திர நாட்டை நினைத்தால், என் உடம்பே, கருத்து—இல்லை, வெளுத்து விடுகிறது. கிராமத்து வயலிலே, நாற்று நடும்போது பார்த்த காட்சிகள்; குளக்கரையிலே அறுவடை சமயம் 'கங்காணம்' செய்ய, பிணையல் அடிக்குமிடத்தில் மிதந்துவரும் வெண்கதிரின் பச்சை மணத்தையும், பூவரச மரத்தடியில் விற்கும் தட்டப் பயற்றின் வாசத்தையும், வைக்கோல் பிரியால் ஊஞ்சல் கட்டி, பூவரச மரக்கிளை மேலும் கீழும் ஆடுவதையும், அந்த ஆட்டத்தாலே மெய்மறந்து சிறுவர்கள் கூத்தாடுவதையும் பார்த்த கண்கள்.........

"ஏதோ பீத்திக் கொள்ளுவதாக நினைக்கலாம். வாஸ்தவம் நூற்றுக்கணக்கான பீத்தல்

கூட இருக்கிறது. என் பெருமையை நீங்கள் அறிய முடியாது!

"என் எஜமானருடைய கடன்காரர்கள் வந்தால், நான் தடுத்தாட்கொள்ளுவேன். அவரது கண் பார்க்காமல், போய் எக்கச்சக்கமாக கடன்காரரிடம் மாட்டிக்கொள்ளாமல், நானுகவே மறைத்துவிடுவேன். தொண தொணப்புகள் வந்தால், அப்போது அபயம் அளிக்கிறதும் நான்தான். வீதியில் போகும்போது, மதுரையில் என்று ஞாபகம், யாரோ ஒரு அம்மாள் மூன்றும் மாடியிலிருந்து குப்பை கூளம்-கறிகாய்த் தோல், அழுகல் மிளகாய், தக்காளி இந்தக் கதம்பத்தை-எறிந்தாள். நான் மட்டும் இல்லாவிட்டால், நடுத்தெருவில் என் எஜமானரைப் பார்த்துச் சிரிப்பார்கள். இந்த அபிஷேகம் மட்டுமென்ன? எத்தனையோ தடவை, தெரு ஓரங்களில் போகும்போது நேரவிருந்த மாடி அபிஷேகங்களை நான் தாங்கியிருக்கிறேன். கொக்கு, காக்கை, இதன் எச்சங்கள் இதை.........சிவசிவா சொல்லிக் கொண்டே போகலாம். தெருவிலே எஜமானரும், அவர் மனைவியும் போகும்போது, மனைவியின் கண்கள், நகைக் கடை, புடவைக் கடை இதிற் படாமல் தடுத்ததைச் சொல்லவா? அல்லது நகை யணிந்துவந்த நங்கைகளை அவள் பாராதபடி மறைத்த கதையைச் சொல்லவா? ஒன்ரு இரண்டா, ஒரு கோடி இந்தமாதிரி சொல்லலாம்.

"இவ்வளவெல்லாம் ஏன்? என் எஜமானன் ஒருநாள் என்னைப்பற்றி ஒரு கவி சொன்னார்.

பகலோன் தெறும் கிரணம், பாய் பறவை யெச்சம்;
மிக மேலுரு தகற்றும்; விண்ணின்—முகிலதனால்
பெய்யு மழையைத் தடுக்கும், பேரழகுமாம்; ஒருவர்
கையிற் குடையிருந்தக் கால்.

அவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்த என்னை என் எஜமானனிடமிருந்து பிரித்தவரைத் துரோகி எனச் சொல்லுவேன்.

"எஜமானரிடமிருந்து யாரும் என்னை இரவல் குடையாகப் பெற முடியுமா? அதற்காக ஒன்று வைத்திருக்கிறார். அது எப்படி இருக்கும் தெரியுமா? எனக்கு நாலடி கொடுத்தார்; நான் இரண்டடி கொடுக்கிறேன். அதுவே போதும்.

பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குந் தாங்காது
கோஞ்சமா அதனுள் வெயில் ஒழுகும்!

ஆமாம், வெயில் ஒழுகும், மழை பாயும். அதையா, இப்போது தொட்டிருப்பார்?

"ஊஹூம்! ஒரு சமயம் மறதியாக என்னை வீட்டில் வைத்துப்போய், மழையில் நனைந்து வந்து நிமோனியா ஜுரத்தில் படுத்துக்கொண்ட போது, அப்படியே கண்ணீரும் கம்பலையுமாக இருந்தேன். டாக்டர் வரும்போதெல்லாம் எனக்கு நடுக்கம். அப்புறம் என் தவம் பலித்தது; அவர் பிழைத்தார்.

"அதற்கு ஆறு மாசம் கழித்து வெறிநாய் ஒன்று துரத்தியபோது அர்ச்சுனன் அம்புபோல், நான் உதவினேன். என்னைக் காட்டவே அது வெறுவி மிரண்டு ஓடிற்று! எவ்வளவு பயங்கரமான விபத்து.

"அவரோடு ஐந்து வருஷங்களுக்குமேல் வாழ்ந்துவிட்டேன். அவர் செய்கை, வாழ்வு எல்லாம் எனக்கு நிழற் பாடம்.

"இப்போதுள்ள நீர், என் சொந்தக்காரராக இருக்கலாம். ஆனால் எஜமான் ஆகமுடியாது. அந்தப் புண்ணியமான மனுஷன்தான் என் எஜமான். அவரிடம் என்னைக் கொண்டுபோய் விட்டு விடுங்கள். ஹோட்டலில் காப்பி சாப்பிட இன்று வருவார். கட்டாயம் வருவார்......... போகலாமா? உங்கள் குடையும், என்னைப்போல் அவதிப்படுகிறதோ என்னமோ? என் எஜமான் என்னைக் காதலித்ததுபோல் யார்......காதலிக்கிறது......?"

இப்படித்தான் எனது தொலைந்துபோன குடை சொல்லுமென நினைக்கிறேன்.

மகாநாடுகள்

மகாநாடுகள் கூடுகின்றன; கலைகின்றன; மறுபடியும் கூடுகின்றன. இப்படிக் 'கண்ணு மூச்சி' ஆடுவதில் என்ன பயன்? யாருக்குப் பயன்? எனக்கு என்னவோ இந்த மகாநாடுகளால் எவ்வித பயனும் ஏற்படக் காணோம்.

ஒரு சமயம் என்னூரில் நடந்த மகாநாடு, (தமிழ்ப் புலவோர் மாநாடு என்று அச்சிட்டிருந்தனர்.) மாடு ஆனதைப் பார்த்தேன். குறும்புக்காரர் சிலர் மாநாட்டில் உள்ள 'நா'வை சுவர் விளம்பரங்களிலிருந்து சுரண்டி விட்டார்கள். விபரீதமான அர்த்தம் கொடுத்தது.

இதைவிட விபரீதம் அந்த மாநாட்டில் நான் பெற்ற அனுபவம். அன்று பிடித்த ஒற்றைத் தலைவலி, அடுத்த புலவோர் மாநாட்டில் தான் (ஊடே ஏழு வருஷம் இடை வெளி) குணமாகி, இரட்டைத் தலைவலியாக மாறிற்று! தலைவலி இருக்கட்டும். மகாநாடுகள் நடக்கும் போது ஒரு உண்மை புலனாகும். பொன் மொழியார்கள் 'காலம் விரயமானால் ஆனதுதான். அதைத் திரும்ப பெற முடியாது' என்று சொல்வது மகாநாடுகளில்

தான் அறியமுடியும் என்பது ரொம்ப உண்மை. கால விரயமும், காலதேவலின் சுழற்சியும் மகாநாடுகள் நடக்கும் போதுதான் என் நினைவில் வரும்.

மகாநாடுகள், பொதுக் கூட்டங்கள் இங்கெல்லாம் வரும்படி நண்பர்கள் அழைப்பார்கள். சில இடத்திலிருந்து அழைப்புகள் வரும். கூட்டத்திற்குப் போகாமல் எத்தி விடுவேன்.

போன மாதம் ஒரு இலக்கியக் கூட்டத்தில் தான் பேசப் போவதாகவும், அதைக் கேட்டு 'அனுபவிக்க' என்னை அவசியம் வரும்படியும் ஒரு நண்பர் கெஞ்சினார். எனக்கோ கூட்டம் என்றால் வேப்பங்காய். அதே தேதியில், அதே நேரத்தில் வேறு வேலை இருப்பதாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். பொய் சொல்வது என்பதை, மகாநாடுகள், கூட்டங்கள் இவை சம்பந்தமாகத் திருப்தியாக கடைப் பிடிக்கிறவன். ஆகாசப் புளுகு, அண்டப் புளுகு இவையெல்லாம் டன் கணக்கில் புளுகி வைப்பேன். நான் மனமாரச் சொன்னதை நண்பர் செவியாரக் கேட்டார். இருந்தாலும் விதி யாரை விட்டது?

அவர் தம் பிரசங்கத்தை வேறு தேதியில் மாற்றி வைத்திருப்பதாகவும், அதற்கு என்னை வரும்படியும் கழுத்தறுத்தார். சம்மதித்தேன் என்று வையுங்கள். ஆனால் அவர் பிரசங்க தினத்தன்று மாலையில் என் வீட்டிற்கே வந்து

விட்டார், கையோடு கூட்டிப் போக. இந்த ஒரு கைங்கர்யத்தை உத்தேசித்தே, பொய் சொல்லுகிற விரதம் பூண்ட எனக்கா, பொய் புடலங்காய் புடலங்காயாய் வராது?

எனக்கு ஒரே தலைவலி, ஜலதோஷம், மண்டைக் கனம் என்று சொன்னதோடு, மருந்துகளையும் தைலங்களையும் தடவி அறை முழுவதும் சுகந்தம் பரவச் செய்தேன். இதற்காக வகை வகையான பில்லைகள், களிம்புகள், பாம்கள், வேர்கள், வில்லைகள் வைத்திருக்கிறேன். எனது அறையின் மருந்து வாடை பொறுக்க முடியாமல் நண்பர் போய்ச் சேர்ந்தார்.

அடிக்கடி என்னைக் கையோடு இழுத்துப் போக வருகிற பிரசங்கிகளுக்கு, சமயோசிதமாக இன்னுஞ் சில வியாதிகள், மனனம் பண்ணி வைத்திருக்கிறேன். வயிற்றுவலி, வாயுப்பிடிப்பு, கால் குடைச்சல், மூச்சடைப்பு, பல்வலி, குடல் அனுபந்தம்.........இப்படி பலப்பல. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இல்லாத இந்த வியாதிகள் வேறு எதற்காக இருக்கவேண்டும்?

ஆனால், மேற்படி மனனவியாதிகள் இரண்டு கட்டங்களில் பயன் தராது! அதாவது, பிரசங்கி டாக்டராக இருந்துவிட்டால், அவர் பரிசோதனை செய்வார். அவரிடம் சிகித்சை பெறுவதைவிட பிரசங்கம் கேட்பது புத்திசாலித் தனமல்லவா? இன்னொரு கட்டம் என்னைப் பேசவோ, தலைமை

வகிக்கவோ கூப்பிட்டு விட்டால் என் கற்பனை வியாதிகள் கூட்பிடுகிறவர்களிடம் பலிக்காது.

பிரசங்கம் கேட்பதற்கு, ஒன்று என்னைப் பேச அழைக்கவேண்டும்; அல்லது தலைமை வகிக்கச் சொல்லவேண்டும். அதுவும் இல்லா விட்டால் என் டாக்டர் நண்பர் பேச்சாளனாக இருக்கவேண்டும். டாக்டர் நண்பர்கள், இரண் டொரு தடவை பாதி பிரசங்கத்தில் இறங்கி வந்து எனக்கு மூர்ச்சை தெளிவிக்க நேர்ந்ததால், என்னை நம்பி எந்த டாக்டரும் பிரசங்கம் கேட்க அழைத்துப் போவதில்லை. என்னைக் கண்டால் அவ்வளவு சிம்ம சொப்பனம் டாக்டர்களுக்கு.

நாலாம் நாள், நாணு தெருவில் போய்க் கொண்டிருந்த என்னைக் கை தட்டிக் கூப்பிட் டான். அவன் நின்ற இடம் ஹோட்டல்; ஆகவே அவனைப் பின்பற்றினேன். ஏதேதோ பேசிக் கொண்டு சாப்பிட்டு வேறு வேலை எதுவும் இல்லை யென்று, அவனிடம் ஒப்புக்கொண்டு, வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டபோது, "அப்படியானால் நான் இன்று 'கம்பனும் அவன் காலத்து வம்பர்களும்' என்ற விஷயம் பற்றிப் பேசுகிறேன். நீ வாயேன்" என்றான். யானைக்கும் அடி சறுக்கும் என்பதை நினைத்து அவன் வலைக்குள் சிக்கிக் கொண்டேன். உண்ட வீட் டிற்கு இரண்டகம் செய்வது தப்பு என்ற ரீதியில் போய்த் தொலைத்தேன். நாணுவிற்கு ரொம்ப சந்தோஷம்.

பேச்சுகள் ஆரம்பமாயிற்று. நான் என்னமோ பிரசங்கங்களைக் கண்டால் விஷவாயுவாக மதிக்கிறவன் என எண்ணவேண்டாம். நான் மூகமூடி மாதிரி. எந்தப் பிரசங்கமும், எந்தப் பிரசங்கியும் என் காதைத் தமர்போட முடியாது. எருமை மாட்டில் மழை பெய்த கணக்குத்தான். இப்பேர்க் கொத்த பெருந் தன்மை—நம்மைப் பிறர் தொண தொணப்பதை மனசில் வாங்காமலே இருந்து விடும் குணம்— பொது ஜனங்களிடம் இருந்தால்? எந்தப் பிரசங்கியும் நம்காதையும் மனசையும் புண்ணாக்க முடியாது. உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கிறதோ?

எனக்கு வெகு சுலபம். பெர்னாட்ஷாவிற்கு குத்தல் மொழியும், ராஜாஜிக்கு உவமையும், காந்திஜீக்கு அஹிம்ஸையும், டி. கே. ஸிக்குக் கவிதைப் பரீட்சையும், மதுரை மணிக்கு ஸ்வரப் பின்னலும் எவ்வளவு சுலபமோ அவ்வளவு சுலபம், என் கண்கள் பிரசங்கியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அறிவுக் கண்கள் மனக் கணக்குப் போடும்.

வீட்டில் ஒரு வருஷமாக என் பட்டு அங்க வஸ்திரத்தை எத்தனை தடவை வண்ணான் வெளுத்துத் தந்தான்? அவன் கிழித்த பாடிகள் எத்தனை? பால்க்காரி எத்தனை நாள் வரவில்லை? அந்த வருஷம், மாலை வேளையில் 6-30க்கு அன்றுடம் நான் செய்த காரியங்கள் என்னென்ன? அந்த

வருஷம் நான் தின்ற தக்காளிகள் எத்தனை ராத்தல்? இப்படி எவ்வளவோ விஷயங்களை மனக் கணக்குப் போடுகிறது.

முக்கியமாக, கவிகள் மானசீகமாகக் கட்டுகிறது; இரண்டு மூன்று நாவலுக்கு வேண்டிய 'பிளாட்' தயாரிக்கிறது: என் எழுத்துக்களுக்கு அக்ஷர லக்ஷம் பொன் கிடைத்தால், அமெரிக்கா எத்தனை மணி நேரத்தில் தன் தங்கப் பாளங்களை இழக்க நேரிடும்? இந்தப் படியெல்லாம் நான்—அதாவது அறிவுக் கண்கள்—வேலை செய்யும் போது, எந்தப் பிரசங்கிதான் என் காதைத் துளைக்க முடியும்?

பொதுக்கூட்டம் என்றாலே, சப்த பேதங்களும் இரைச்சல் அலைகளும், ஒன்றையொன்று எதிர்த்துப் 'பலீங்கிடுகிடு' ஆடி மோதுவதுதான். கூட்டத்திற்கு வந்தவர்கள் தும்முவதும், இருமுவதும், குறட்டை விடுவதும், ஒன்று விட்டு ஒன்றாகத் 'தொடர்' நாவல் போல விட்டு விட்டு ஆரம்பிக்கும். சில சமயம் எல்லாம் ஒன்றாக கேட்பது ஒரே இதழில் மூன்று நான்கு 'தொடரும்' என்று இருப்பதை நினைப்பூட்டும்.

கூட்டம் அதிகமானால் என் பெருந்தன்மைக்குச் சிறிதளவு பங்கம் வரலாம். அதிலும் பிரசங்கி பிரபலஸ்தராக இருந்துவிட்டால் தொல்லை அதிகம். கவர்ச்சியாகவும்,கணீரென்றும்

ஹாஸ்யமாகவும் பேசுவராக இருந்தால், நிலக் கடலை தின்பவர்களும், பட்டாணி கொரிக்கிறவர் களும் அதிகமாக வந்துவிடுவார்கள். சிலசமயம், பேச்சாளர்களே தின்பதைப் பார்த்திருக்கிறேன். என் பண்டித நண்பர், தொல் காப்பியத்தைப் பற்றி பேச ஆரம்பித்தால், கையில் ஒரு குத்து காரப்பூந்தி இல்லாமல் பேச முடியாது. இடை யிடையே இந்த அணுக் குண்டுகளை (காராப் பூந்திகளைச்) செலுத்தியதும், தொல்காப்பியச் செய்யுள்கள்—இருப்புக்கடலை போல—உதிரும். மொத்தத்தில் கடலையின் வாசமும், பிரசங்கியின் பேச்சும் ரொம்ப கஷ்டமாக இருக்கும்.

பேசுகிறவர் எவ்வளவுக் கெவ்வளவு திறமைசாலியோ, அவருடைய தொண்டை வெண்கலம் போல எவ்வளவு தூரம் ஒலிக்குமோ அவ்வளவுக் கவ்வளவு கூட்டத்தில் நெருக்கம், புழுக்கம், கடலைத்தோலி நெரிக்கும் சப்தம், அதிக மாகும்; கேட்கப் போகிறவர்கள் தொல்லையும் படும் அவஸ்தையும் அதிகமாகும். பிரபல பிரசங்கி யென்றாலே, நான் காற்றாய்ப் பறந்து விடுவேன். எனக்கு இன்னும் ஆச்சரியம் என்னவென்றால், "பிரசங்கிகள் பேச வருவதைக் குறித்து நான் ஆச்சர்யப்படவில்லை; பிரசங்கம் கேட்க ஏன் ஜனங்கள் வருகிறார்கள் என்பதுதான் ஆச்சர்ய மாக இருக்கிறது" என்று ஒரு மேல்நாட்டு அறிஞன் கூறுவதை, அவ்வண்ணமே நானும் சொல்லுகிறேன்.

மகாநாடுகள் கூடுவதின் நோக்கம், நம் போன்ற பாமரர்களுக்கு விஷயத்தை அள்ளிக் கொடுக்கவா? அப்படியானால் புகையிலை வியாபாரிகள் மகாநாடு, எழுத்தாளர்கள் மகாநாடு, ஹோட்டல்காரர் சம்மேளனம், சினிமா டைரக்டர்கள் கூட்டம், தமிழ்ப் புலவர் மாநாடு, இப்படி எத்தனை கூட்டங்கள் கூடுகின்றனவோ இதன் பலன் என்ன? இவைகட்கு எதிர்க்கட்சி மகாநாடு நடத்தத்தானே? அச்சுக் கோப்பவர் மகாநாடு நடந்தால், மறுநாளோ மறுவாரமோ அச்சுப் பிழை(ப்போர்) மகாநாடு நடக்கும். வேலை நிறுத்தங்கள் செய்கிற கூட்டங்களை, கூட்டமாகக் காணலாம்.

ஏதாவது ஒரு மகாநாடு, அரசியல் கூட்டம், மதப் பிரசார சபைகள் முதல் உப்பு புளி வியாபாரிகள் சங்கங்கள், மீன் கடைக்காரர்கள் சந்தை, இப்படி ஏதாவது ஒன்று எங்காவது ஒவ்வொரு ஊரிலும் நடந்துகொண்டிருக்கும். உடனே எதிர்க்கட்சிக் கூட்டங்கள் அதைத் தொடர்ந்து நடத்தும்.

தொழில் சம்பந்தமான கூட்டங்களோடு கூத்துக்கள் நிற்குமா? ஜாதி சம்பந்தமான கண்டனக் கூட்டங்கள் ஜில்லா வாரியாக, மாகாண வாரியாக நடக்கும் திரிலோகங்களை எண்ணத்தான் முடியுமா? மழை பெய்தால் தான் ஈசல்கள் பறந்து சாகும். ஆனால் மகாநாடு

கள் ஈசலைவிட பிறப்பிலும் இறப்பிலும் துரிதம் பெற்றவை. மூச்சுக்கு முந்நூறு மகாநாடுகள், கண்டனக் கூட்டங்கள் பிறக்கின்றன. நொடிக்கு நூறு அமரத்துவம் அடைகின்றன. இப்படிப் பல துறைகளிலும் கூடுகின்றவை, கூட்டுகிறவர்களுக்குச் செய்யும் நன்மை என்ன? இதில் கூட வருகிறவர்களுக்கு, பொழுதைச் சாம்பல் ஆக்குவதைத் தவிர என்ன செய்கிறதாம்?

அடடா! பூமாலைக் கடைக்காரனுக்கும், பந்தல்காரனுக்கும் கொள்ளையோ கொள்ளை! மற்றபடி தலைவலியும் கூப்பாடும் கொடுத்து நம் போன்றவர்களின் பொன்னான பொழுதை (நான் தற்சமயம் செய்கிறது போல) மண்ணாக்கி விடுகிறார்கள்.

சமீப காலத்தில் என்னைப் பார்த்து, "ஏன் நீங்கள் கவி எழுதக் கூடாது?" எனக் கேட்கிறார்கள் பலர். என்னை வலுக் கட்டாயமாக ஒரு கூட்டத்திற்கு இழுத்துப் போய், நாலு மணி நேரம் தொண தொணத்தால், நான் கவி எழுத மாட்டேன் என்று யார் சொல்ல முடியும்?

புதுமொழி

பழமொழிகள் எந்தக் காலத்தில் சொல்லப் பட்டன, எந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டன என்பதை ஆராய்ச்சி செய்ய ஒரு சங்கமோ, சமாஜமோ இன்னும் கிளம்பவில்லை. அப்படி ஆ ரா ய் ச் சி செய்தால், '**பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடியும்.**' ஏனெனில் ஆராய்ச்சிக்கோ, ஒரு கூட்டத்தின் கவனத்திற்கு ஆளாகிவிட்ட எந்தப்பொருளும், வளர்ச்சியில் தடைபட்டு விடும் என்பது '**உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.**'

பழமொழிகள் அர்த்தமற்றவை என்பதற்கு நான் கையாண்ட இரண்டே போதும்.

'பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது?' இதன் தாத்பர்யம் என்ன? பண்டித பால்வண் ண்ம் அவர்கள் இதற்குச் சொன்ன ஆதாரம் என்னவென்றால் :—

ஒரு வைஷ்ணவ பக்தருடைய திருக்குமார னுக்கு, சைவ சமயத்தில் பற்று ஏற்பட்டு பிள்ளையார் குட்டு, குட்ட நினைத்தான். தகப்பனு ருக்குப் பயந்து அரசமரத்தடிப் பிள்ளையாரைப் போல் வீட்டிலும் ஒரு பிள்ளையார் இருக்கட்டும்

என்பது பையனின் அவா. அவன் அன்ருடம் செப்பனிட்டு வரவர, பிள்ளையாரின் உருவத் தைப் பையனுக்குத் தெரியாமல் தகப்பனூர் அநுமாராக பிடித்து வந்தார்! பையன் பிள்ளை யாரின் 'கூடு விட்டுக் கூடு பாயும்' வித்தையை ரஸித்தான். பிள்ளையாரே அநுமார் ஆகிருர் என்று நம்பிக்கை வைத்தான். மறுநாள் அநுமா ரைச் சிறப்பாக வர்ணம் தீட்டி வைத்துவிட்டு, பிள்ளையாராக மாறுகிருரா எனப் பார்த்தபோது அநுமாராகவே இருந்தாராம்! தகப்பனூரிடம் இந்தச் சந்தேகத்தைக் கேட்டாணும் பையன். உடனே 'சைவத்தில், வைஷ்ணவத்திற்கு இடம் உண்டு; வைஷ்ணவத்தில், சைவத்திற்கு இட மில்லை' யென்று அவன் தகப்பனூர் எடுத்துச் சொல்ல, பையன் மனம் கசிந்து, 'அப்பா சைவத் தில், வைஷ்ணவத்திற்கு இடம் இருக்கிறது என்றீர்கள். நான் சைவத்திற்குப் போய் விடுகிறேன்' என்று போய்விட்டாணும் சைவனுக.

வைஷ்ணவத் தகப்பனூர் தாம் பிள்ளையார் பிடிக்க, குரங்காய் முடிந்ததை நினைத்துக் கண்ணீர் விட்டார்.

இந்தக் கதையைப்போலவே, பழமொழியும் அர்த்தமற்றது. போகிறது என்று சகித்துக் கொண்டால், மனித குலத்தை, மாடாகவும் உணர்ச்சியற்ற ஜீவன்களாகவும் சொல்லியிருக் கிருர்கள். '**அடியாத மாடு படியாது**' என்பது மாட்டிற்காகச் சொன்ன பழமொழியா?

இல்லே, நம்போன்ற மனிதர்களுக்குத்தான் சொல்லுகிருர்கள். மாடும் மனிதனும் ஒன்று என்று (ரிக்ஷா வருமுன்பே) ஒரு மனிதன் சொல்லிப் போனுல் அதை நாம் ஏன் வாழையடி வாழையாக ஒப்புக்கொள்ள வேண்டும்? 'குங்குமம் சுமந்த கழுதை போல' என்கிருர்கள். மனிதனே இழிவு படுத்த, கழுதை வரைக்கும் வந்துவிட்டால்,அந்தப் பழமொழிகளைச் சொல்லு வார் சொன்னுலும் கேட்பாருக்கு மதி கெடுவா னேன்? அதை நாம் வழிவழி வம்சமாக வருங் கால மக்களுக்கு வழங்கிச் செல்ல வேண்டுமா? 'இஞ்சி தின்ற குரங்கு மாதிரி' என்று ஒரு மனுஷனைப்பற்றி அடுத்தவன் சொல்வது நாகரிகமா?

நாம் மட்டுந்தான் அடிக்கடி பழமொழியை, ஒரு காலத்தில் நாடகத்தில் எதற்கெடுத்தாலும் பாட்டு என்று இருந்த அந்தக் கதை போல், உபயோகிக்கிருேம் என எண்ண வேண்டாம். சீனர்கள், நாம் எட்டடி பாய்ந்தால் பதினறடி பாய்வார்கள். தமிழ் நாட்டில்தான் பழமொழி தாஸர்கள் இருக்கிருர்கள் என்று சொன்னுல், தாஸாநு தாஸர்கள் சீனத்தில் இருக்கிருர்கள். இதனுல் நம்மைவிட எப்போதும் புத்திசாலிகளே இரவல் பேர்வழிகளை நம்பி வாழ்பவர்கள் இந்தச் சீனர்கள்.

புத்திசாலிகள் அவதரிக்கும் எந்தக் காலத் திலும் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச்

சொல்வதும், முட்டாள்கள் (இவர்களே மெஜாரட்டி) ஒரே விதமான தப்புகளை திரும்பத் திரும்பச் செய்வதும், நமக்குத் தெரியும். புத்திசாலிகள் எதை எடுத்துச் சொல்லுகிறார்களோ, அதற்கு நேர் எதிரிடையான செய்கை, முட்டாள்கள் செய்கை.

பழமொழிகள் செக்குமாடு போல ஒரே பாதையில் செல்வது சரியா? தவறு.

மறுமலர்ச்சி யென்றும், தமிழின் முன்னேற்றம் என்றும் கூக்குரல் இடுகிறவர்கள் அர்த்தமற்ற ஏதோ திரேதாயுகத்தில் பிறந்த பழமொழிகளைக் கையாளாமல் இருக்க வேண்டும். யாரோ அபத்தங்கள் அப்படிச் சொல்லிவிட்டுப் போனால் நாமும் அப்படிச் சொல்ல வேண்டுமோ?

தமிழ் இலக்கியத்தில் என்னென்னவோ புதிய முறைகளும் வழிகளும் கையாளுகிறார்கள். வசனம் வளம் பெற்றுவிட்டது, கதைகள் குவிந்து விட்டன, நாவல்கள் நலிந்து விட்டன என்றெல்லாம் சொல்லுகிறவர்கள், இந்தப் புது மொழிக்காக என்னவாவது பாடுபட்டிருக்கிறார்களா? இல்லை.

'எருது நோவு காக்கைக்குத் தெரியுமா?' என்பது காக்கைக்கும் தெரியாத எருதுக்கும் தெரியாத பழமொழி. **'வலியின் நோவு வைத்தியனுக்குத் தெரியுமா?'** என்றால் இரண்

டும் மனித சம்பந்தமான நிகழ்ச்சி. இந்தப் புது மொழியை யாராவது சொல்லுவார்களா?

சொல்லட்டும் சொல்லாமற் போகட்டும். ஆனால் பழமொழிகளைக் கையாளுவதில் இனிமேல் சற்று யோசித்து நடவுங்கள்.

'ஐந்து வந்தாலும் அவசரம் ஆகாது பத்து வந்தாலும் பதற்றம் ஆகாது' இதை எப்பவோ உள்ள மனித ஜன்மம் சொன்னது. துரிதத்தின் வேகத்தை அவர்கள் எங்கே கண்டார்கள். மணிக்கு ஒரு மைல் வேகத்தில் நடந்த அவர்களா இன்று இருக்கிறார்கள்? மணிக்கு 60 மைல் 1000 மைல் என்று பறக்கிற விமானிகளிடம் இதைச் சொன்னால் நம்மையும் பத்தாம் பசலி என்பார்கள். கால நிலைக்குத் தகுந்தபடி இலக்கியம் மாற வேண்டும், மாற்றவும் வேண்டும் என்பதை இந்தப் பழமொழிகள் விஷயத்தில் ஏன் கையாளக் கூடாது? இந்தப் பழமொழிக்குப் பதில் புதுமொழி வேண்டும்.

பழமொழிகள் எவ்வளவோ சிக்கலான பிரச்னைகளை விளங்க வைக்கிறவை, சொற்செட்டு வாய்ந்தவை, சமயத்திற்குச் சஞ்சீவி என்கிறார்கள். என் மட்டில், இவை எதிரிடையான பலன் தருகிறவை. குழப்பமும் சங்கடமும் உண்டாக்கி விடுபவை, இந்தப் பழமொழிகள். ஒரு சமயம் என் மேல் உத்யோகஸ்தர், ஏதோ கேட்டார். 'பன்றி முன் முத்துப் போட்டதே

போல' என்றதும் அவருக்கும் எனக்கும் ஒரே வாக்குவாதம். வராகவதாரமாக இருந்த உத்யோகஸ்தர் முன்னால், நான் வாமனவதாரம் எடுக்க நேர்ந்தது. நான் சொல்ல நினைத்தது 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என்ற பழமொழியாகும். இதேபோல இன்னொரு சமயம் என் மாமனாரிடம் பழமொழியால் பகையைச் சம்பாதித்துக் கொண்டேன்.

காந்திமதியைப் புகழ்ந்து அவள் அப்பா பேசினார். நானும் மாமனாரைத் திருப்திப்படுத்த 'தாயைப் போல சேய்' என்று சொன்னால் ஒரே கல்லில் இரு மாங்காய் எய்த பலன் கிடைக்கும். அந்தப் பழமொழி அவர் மனைவியைப் போற்றுவ தோடு, மகளையும் போற்றியதாகும். 'தாயைப் போல பிள்ளை' என்பது மறந்து 'நாயைப் போல் குட்டி' என்று சொல்லிவிட்டேன். நான் சொன்னது உண்மை என நிரூபித்து காந்திமதி யும் அவள் அப்பாவும் என்மேல் விழுந்தார்கள். இரு நாய்களுக்கு நடுவில் அகப்பட்ட எலும்புத் துண்டாயிற்று என் நிலைமை. சை! கஷ்டமான நிலையை சமாளிப்பவை பழமொழிகளா?

'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று சொல்லக் கூடாதா? என் நாக்கு 'தலைக்கு வந்தது தாலியோடு போச்சு' என்றது. அவ்வளவுதான் திருடனுக்குத் தேள் கொட்டிய கதையாயிற்று. காந்திமதி தாய்வீடு போனவள்

ஒரு வருஷம் கழித்து வந்தாள். அன்று முதல் பழமொழிகள் மூஞ்சியில் விழிப்பதில்லை என்று கங்கணம் கட்டினேன்.

ஒரு அணுக்குண்டு ஒரு பிரதேசத்தை நாசப் படுத்தக்கூடுமானுல் ஒரு பழமொழி எவ்வளவோ நாசப்படுத்தும். அன்ருடம் பல்த் துலக்குவது, ஷேவ் செய்வது போல அவ்வளவு சர்வசாதாரண மாக அவை புரளுகின்றன. மூச்சுக்கு முந்நூறு பொழிந்து விடுவார்கள். இவ்வளவு அதிகமாக இருக்கக் கூடாது பழமொழிகள்.

பழமொழிகள் ஒழிந்து புதுமொழிகள் வரவேண்டும். அவை அபூர்வமாக இருக்க வேண்டும். கோடை இடி போல அல்லது மழைக் காலத்து மின்னல் போல குறைவாக வரவேண் டும். இக்கட்டான சந்தர்ப்பங்களில் உபயோகப் படுத்த முடியாமல் ஆற அமர இரத்னத் தொழி லாளி ரத்னம் பதிக்கிறது மாதிரி, நெஞ்சில் பதிக் கக் கூடியவையாக இருக்கவேண்டும்.

யுத்தகாலப் பணப் புழக்கம் போல அர்த்த மற்ருே தேவைக்கு அதிகமாகவோ இருக்கிற பழமொழிகளை மறந்து அணுக்குண்டுபோல அபூர்வமாக புதிய மொழிகள் வரவேண்டும் என்று மீண்டும் சொல்லுகிறேன். மாதிரிக்குப் பாருங்கள்.

கட்டத் தெரியாத கொத்தன் கரண்டியைக் குற்றம் சொன்னுனும்.

பணமில்லாத பிரயாணி பஸ்ட் கிளாஸில் பிரயாணம் செய்.

எழுத்துக்கு உயர்வு இரவல்.

துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்த மாதிரி.

அணுக்குண்டு போட்டவன் அரை உலகம் கொண்டவன்.

பெண்ணுக்கு வரன் தேடுவதைவிட, பலாப் பழத்தில் சுளை தேடுவது கஷ்டம்.

சன்மானம் கேட்கப் போய், விஷயதானத்தையே இழந்தானும்.

கலையின் மூலத்தையும், பணக்காரன் குலத்தையும் ஆராயக் கூடாது.

வேர்வை இருக்கிற இடத்தில் விலையும் இருக்கவேண்டும்.

சங்கோஜம்

நான் பிறவியிலேயே சங்கோஜி; அநேகமாக எல்லா இலக்கிய கர்த்தாக்களும் சங்கோஜிகள். இதனால் என்னை சங்கோஜிகளின் 'முடிசூடா மன்னன்' என்று சொன்னால், அது மிகையல்ல.

அந்தக் குணம் சிறு பிள்ளையிலேயே ஏற்பட்டுவிட்டது. எப்படி, எதனால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. நாலு பிள்ளைகள், கலகலப்பாக விளையாடிக்கொண்டிருந்தால் நான் அதில் சேர்ந்துகொள்ளமாட்டேன். ஆனால் சேரவேண்டுமென்று ஆசை துடிதுடிக்கும். கிட்டே போவதற்குள் வெட்கம் வந்துவிடும்.

எதையாவது நாணயமாகச் சொல்ல நினைத்தால், சங்கோஜம் காரணமாகத் தப்பிதமாகச் சொல்லி 'மூட்டாள்' பட்டம் பெறுவேன். உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும் படும்படி என் சங்கோஜம் செய்துவிடுகிறது.

ஆகவே தன்னந்தனியாய் நேரத்தின் துணைகொண்டு காலந்தள்ளுபவன் சங்கோஜி.

என்னால் நூறு தண்டால், ஆயிரம் 'பஸ்கி' ஒரே நிமிஷத்தில் செய்யமுடியும். என் உடம் பில் வாள்கொண்டு குத்தினாலும் இறங்காது. அவ்வளவு தேக வலிமை இருந்து பயனென்ன? நேற்றுப் பாருங்கள், ரயிலில் போய்க்கொண் டிருந்தேன். வண்டிக்குள் ஒரு பெண் ஏறினாள். அவள் வயது...? நான் பார்த்தால் அல்லவா தெரியப்போகிறது! என் எதிரே கால் நீட்டி உட்கார்ந்துவிட்டாள். "இறங்கு கீழே" என்று சொல்ல என் உதடுகள் துடி துடித்தன; ஆனால் முட்டுகள், நாட்டியமாடத் தொடங்கிவிட்டன. அதற்குமேல் நடந்ததைச் சொல்லவேண்டுமோ?

மெதுவாக இறங்கி அடுத்த வண்டியில் ஏறிக்கொண்டேன். பயத்தினால் அப்படிச் செய்தேனா? இல்லை. சங்கோஜம்! இதனால் ஒரு பெருமை ஏற்படுகிறது. சங்கோஜி செய்யும் எந்தக் காரியமும் முட்டாள்த்தனமாக இருக் காது. மேலும் இவர்களிடம் அகந்தை கிடை யாது. அப்படி அகந்தை மட்டும் இருந்துவிட் டால் சங்கோஜம் ஏற்படாது. ஏற்பட்ட சங்கோஜம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடும்.

மேடையில் ஏறியதும், என் நாக்கு உள்ளே இழுத்துக் கொள்ளுகிறது. வார்த்தைகள் வர மறுக்கின்றன. ஏன்? சங்கோஜத்தின் கடாக்ஷம். வேடிக்கை விந்நியாசமாக, சரஸ சல்லாபமாகப் பேசுவதின் மர்மம், கேட்க வந்திருப்பவர்களை

பால் மணம் மாருத பாலகர்கள் என்று எண்ணும் அகந்தைதான்.

அகந்தை! ஆ!! அகந்தை!!! இது 'மனிதன் அணிந்துகொள்ளவேண்டிய ஆபரணம். உண்மையாக இன்றுவரை உலகம் நடக்கிறது இதனுல்தான்; மேல்ப்பேச்சுக்கு பணிவு இருந்தாலும் அகந்தை அதன் அடியில் பதுங்கியிருக்கிறது. இது தெரியாமலா தாயுமானவர் "எத்தனை விதங்கள் தான் கற்கினும், கேட்கினும் யானெனும் அகந்தைக்கோர் அளவில்லை" என்ருர். அகந்தைதான் உலகில் முன்னுக்குக் கொண்டுவரும். சங்கோஜி தன்னைத் தாழ்மையாக நினைத்து, மற்றவர்களை உயர்வாக நினைக்கிருன். இதற்கு மாருக நினைப்பது அகந்தை.

அகந்தையே வேண்டாமெனச் சொல்லுவார்கள். 'நான்' 'எனது' என்னும் தாரக மந்திரங்கள் தவறு என்பார்கள் பலரும். 'எனது புஸ்தகம்' என்று நான் சொன்னுல், இந்த ஆத்மாக்கள் என்னை மன்மதனுக்கிவிடுவார்கள்; எரித்துவிடப் பார்க்கிற இதே புண்ணியவான்கள் 'எனது நாடு' என்று நான் கோஷமிட்டால், அகந்தை கொண்டாடினுல், 'சபாஷ்' போடுவார்கள். இது ஏனே?

சங்கோஜிக்கு 'எனது நாடு' என்று கூச்சலிடவும் 'எனது புஸ்தகம்' என்று தம்பட்டம் அடிக்கவும் தெரியாது. தனக்கான சந்தோஷமும்

கிடையாது. பெறும் வழியும் அடைய மாட்டான்.

ரஸிகத் தன்மைக்காகப் பெண்களின் அழகையும், மோஹனச் சிரிப்பையும், உடையின் அழகையும், உடலின் சௌந்தர்யத்தையும் அவனால் பார்க்க முடியாது. அவன் தான் குனிந்த தலை நிமிராமல் பெருவிரல் நகத்தைப் பார்த்துக் கொண்டு நடக்கிறவன் ஆயிற்றே! அப்படியே கண் பார்த்தாலும், கருத்து மூடிக்கொள்ளும்.

பாவம், அவன் அதிர்ஷ்டம் கெட்டவன். ஆனால் அவனுக்கு இறங்குவார் கிடையாது. நாலுபேர் மத்தியில் அவன் அகப்பட்டுக்கொண்டால் அவன் பாடு ஆபத்து. நண்பர் மட்டுமல்ல; பந்துக்களும்கூட அப்படித்தான். அவன் பேசுகிறதுபோல, நடக்கிற பாவனைபோல, செய்கிற செய்கைபோல நடித்துக் 'கிண்டல்' செய்வார்கள்.

"பாருடா பொம்பளைபோல் இருக்கான்" என்று ஒரு குரல் கிளம்பும்.

"கட்டியிருப்பது காஞ்சிபுரம் சேலையா? பனாரஸ் பட்டா?" என்பார் ஒரு சந்தேகப் பிராணி.

"அடேயப்பா! உங்களுக்கென்ன வெக்கம் அள்ளிக்கிட்டுப்போகுதே" என்று முதுகில் தட்டுவான் மூன்றுமவன். சங்கோஜிக்கு உடம்பு

வெல வெலத்துப்போகும். உடனே பொம்மையைத் தொடாதே!" என்பான் நாலாவது பேர்வழி.

சங்கோஜி மான்குட்டிபோல் மருண்டு ஓடுவான். நடந்தால், அன்ன நடையாக இருக்கும்.

சங்கோஜியைப் 'பெண்பாலாக' வைத்துக் கிண்டல் செய்வதில் ஆடவர்களுக்கு வெகு பிரியம். இப்படிக் கிண்டல் செய்கிற 'சூரப்புலிகள்,' 'பெண் மயில்'களைக் கண்டுவிட்டால் வெட்கம் தாங்க முடியாது! பொதுவாக, பெண்களைப் பலமில்லாதவர்களென்றும், சங்கோஜிகளென்றும் சொல்வது உலக வழக்கு. ஆண்கள் பலசாலிகள் என்பது சம்பிரதாயம். இது தொன்றுதொட்டுவந்த உண்மை; எல்லா உண்மைகளையும் போல இது பொய்யாக இருக்கிறது!

பெண்களுக்கு நாணம் உண்டு; சங்கோஜம் தனியாக கிடையாது. யாரிடமும் கேட்க வேண்டியதைக் கேட்டுவிடுவார்கள். அவர்கள் தைரியசாலிகள். ஒரு கூட்டத்தில் பெண்கள் நிற்குமிடத்தின் வழியாக ஆண் பிள்ளை போகக் கூசுவான். ஆனால், பெண்கள் எப்படியோ கூட்டத்திற்குள் நுழைந்துபோய், தாராளமாக நடப்பார்கள்.

அந்நிய வீட்டிற்குள் 'இருப்பது யார்' என்று கேட்டுக்கொண்டு ஆண் பிள்ளையால்

போகமுடியாது. நான் எத்தனையோ தடவை களில் ஓரிடத்திற்குப் போய்விட்டு, வீட்டுக்குள் நுழையாது திரும்பியிருக்கிறேன். அப்படியே போய்விட்டால், சொல்லவந்த விஷயத்தைச் சொல்லாமல் வேறு விஷயத்தை உளறிவிட்டுத் திரும்பி விடுவேன். ஆனால் போகும்போது 'அவர் அப்படிக் கேட்பார், நாம் சடக்கென்று விஷயத்தை இப்படிச் சொல்லிவிட வேண்டு' மென்று முன் யோசனை செய்ததெல்லாம் வீணாகப் போய்விடுகிறது.

சங்கோஜத்தால் உலகத்திற்கு லாபமுண்டா? உண்டு. எவ்வளவோ வண்டிக் கணக்கில் லாபம் உண்டு. முதலாவதாக யாரிடமும் நெருங்கிப் பேசமாட்டான்; மற்றவர்களைப் போலத் 'தொண தொண' வென்று கழுத்தறுக்கமாட்டான். இதனால் உலகத்திற்கு லாபந்தானே.

அடுத்தாற்போல் பண விஷயம். யாரிடமும் கடன் கேட்கத் தெரியாது! ஐயோ, பாவம், ஆனால் ஸ்ரீமான் பொதுஜனம் இந்த அப்பாவி யிடமிருந்து நாசூக்காகப் பணத்தைத் தட்டிக் கொள்வார்.

பிரசங்க மேடையில் ஏறி, நம்முடைய காது கொப்புளித்துப் போகும்படி உளறுவானா? மாட்டான். இது லாபந்தானே!

'அவன் அப்படி; உன்னை இப்படிச் சொன்னான்' என்று கோள் சொல்லத் தெரியாது. கலகலப்பாகப் பேசி நாம் ஏமாந்திருக்கும் சமயம் 'மணி பர்ஸ்' தட்டிக்கொண்டு போகத் தெரியாது! உம்முடைய செலவில் ஒரு 'அரைகப் காப்பி' வாங்கிச் சாப்பிடக்கூட தைரியம் போதாதென்றால், வேறு என்ன சொல்ல வேண்டும்.

இன்னும் ஒரு மகத்தான காரியம் சங்கோஜியிடம் இருக்கிறது. கனவானும், தனவானும், யோக்கியனும், அயோக்கியனும். வாலிபனும், வயோதிகனும், சில இடங்களில், தன் கௌரவம், மதிப்பு இவைகளை இழந்து, தனக்கோ, தனக்கு வேண்டியவர்களுக்கோ, சிபார்சு செய்யும்போது, பல்லைக் காட்டுவார்களே, அப்படிச் செய்யாதவன் யார்?

அவன் தான் சங்கோஜி!

மூக்கு

முகத்திற்கு முன்னுரையாக இருப்பது மூக்கு; ஆனால் அதைத்தான் யாரும் கவனிப்ப தில்லை. 'மணப்பெண் மூக்கும் முழியுமாக இருந் தால் போதும்' என்கிறார்கள். புல்லாக்கு, பேஸரி, மூக்குத்தி, இவைகூட மூக்கை மறந்து விட்டன. எப்படியிருக்கிறது முன்னேற்றம்? இன்னும் கொஞ்சநாள் போனால், மூக்கே வேண் டாம் என்பார்கள் இந்தப் பெண்கள்.

ஆண்களோ, மூக்கு என்றால் இது ஜல தோஷம், இருதயவியாதி, சுவாஸக் கோளாறு இவற்றின் முகத்துவாரம் என்று கண்டனம் செய்வதோடு சரி. நமது மூக்கையும் சளியையும் வைத்து வயிறு வளர்க்கும் பிரகிருதிகள் பலர் இருக்கிறார்கள்; இந்த டாக்டர்கள் மூக்குக்குச் செய்துள்ள, பெருமை என்ன ? வலியே இல்லா மல் வேண்டுமானால் அறுத்துக் கையில் தருவார் கள். நான் எதிர்பார்க்கிறது, மூக்கு முகத்திலும் இருக்கவேண்டும். அதை இடம் மாற்றாமல், வேண்டும் சௌகரியங்களும் செய்துதரவேண்டும் என்கிறேன். யார் கவனித்தார்கள்?

பத்திரிகையும் சினிமாவும் கண்ணைப் பிடுங்கிக் கொண்டன; ரேடியோ நிலையத்தார் காதைத் திருகிக்கொண்டார்கள்; ஹோட்டல்களும் மிட்டாய்க் கடைகளும் நாக்கை அறுத்துக் கொண்டன; துணிமணிக் கடைக்காரர்கள் மெய்யைப் பிடிங்கிக்கொண்டார்கள். பஞ்சபூதங்களில் மூக்குமட்டும் செய்த பாவம் என்ன ஐயா?

கண்ணிற்கும் காதிற்கும் காட்சியென்றும், கவிதையென்றும் எவ்வளவோ எழுதிக்குவிக்கும் கவிஞர்கள், மூக்கிற்கு என்ன தொண்டு செய்தனர்? 'எள்ளுப் பூ' என்ற உவமையைக் கவிகள் சொல்லப்போக 'எட் பூ' தான் சரியென்றனர் இலக்கணப்புலவர்கள். எள்ளுப் பூவிற்கு அப்பால் கவிகள் மூக்கைத் 'தொடும்படியாக' ஒன்றும் சொல்லவில்லை.

ஓகோ! கம்பன் ஒருவன்தான் மூக்கைக் கையாண் டிருக்கிறன். சூர்ப்பனகா தேவி, பேரழகி. அதாவது மூக்கு ஒன்றுதான் அவள் அழகியென்று சொல்லிற்றும். அந்த மூக்கை யறுத்துவிட்டதால், "என்னை மூக்கு அறுக்க வில்லை. உங்கள் குலத்தையே வேர் அறுத்து விட்டீர்கள்?" என்ற அந்தக் கவி:

"ஆக்கரிய மூக்கு உங்கை
அரியண்டார் என்றுரை
நாக்கரியும் தயமுகனுர்
நாகரிகர் அல்லாமை

மூக்கரிந்து நுங்குலத்தை
முதல் அறிந்தீர் இனி உமக்குப்
போக்கரி(து) இவ்வழகை யெல்லாம்
புல்லிடையே உகுத்தீரே."

'இலக்கிய மூக்குகள்' என்று சொல்ல, கம்பனுக்குப் பின்னால் எந்தக் கவியாவது மூக்கு சம்பந்தமாகச் சிந்தனை செய்திருக்கிறானா? சூர்ப்பணகையின் மூக்கறுத்தல், மானிட குலத்தின் சிந்தனைக்கே வேரறுத்த கதையாக இருக்கிறது. மனிதன் மறந்துவிட்டாலும், கிளியும், கருடனும் தத்தம் மூக்கைத் தானம் செய்தன. தஞ்சாவூர் குடைமிளகாய், பிள்ளையார் கொழுக்கட்டை இவை போதாக்குறைக்கு உதவி செய்கின்றன.

பொருள்களை விண்டு விண்டு காட்டி, கவியின் சுகத்தைத் தொலைக்கும் இந்த விஞ்ஞானிகள் எவ்வளவோ அற்புதங்கள் நாற்புலனுக்கும் உதவி வருகிறார்கள்.

மூக்கிற்கு எந்த விஞ்ஞானி பாடுபட்டான்? வாசனைகளைக்கொண்டே, ஒரு பத்திரிகை, ஒரு நாடகம் நடத்தினால் எவ்வளவு நலமாக இருக்கும்! 'ஸ்மெல்லி' என்ற வாசனைச் சினிமா வந்து விட்டால், இந்தக் குறை தீர்ந்துவிடும். வாசனைத் திரவியங்கள் நாம் காசு கொடுத்து தனித்தனியே வாங்கவேண்டாம். இதற்காக ரேடியோ நிலையம் சங்கீதம் தருகிறமாதிரி கொட்டகைகள் காட்சிகள் காட்டுகிறமாதிரி

வாசனைகள், விற்பனைக்குச் சுலபமாக நமக்குக் கிட்டலாம்.

நான், மூக்கிற்காக எதுவும் செலவு செய்கிறது கிடையாது. எனக்காக எத்தனையோ சங்கீத வித்வான்கள், குஷால் பேர்வழிகள், மைனர்கள், அத்தர், புனுகு, ஜவ்வாது என்று வகை வகையாகப் போட்டுக்கொண்டு வருகிறார்கள். நான் தம்படி செலவு செய்கிறேனா? இல்லை. அப்படிச் செலவழிக்க வேண்டுமென்பது என் கட்சி. காசைக் கொடுத்துக்கண்ணையும், பணத்தைக் கொடுத்து நாக்கையும் திருப்திப் படுத்துவதுபோன்று, வாசனைகளை நாம் வாங்க வேண்டும். ஆங்காங்கே வாசனைச் சாலைகள்! சுகந்த மன்றங்கள் ஓங்கவேண்டும். மண நிலையங் மணக்கவேண்டும்.

அன்றாடம் சுகந்த அயிட்டங்கள் விளம்பரம் செய்யப்படுவதை நான் என்று காணப் போகிறேன்? விசேஷ தினங்களில், விசேஷ வாசனாதிகள் நுகர அனுமதி அளிக்கவேண்டும். நடுத்தெருவில் மூக்கைத் தீய்க்கும் வாசனையைத் தடவிப்போகிற பழக்கம் ஒழிந்து, பிரியப்பட்டவர்கள், தனிப்படவோ, கூட்டம் கூட்டமாகவோ இருந்து அனுபவிக்க இடங்கள் வரவேண்டும்.

சாப்பாட்டு ஹோட்டல்போல, வாசனை ஹோட்டல்கள் வரவேண்டும் என்கிறேன்.

காப்பிப்பொடி தயார் செய்கிறவர்கள், அதன் வாசனையை நுகரவரும் ரஸிகர்களுக்கு ஆசனமிட்டு மூக்கைத் திருப்தி செய்யலாம். பிரபல ஹோட்டல்களில் சாப்பாட்டைத் தவிர, உளுத்தம்பருப்பு வறுக்கிறபோது உண்டாகிற மணம், தாளிக்கும்போது எழுகின்ற வாசனை இவையெல்லாம் நுகருவதற்கு, தனிப்பட பில் வசூலிக்கலாம்.

இன்னல் கூட்டி, இன்பமூட்டி இந்திரஜால வித்தை காட்டும் நாசிகா சூரணம் இந்த விதிக்குள் சேராது. இலக்கியத்தில் துன்ப இயல், இன்ப இயல் என்ற இரு பகுதிகளை ஒன்பது ரஸமாகவும், நாவின் உணவை அறுசுவை யென்றும் வகுத்த முன்னோர், மூக்கை எப்படிப் பிரித்தார்கள்.

மூக்கை எட்டிப் பிடிக்காமல் இருந்துவிட்டார்கள். ஒருவேளை திக்குமுக்காடிப் போகலாம் என்ற எண்ணத்தினால் அவர்கள் வாசனைக்குப் பண்புப் பெயர்கள் அமைக்கவில்லையோ. நிறங்களுக்கும் ஒலிகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் கொடுத்த இலக்கணப்புலிகள் மூக்கு சம்பந்தமாக 'மல்லிகை மணம்' 'நெய் வாசனை' 'தாரெண்ணெய் நாற்றம்' என்று அந்தந்தப் பெயரோடு தான் வாசனையையும் சேர்த்திருக்கிறார்கள். சிவப்பு, கருப்பு என நிறத்தையொட்டிய பண்புப் பெயர்களும், சுருதி, ஹுங்காரம், நாதம், சப்தம்,

வேட்டு, இடி என்ற ஒலி பற்றிய பண்புப் பெயர் களும் இருப்பதுபோல மணத்திற்கு இல்லை.

மணம் எண்ணுக்கு அடங்காது; எண்ணவும் முடியாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப் பண்பு வாய்ந்தவை; ஒன்றைப்போல் ஒன்று இல்லை. இந்தக் காரணங்களால் வாசனை சம்பந்த மான பண்புப் பெயர்கள் வரவில்லை போலும்.

கிராமங்களிலும் காடுகளிலும் போனால் வித விதமான மணம் நமக்குத்தெரியும். பட்டணத் தில் துர்நாற்றம் அதிகம்; சுகந்தம் குறைவு. களத்து வயலில் அறுவடையானதும் ஒரு மணம் அடிக்குமே. கருவேல், உடை முதலான மரங்கள் பூத்துக் கம்மென்று நம்மை விண்ணுக்குத் தூக்குமே அந்த மணங்கள்! அடடா, இந்த இலுப்பை, செம்பரத்தை, கேவலம் பவளமல்லி, பால்பிடிக்கும் பருவத்திலுள்ள சோளம், ராகி, நெல் இவற்றின் மணம் சொல்லுக்கு அடங்குமா? கிராமம் என்றாலே. வாசனையால் ஆன அற்புத பூமி; நறுமணம் வாய்ந்த சதுரங்க பூமி.

நகர்ப்புரத்தில், காப்பிக்கொட்டை வறுக்கும் வாசம், பூக்கடை, இத்தோடு நறுமணத்திற்கு முற்றுப்புள்ளி. ஆனால் ஆதியில் மனிதன் காட் டில் வாழ்ந்த காலத்தில் வாசனையை வைத்தே வயிற்றைக் கழுவவேண்டியதாய் இருந்தது. இது ஆகாரம், இவன் விரோதி, என்று மோப்ப சக்திமூலம் அறிந்த அதே மனித குலம், அதை

வரவர இழந்து இன்றைக்குக் காண்டாமிருகத்திற்கும், வெள்ளைக்காரனுக்கும் வித்தியாசம் சொல்லமுடியாத நிலையில் வந்துவிட்டது. மூக்கை அறவே மறந்து, மற்றப்புலன்களால் வாழ ஆரம்பித்ததின் பயன் இது. கரி பஸ்ஸுக்கும், கத்தரிக்காய்க்கும் மோப்பத்தின்மூலம் என்னுல் வித்தியாசம் கண்டுகொள்ள முடியாது. அறிவு வளரவளர மூக்கு மழுங்கிவிட்டது.

மோப்ப சக்தியால் வாழ்ந்தே தீரவேண்டும் என்ற நியதி நிலவினுல், சி. ஐ. டி. இலாகா அரோகரா! குற்றவாளி எந்த வேஷத்தில் வந்தாலும் கண்டு கொள்ளலாமே!

ஆனுல் மூக்கைமட்டும் வாழ்க்கையின் ஆதாரமாகக்கொண்டு வாழும் ஜன்மங்கள் பல. நாய்க்குள்ள சிறப்பெல்லாம் மூக்கினுல் வந்தது. நாம் மூக்கை மறந்தாலும், நாய் மறக்காது. நம்முடைய மூக்கினுல் கண்டுகொள்ளவே முடியாத நுண்ணிய வாசனைகளை மிருகங்கள் சுலபத்தில் உணருகின்றன. நாய் இதற்குச் சான்று. கண் பார்வையைவிட, வாசனைதான் அதன் ஜீவநாடி. நாயைப்போலவே இன்னும் சில பிரயாணிகளுக்கு, கண், இரண்டாம்பட்சம். ஆனுல் பட்சிகளுக்கோ கண்தான் குறி. பருந்துக்குக் கண்ணும், நாய்க்கு மூக்கும் வாழ்க்கைப் பலகணிகள்!

மூக்கே வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. பிராணிகளுக்கும் பூச்சி பொட்டு

களுக்கும், இரை எங்கிருக்கிறது என்பதைச் சொல்லும் மூக்கு, எதிரி எங்கே பதுங்கி யிருக்கிறன் என்றும் சொல்லி விடுகிறது "ஆட்டுக்குட்டி உனது இரை" என்று புலியின் மூக்குச் சொன்னுல், "புலி உனது எதிரி" என்று ஆட்டுக்குட்டியின் மூக்குச் சொல்லிவிடும்! தன் எதிரி பதுங்கி யிருக்குமிடமும், தன் இரை இருக்கும் இடமும் சொல்லுகிற மூக்கு, ஜீவஜந்துக்களுக்கு இருக்கிற மாதிரி மனித குலத்துக்கு இருந்தால்!

நமது விரோதிகளை நம்பி வாழ்க்கை நடத்தாமல், சுகமாக வாழலாம். ஹோட்டல்களில் ஆகாராதிகளைப் பதுக்கி வைத்துக்கொண்டு பொய் சொல்ல முடியாது. அழகுக்காகக் கொடுத்த கடவுள், மோப்ப சக்தியையும் சிறிது அதிகமாகக் கொடுக்கக் கூடாதா? பிராணிவர்க்கந்தான், இதில் யோகம் செய்தவை.

காட்டில், கூட்டம் கூட்டமாக வாழும் யானைகளும், மான்களும் வாசனை ஒன்றினுல் மட்டுமே கூடி வாழ முடிகிறதாம். மேய்ந்து செல்வது புல்லோ, தழையோ இதில் வாசனை ஒட்டிக்கொள்ளும். அதைக் கொண்டுதான் தன் இனத்தோடு போய்ச் சேரவும் தெறிகெட்டு அலைய முடியாமலும் இருக்கின்றது. தெறிகெட்டு அப்படித் தவறிவிட்டால், தன் இனத்தின் குளம்புத் தடத்திலும், தழை செடி கொடிகளிலும் இருக்கும் வாசனையைக்கொண்டு அறி

கின்றன. அப்படி அறிவதால், வாசனை அவை களுக்குள் ஒரு பேச்சாகவும் இருக்கிறது!

நாற்கால் பிராணிகள் மட்டும், மூக்கின் உதவி யால் வாழ்பவையன்று. நெளியும் புழுக்களின் உலகமும் ஒரே வாசனைப் பிரபந்தம்தான். மூக்கு, கண் இவை இல்லாத புழுக்கள், தன் இனத்தின் வாசனையை உடம்பில் உணர்ந்து காதல் விவகாரம் தொடங்குகிறது. கதாசிரியர்கள் மல்லிகைப் பூவையும், தாழம் பூவையும் மன் மதன் அம்புகளாகக் கையாளுவார்கள். ஒரு புழுவின் மணம், மற்ருெரு புழுவிற்கு மன்மதன் கணை. வாசனைதான் அங்கு குலதர்மத்திற்கும் விருத்திக்கும் கை கொடுக்கும் கடவுள்.

மலரையும் மணத்தையும் நம்பி வாழும் தேனீக்கள் முதன் முதலாக நிறத்திற்கு அடிமை யாகிறதா? இல்லை வாசனைக்கு அடிமை யாகிறதா? தேனீக்களின் கண், திருஷ்டி தீர்க்கம் வாய்ந்தவை; நிறத்தைக் கண்டு முதலில் மயங்கி, பின்புதான் வாசனைக்கு கிறங்குகிறது என்று பிராணி நூல் வல்லார் சொல்லுகிருர்கள்.

மூக்கின் தயவினுல் வாழ்பவைகள் பூச்சிகள். பிறக்கும் பூச்சிகளுக்கு உலகமே வாசனையால் நிறைந்த களஞ்சியம் என்று தோன்றும். உல கத்தை வாசனை ஒன்றினுல் மட்டுமே பாகுபாடு காண்பது என்று வந்துவிட்டால், (ஒரு ரூபாய் நோட்டுக்கும் 100 ரூபாய் நோட்டிற்கும் வித்யா சம் காண்பது) ரஸமான விஷயம். பூச்சிக

ளோடும், நாயோடும் வாசனை பிடிப்பதில் மனிதனை ஒப்பிட்டால், மனிதன் "பூ எம்மாத்திரம்?" என்றுதான் சொல்லவேண்டும். வானமறிந்ததனைத்தும் அளந்திட்ட மனிதன் வாசனையின் நுண்ணிய பேதங்களை அறிய வகையில்லையே!

இயற்கை வாசனையை வண்டுகள், தேனீக்கள் அனுபவிக்கின்றன. நாம் அந்த அளவில் இல்லை. நமக்குச் செயற்கை வாசனையில் மோகம். ரோஜா, மல்லிகை முதலான செண்டுகள் அடிக்கிற அடி, அடேயப்பா! மூக்கைத் துளைக்கும். துவாரம்கூட போட்டு விடலாம். செண்டு தடவிய நம்மீது வண்டுகள், தேனீக்கள், தட்டாரப் பூச்சிகள் பறந்து உட்கார வரக் காணோம். அவை போலி மணம். ஆகவே வரமாட்டா. இதனால்தான் கவியுள்ளம் படைத்தவர்கள் இயற்கையை விரும்பி, யந்திர பூதத்தின் சிருஷ்டிகளில் மனம் லயிக்காமல் இருக்கிறார்கள் போலும்!

ஆதியில் மனிதன் இயற்கையின் சுகந்தத்தில் மூக்கைப் பறிகொடுத்தவன் இன்று செயற்கை வாசனையில் விருப்பம் கொண்டுவிட்டான். இது எப்படி இருக்கிறது என்றால், இனிமையல்லாத வாத்திய இசை, பொருள் விளங்காத பாட்டு, புத்திசாலித்தனமில்லாத அழகு ரேகை, இவைகளை அனுபவிக்கிற கணக்குத்தான். இந்தக் காலத்தில் வாசனை யென்றால் "அது எத்தனை வெளுப்புக்குத் தாங்கும்?" என்று கேட்கிறார்கள்.

வாசனை காலத்தை வெல்வதில் மார்க்கண்டேயனைப் போல போட்டியிடாமல் கணப்பொழுதில் துருவனைப் போல நம் இதய வானத்தைக் கொள்ளவேண்டும். இன்ப நினைவுகளைப்போல் வாசனைகள் மூக்கின் நுனியில் வட்டமிடவேண்டும். காததூரம் குரல் கொடுக்கக் கூடியவர்களே சங்கீதம் பாடவேண்டும் என்று வந்துவிட்டால் அது வீணையின் நாதமாக இருக்குமா? கழுதையின் கத்தலாகத்தான் இருக்கும். இயற்கை வாசனைக்கும், செயற்கை வாசனைக்கும் இந்த வேற்றுமை ஒரு உதாரணம்.

வருங்கால உலகத்தில் எத்தனையோ புனருத்தாரண திட்டங்கள் வகுத்த அறிவாளிகள்கூட, மூக்கை மறந்துவிட்டார்களே. நினைவு கொண்டு யந்திர சாதன மூலம் வழி வகுத்து இயற்கை வாசனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நான் பெரிதும் அனுபவிப்பேன்.

மூக்கறிஞர்கள், மூக்கு நிபுணர்கள் கூடப் போகும் அந்த உலக மகாநாட்டில், என்னென்ன அற்புத விந்தைகள் நிகழப்போகின்றதோ! அப்படி வரப்போகிற அந்தக் காலத்தை மோப்பம் பிடித்துச் சொல்லக்கூடிய நபர், லாப்லந்துக் காரனுகத்தான் இருக்க முடியும்.

நாம் ஒருவரை வணங்கும்போது கேவலம், கையெடுத்து நமஸ்காரம் செய்கிறோம். அவர்களோ மூக்கோடு மூக்குத் தேய்த்துக்கொள்ளுகிறார்கள். அந்த மூக்கர்களே இந்த ஆராய்ச்சி செய்வார்கள் என்பது என் கனவு.

நனவாகும் நாள் எந்நாளோ?

நாமகரணம்

தாயுமானவர், "கரடி வெம் புலியையும் கட்டலாம், வானத்தை வில்லாகவும் வளைக்கலாம், ஆனால் மனசைமட்டும் கட்டுப்படுத்த முடியாது" என்று சொல்லுகிறார். முடியாத விஷயங்களில் இன்னும் ஒன்று உண்டானால், அது "தலைப்புக்" கொடுப்பதுதான்.

எனக்கு ஆயிரம் பதினாயிரமாக ஓடிவரும் வார்த்தைகள் தங்குதடையின்றி காட்டாற்று வெள்ளம்போல பொங்க ஆரம்பித்துவிடும். எல்லாம் எழுதிவிட்டு எழுதிய ஆயிரம் வார்த்தைகளின் நயத்தையும் கவரக்கூடிய தலைப்புக்காக யோசிப்பேன். யோசனை விடியாத யோசனையாகிவிடும்.

தலைப்பு, கொஞ்சம் கவர்ச்சியாக அமைந்துவிட்டால், வாசகர்கள், 'அது என்ன?' என்று ஆவலுடன் படிக்க ஆரம்பிக்கிறார்கள். தினசரிப் பத்திரிகை முதல், மற்றும் உள்ள பத்திரிகைகள், புஸ்தகங்கள் எல்லாவற்றுக்கும் தலைப்புத்தான் முக்கியம். ஆகவே, ஒவ்வொரு விஷயத்திற்கும் தலைப்பு முன்வாசற் பூஞ்சோலையாகிவிடுகிறது.

எழுத்தாளர்கள் இப்படிப்பட்ட ஜீவாதாரமான தலைப்புக்கு அடையும் சிரமம் சொல்லத்தரமன்று; இவர்களைப்போலவே பத்திரிகாசிரியர் 'போஸ்டர்' போடுவதில் சங்கடப்படுகிறார்.

எழுதிய விஷயத்திற்கு நாமகரணம் செய்வதில் இன்றைய ஆசிரியர்கள் மட்டுந்தான் சிரமப்படவில்லை. பெரிய பெரிய இலக்கிய கர்த்தர்களே திக்கு முக்காடி இருக்கவேண்டும். புகழேந்தி தம்முடைய நளபுராணத்திற்கு, "நளவென்பா" என்று பெயர் வைத்திருக்கிறார், பெயரைக் கேட்கவே என்னமோ போல இருக்கிறது அது என்ன "ந-ள-வெ-ண்-பா-வோ!" எத்தனை நாள் இரவு பகலாக கஷ்டப்பட்டபின் "மகாபாரதம்" என்று வில்லிபுத்தூரர் பெயர் சூட்டினாரோ! இப்பெயருக்கு நூலின் சிறப்பைக் கூறும் சக்தி இருக்கிறதா? இது போகட்டும். கற்பனைக் கடலில் திளைத்த கம்பனைப் பாருங்கள். அவனும் அதே ரீதியில் "இராமாயணம்" என்று சொல்லி இருக்கிறான்.

ஆகவே, '**எழுதல் யாவர்க்கும் எளிதாம்; அரிதாம் அதற்குப் பெயர் சூட்டல்**' என்று சொல்லலாமல்லவா?

சிலர் சொல்லலாம், பெயரில் என்ன இருக்கிறது? தாமரைக்கு வேறு பெயர் கொடுத்து விட்டால், அழகும் பொலிவும் மாறிவிடுமா? என்று. இதை நான் ஒப்புக்கொள்ளவில்லை.

ஒருசமயம் 'இசக்கி' என்ற தலைப்பில் நான் அனுப்பிய கதையொன்று, என்னிடம் திரும்பி வந்தது; ஆனால் அதே கதையை "சம்பங்கி" என்ற தலைப்பில் அனுப்பியபோது, அதே பத்திரிகாசிரியர் போட்டார்!

இக்காலத்தில் நாவல்களுக்கும் கதைகளுக்கும் கதாநாயக—நாயகி பெயரையே வைத்து விடுவது சம்பிரதாயம். இதற்குப் புறம்பாகப் போனால் தலைப்புப்பற்றித் தகரார் ஏற்படுகிறது சர்வசாதாரணம்.

பெயர் சூட்டுவது மகுடம் தரிப்பதுபோன்ற விஷயம். ராஜகுமாரனாகமட்டும் பிறந்துவிட்டால் போதுமா? மகுடம் சூட்டுவதில் அல்லவோ பிறந்ததின் பாக்கியமும், கௌரவமும் இருக்கிறது. மகுடம் தரிப்பது என்றால் இலகுவான காரியமா? இல்லை. அதுபோலவே நாமகரணம்—குழந்தைகளுக்கு ஆனாலும் சரி, எழுதிய விஷயத்திற்கு ஆனாலும் சரி—செய்வது மகுடாபிஷேகம் நடத்துவதுபோன்ற மஹோற்சவந்தான்.

நாம் எவ்வளவுதான் முயற்சிசெய்து எழுதியதற்கு, மகுடம்சூட்டினாலும், அது இராமனுக்கு மகுடாபிஷேகம் நடந்த மாதிரிதான். இராமனுக்கு, மகுடம் சூட்ட எதுதான் இல்லை; எல்லாம் இருந்தது. ஆனால் கடைசியில் மகுடம் மட்டும் சூட்ட முடியவில்லை. கோசலை தன் பிள்ளைக்கு மகுடம் தரித்து, அக்காட்சியைக்

கண்டுகளிக்க எண்ணியமாதிரி நாமும் எண்ணு கிறேம்; எண்ணியபடி கைகூடுவதில்லை. கோசலை,

"மௌலிகவித்தனன் வருமேன்றேன்று ?"

மகுடம் தரித்த இராமன் வருவான் வருவான் என்று ஏங்கி இருந்தவள் முன்னுல், மகுடமில்லாது ராமன் வந்ததுபோலவே, எழுத்தாளர்களுக்குச் சரியான தலைப்பு வருவதில்லை. அதன் பின், கோசலை சமாதானம் அடைந்ததுபோலவே சமாதானம் அடைகிருர்கள்.

கோசலையின் எண்ணப்படி, ராமன் மகுடம் தரித்திருந்தால், ... அவனிடமுள்ள சாந்தம், பொறுமை, வலிமை, சகோதரத்துவம், வீரம் முதலான கலியாண குணங்களைப் பார்க்க முடியுமா ? அதனுல்தான், தலைப்பு சரியாக அமையாவிட்டாலும் எழுத்தாளர்கள் எழுது கிருர்கள்போலும் ! ஆனல், என்போன்றவர்களுக்கு 'மகுட'ந்தான் முக்கியம்.

எப்படியென்று பாருங்கள். தெருவில் உத்தியோக உடையில் நிற்கும் போலீஸ்காரனைப் பார்த்தால் தெரியும். அவனிடம் இல்லாத ஒருவித கம்பீர ஆணவம் தாண்டவமாடும். அவனுடைய மகுடத்தை எடுத்துவிட்டால் 'லொள்' என்று இருப்பான். அதிலும் சாதாரண உடையில் போனுல், நாம் இலகுவாக தெரிந்துகொள்ளலாம் அவனுடைய முகக்களையிலிருந்து! ஆனுல் இதே ஆசாமிக்கு மகுடம் ஏறிவிட்டால், ஆட்டுக்குட்டி புலியானதுபோல ஆகிவிடுகிருனே !

தோற்றத்தில் வலுவு ஏற்படுவது மகு டத்தை வைத்துத்தானே. எழுத்தில் வலுவும் நயமும் இருக்கிறது என்பதைக் காட்டத் தலைப் புத்தான் கதி. விஷயத்தின் சிறப்பைவிட பெய ரின் சிறப்பால் பொலிவு ஏற்படுவதற்கு ராகங் களின் பெயரை உதாரணமாகச் சொல்லலாம்.

தோடி, கன ராகந்தான். ஆனல் பெயர் பொலிவாக இல்லையே. அபூர்வ ராகங்களும், சின்ன ராகங்களும் பெயரிலேயே சக்தி உடை யனவாக இருக்கின்றன. கோகிலத்தொனி, மனோரஞ்சினி, பிருந்தாவன சாரங்கா, ஹம்சா நந்தி, தேவகாந்தாரி........பெயர்கள் எவ்வளவு ரம்யமாக இருக்கின்றன.

அப்படி ரம்மியமாகத் தலைப்புகள் அமையா விட்டால், எழுதியதெல்லாம் வீணுகிவிடுகிறது. 'செல்லத்தாயி' நடனமாடிக்கொண்டிருந்தாள் என்று கலைக்கதை எழுத ஆரம்பித்தால் அதை யார் படிக்கப்போகிருர்கள். அப்படியின்றி, 'மாலதி' நடனமாடிக்கொண்டிருந்தாள் என்ருல், நாலுபேரும் படிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இந்தக் கட்டுரைக்கு வேறு தலைப்புக்கொடுத் திருந்தால், இந்தப் புஸ்தகத்திற்கே வேறு நாமம் சூட்டியிருந்தால், எத்தனையோ வாசகர்கள் படித்திருப்பார்கள்.

எனது தோல்வியை ஒப்புக்கொள்ளு கிறேன்.

அரிசியே!

இரேக்கப் புலவர்கள் அடித்துக்கொண்டிருக்கும் பெருமைகளில் ஒன்று, இந்த அரிசி. இதை மகாவீரன் அலெக்ஸாந்தர் கி. மு. 300 வருஷங்களுக்கு முன், இந்தியாவிலிருந்து பாரசீகம், மெஸபோட்டோமியா, துருக்கி ஸ்தானம் வழியாகக் கொண்டுவந்தாராம். அலெக்ஸாந்தர், அடியோடு அத்தனை விதை நெல்லையும் கொண்டு போயிருக்கக் கூடாதா என, நமக்கு இப்போது தோன்றவில்லையா?

உலக ஜனத் தொகையில் பாதி—நெல்லில் பாதி அரிசி என்ற கணக்குப்படி—அரிசி தின்கிறதாம். இந்தியர், சீனர், இவர்கள் எதிரியான ஜப்பானியர் உள்பட பாதிப்பேர், இவ்வளவு ஏன்? நம்மைப் படைத்த கடவுளுக்கே அரிசியைத்தான் நைவேத்தியம் போடுகிறோம். சத்தில்லாத இந்த அரிசியையே உண்டு, என்றும் அழியாப் பரம்பொருள் இருக்கலாம். கேவலம் மனிதர்களான நாம், இந்த அரிசியால் அடையும் தொல்லைகளை நினைக்கும் போது........தொல்லை என்றால், இப்போது மட்டுமே? விளைந்தால், போதுமான விலையில்லையே எனக் கதறுகிறோம். இப்போது விலை இருக்கிறது போதுமான

விளைச்சல் இல்லையே எனக்கதறுகிறோம். இந்தத் தொல்லைக்கு மூலகாரணம், "தென்னிந்தியர்களுக்கு அரிசியே முக்கிய உணவு" என்று பூகோள சாஸ்திரம் சொல்லுகிறது.

பிறந்த குழந்தைக்குள்ள புத்திசாலித்தனம் நமக்கு யில்லையென்பதை, நாம் ஒப்புக்கொள்ளலாம்; இது குழந்தைப் புத்தியில்லை. அது அரிசி தின்கிறதா? பால் குடிக்கிறது. வளர்ந்த பின்பும் அதற்குப் பண்டம் பலகாரம் இதுவே நினைப்பு. அரிசிச்சாதம் கேட்காது. மைசூர்பாகோ. அல்வாத் துண்டோ கேட்டு மூக்கையும் கண்ணையும் திறக்கிறது. நாம் "நீ, சோச்சி தின்னால் அப்பாலே தருவேன்" என்கிறோம். விழுங்கித் தொலைக்கிலது, அழுதுகொண்டு.

வயதுவந்த காலத்திலும் வெறும் அரிசிச் சாதத்தைத் தொடுகிறவர்கள் யார்? கூட்டு, ரஸம், வறுவல், பாதாம்கீர், காப்பி, டீ இவை தான் வாழ்வுக்கு ரஸமானவை. யாருக்காவது கால்ப்படி அரிசியை நனைத்தோ, சமைத்தோ வைத்தால், விருந்தாளி ஏன் நிற்கிறான். நாலு அப்பளம், ஒரு வறுவல், பாயஸம் போட்டுவிட்டால், விருந்தாளி முகத்தில் தேஜஸ் பொங்கும். கேவலம், அரிசிச் சாதத்திற்கு ஏங்கிப் போய் ஒரு வீட்டிற்குள் நுழையவில்லை. ஒரு வெங்காய பஜ்ஜி, தக்காளிப் பச்சடி, உருளைக்கிழங்கு மசியல் ...... இப்படி ஏதாவது கிடைக்காதா என எதிர்பார்க்கிறோம்.

சாதமா, முக்கிய உணவு. போயும் போயும் இப்படி அபாண்டமான மூடு மந்திரம் ஏன் வேண்டுமோ? பெரிய பெரிய விருந்துக்குள் நுழைந்தால் சாதம் இருக்கிற இடமே தெரியாது. வகை வகையாக கறிகள், அப்பளங்கள், வறுவல் வத்தல்கள், ரஸம், குழம்புகள், ஊறுகாய் வித விதமாக வந்துவிடும். மிஞ்சிப் போய் ஒதுக்குகிற பதார்த்தம் சாதம் ஒன்றே. நான் இது வரை இப்படி இலையில் ஒதுக்கிய சாதம் குறைந்தபக்ஷம் இமயமலை உயரம் இருக்கும். இவ்வளவு கேவல மான அரிசியைப் போய், முக்கிய உணவு என தென்னிந்தியர் மட்டுந்தானு சாப்பிடுகிருர்கள்? உலகத்தில் பாதி உண்ணுகிறதாம்! அட ஆண்டவனே.

சாதத்தின் தன்மையை அறிந்து குழந்தை வேண்டாமென்கிறபோது, தாய் சும்மா விடு வாளா? நாய், குருவி, காக்கை, இதற்குப் போட்டு ஊட்டுவாள். அல்வா, பேணி, லாடு லட்டு இதைப் பூனை நாய்க்கு உண்பித்து குழந் தைக்கு ஊட்டத்தான் வேண்டுமா? பறவைக்கும் பிராணிகளுக்கும் போட்டுத்தான் கட்டுபிடி யாகுமா?

இவ்வளவு படுமோசமான அரிசியை விவ சாயி விளைவித்துவிட்டு நமக்கும் துன்பம் கொடுத்துத் தானும் துன்பம் அடைகிருன். தனக்கென வாழாது பிறர்க்கென வாழு கிருனே? அவன் முன்னேற, விஞ்ஞானிகள்

விஞ்ஞானமே சிறந்தது என்கிறார்கள். பொரு ளாதார நிபுணர்கள் தாங்களே காரண பூதம் என்கிறார்கள். கால்நடை இலாகா நிபுணர்கள் தங்களை விட்டால் விவசாயி தலை தூக்கி ஒரு அடி எடுத்துவைக்க முடியாது என்கிறார்கள். பூச்சி சாஸ்திரிகள், தங்கள் தயவு இல்லா விட்டால் விவசாயி வாயில்லாப் பூச்சியாகி விடுவான் என்று சொல்லுகிறார்கள். சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு சமுதாய நிபுணர்களும் தங்களால் விவசாயம் வேரூன்றி உயிரோடு தழைத்து வாழ்கிறது என்று பச்சையாய்ச் சொல்லுகிறார்கள்.

நான் சொல்லுகிறேன். மனிதர்கள் நீங்க லாக உலகத்தில் (பாதி ஜனத்தொகை) இதை பகிஷ்காரம் செய்யவேண்டும். உலக ஜனத் தொகையைவிட, ஜீவராசிகளே அதிகம். அவை களை நம்பி நாம் வாழலாம். தினசரி, ஆடு, மாடு, கோழி, வாத்து, குருவி, காகம் இவைகளுக்கு அரிசி உணவைப் பழக்கப்படுத்திவிட்டால் விவ சாயம் 'கிச்' என்று முன்னேறும். எப்படி என் யோசனை?

நாம் எதைச் சாப்பிட? விஞ்ஞானி கண்டு பிடித்துள்ள புதிய ரகப் புல்லுகளில் வைட்டமின் கள், புரதச் சத்துகள், கொழுப்புகள் இருக்கிறது என்கிறார்களே! அதை ஒரு வாய்ப் பார்த்தால் போகிறது! ஐயோ, அரிசியே!

முன்னுரைக் கோவை

பந்திக்கு முன்னுரை பாயஸம். பாடகருக்கு முன்னுரை அங்கவஸ்திரம். மூக்கும் முழியும் முகத்திற்கு முன்னுரை.

நெற்றிக்குத் திலகம்போல, புஸ்தகத்திற்கு முன்னுரை இருக்கிறது. முன்னுரை யில்லாது புஸ்தகம்வெளிவராது. வந்தால் அதை மணமற்ற மலர் என்று தான் சொல்ல வேண்டும்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் புஸ்தகங்கள் மட்டுமே படித்திருக்கிறேன். இப்போதோ, முன்னுரைகள் மட்டுமே படிக்கிறேன். "புஸ்தகம் எதற்கு? முன்னுரை மட்டும் போதுமே" என்று நினைக்கிறேன்.

ஆனால் யாரும் இதுவரை தமிழில் முன்னுரை மட்டும் வெளியிட்டதில்லை. பெர்னாட் ஷா மட்டும், முன்னுரைகளைத் திரட்டி வெளியிட்டிருக்கிறார். அவை அவரே எழுதிய முன்னுரைகள். நானோ, பிறர் எழுதிய—என் புஸ்தகத்திற்கு எழுதிய—முன்னுரைக் கோவையை வெளியிட எண்ணுகிறேன். காரணம், ...அதை நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

சில நாட்களுக்கு முன், முன்னுரையும் புஸ்தகமும், உயிரும் உடலும் போல, நகமும் சதையும் போல, பாலும் தண்ணீரும்போல என்று நினைத்தேன். ஆனால் என் புஸ்தகத்திற்கு முன்னுரைகள் வந்ததும்......வந்த விவரம் முதலில் சொல்லுகிறேன்.

நானாக முன்னுரை எழுத நினைத்தேன். என்னைப் பற்றி நான் எழுதினால் பிறர் என்ன நினைப்பார்கள்? தற்பெருமைசாலி, படாடோபம் உள்ளவன் என்று நினைக்கலாம். சரி ஐயா, மற்றவர்கள் எழுதினால் என் மேதையைச் சொல்ல வேண்டுமே! சொல்லாமல், மொட்டையாக முன்னுரை எழுதி விட்டால் எனக்கு வருத்தம்.

ஆகவே, பிறர் எழுத வேண்டும். அதுவும் புகழ்ந்து எழுதப்பட வேண்டும். இதற்குக் குறுக்கு வழி கண்டு பிடித்தேன். பையிண்டு செய்யப்படாத பிரதிகளைப் பல பிரமுகர்களுக்கு அனுப்பினேன். இதில் யார் என்னை வானளாவப் புகழ்கிறார்களோ அவர்களுடைய முன்னுரையைப் போடுகிறது. எப்படி என்முன் யோசனை!

முன்னுரைகள் வந்து சேர்ந்தன. இன்னும் வந்து கொண்டிருக்கின்றன. ஒருவர் "தொடரும்" என்று போட்டுப் பத்து வாரமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார். இவர் முதுகுக்கு மண் காட்டி என் பண்டித நண்பர் ஏழு காண்டங்கள்—காண்

டத்திற்கு ஆயிரத்தியொரு பாட்டு விகிதம்—எழுதுகிறார். சுருங்கச் சொன்னால், எனக்கு முன்னுரை உதவியவர்கள் எல்லாரும் பெர்னாட்ஷா ஆகி விட்டார்கள். அதாவது, புஸ்தகத்தை விட நாலு மடங்கு பெரிதான முன்னுரைகள் குவித்திருக்கிறார்கள்.

முன்னுரையில், இது தான் எழுதலாம், எழுதக்கூடாது என்று இலக்கணம் இல்லை. பாவம், அந்த அகத்திய முனிவர் மட்டும் புஸ்தகப் பிரசுரம் செய்ய நினைத்திருந்தால், "**முன்னுரை இலக்கணம்**" என ஒன்று வகுத்திருப்பாரே!

வர்சற்படி இல்லாமல் வீடுகட்ட எனக்குத் தைரியம் உண்டு. முன்னுரையில்லாது புஸ்தகம் வெளியிட மனசு வரவில்லை. வந்த முன்னுரைகளில் ஒரு சில பாருங்கள்.

பக்கத்து வீட்டுக்காரர் உதவியது. "இப்புஸ்தகம் எழுதிய நண்பரை அறிவேன். அக்கம் பக்கத்தாரின் அலுவல்களில் தலையிடாதவர். இவர் எழுதும்போது, இவருடைய பேனா யாருடைய தூக்கத்தையும் பங்கம் செய்யாது. இப்பேர்ப்பட்ட உயர்ந்த பேனா உதிர்க்கும் முத்துக்களை மனசில் பதியுங்கள். தமிழ் நாட்டாருக்கு இவரைச் சிபார்சு செய்கிறேன். இவருக்கு கடன் இல்லை; கண்யமானவர்; கரூர் புள்ளி. ஆகையால், வாசகர்கள் இதை ரொக்க விலைக்கு வாங்கிப் படிக்கவும்."

எனக்குத் தமிழன்னையை அறிமுகஞ்செய்து வைத்த தமிழய்யாவின் வார்த்தைகளை ஈண்டு கோட்பாடு செய்வாம்.

"இற்றைக்குச் சற்றேறக்குறைய ஈரெட்டாண்டுகட்கு முன்னர், யான் பாடங் கற்பித்த மாணுக்கர் குழாங்களில் ஒருவர் இந்நூலாசிரியராவர். பாவலர் நிறைந்த இந்நாவலந் தீவில், முச்சங்க முன்னுளிலும், பிற்றை நாளிலும், நல்லறிவின் முற்றுப்பேறுடையர் பல்லாயிரத்தினர்.

அறிவுச் செல்வங்களான கல்வி, கேள்வி, ஞானம் இவற்றில் பலர் இன்னுளில் சிறப்பெய்தி இன்னண்ணமிருப்ப, அறிவிற் குறைந்தோனுகிய யான் ஆசையாற்றூண்டப்பட்டு எழுத்து வன்மையில் ஆற்றலில்லையாயினும், எழுதி வெளிக்கொணரத் துணிந்த இந்நூன் முகத்தில் (முன்னுரையில்) பிழைகள் மண்டிக் கிடப்பினும், என் நோக்கத்தைச் சீர்தூக்கியவன்பர்கள்,

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

என்றபடியும், அன்னப் பறவையானது பாலையும் தண்ணீரையும் பிரித்துண்வதுபோல......"

இதன் பின்னர், தமிழின் பிறப்பு வளர்ப்பு முதலியவைப்பற்றி எழுத ஆரம்பித்துவிட்டதால் இது முடிவு பெறுது. அடுத்த முன்னுரை, புஸ்தகசாலை பிரமுகர் ஒருவர் எழுதியனுப்பியது.

" புஸ்தகம் ஹஸ்த லக்ஷணம். இதன் தாத்பிரியம் என்ன ? உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் கையில் புஸ்தகத்துடன் இருக்கவேண்டும். இது அனுபவ சாத்தியமில்லை. நாம், யாது செய்தல்வேண்டும் ? பொதுப் பணத்திலிருந்து ஆங்காங்கே வாசக சாலைகள் நிறுவவேண்டும். நகரும் புஸ்தகசாலை வண்டிகள் தொடர் தொடராகக் கிராமம் நோக்கி நகரவேண்டும். இது படித்தோர் கடமை.

" தற்சமயம், நமது கல்வி நிலைமையில் மோசம் எங்கே இருக்கிறது ? மேலை நாட்டில் கல்விச்செல்வர்களும், இலக்கிய விற்பன்னர்களும், இலக்கண அறிஞர்களும் இருப்பதன் ரகஸியம் என்ன ? ஊன்றிப்பார்த்தால், புத்தகாலய இயக்கமே என்ற நித்திய உண்மை புலனாகும்.

தனி மரம் தோப்பாகுமா ? பல மரம் வேண்டும். எல்லாம் புளியமரமாகவே இருந்தால் கண்ணுக்கு ரம்மியம் இல்லை. நாலு வகை மரங்களும் தேவை. அதுவே புத்தகாலயம். இந்நூலை எழுதிய என் நண்பரைப்போல், இன்னும் பலரும் எழுதவேண்டும்......"

இந்த முகவுரையில் புத்தகாலயப்பிரியர் என்னைப்பற்றியும் என் புத்தகத்தைப்பற்றியும் ஒரு வரிகூட எழுதவில்லை. அவரோ மேல்நாட்டில் புஸ்தகாலய இயக்கம் வளர்ந்த முறை,

அதில் ஈடுபாடுகொண்ட அன்பர்களின் குடும்ப ஜாபிதா, புஸ்தகத்தைப் படிக்கவேண்டிய ஒழுங்கு முறைகள்......இன்னேரன்ன எழுதியிருந்தார்.

ஆனல், கலையன்பர் ரத்னச் சுருக்கமாக எழுதியிருந்தார்.

"நாலும் இரண்டும் ஆறு; இரண்டும் நாலும் ஆறுதான். இதுவல்ல இலக்கியம்.

மூன்று வார்த்தைகள் இரண்டு 'கமா'க்களுடன் சேர்ந்தால் அற்புதம் பிறக்கும். நாலு புல் ஸ்டாப் கொண்ட வார்த்தையுடன் பின்னிப் பிணைத்தால், அதன் வேகமே அலாதி!

இந்நூலைத் தீட்டிய என் நண்பரின் முயற்சி வீண்போகுமா? இது என் அபிமானம் அல்ல. இலக்ஷியத்திற்குக் குறுக்குச்சுவர் உண்டா?"

தலை சுற்றுகிறதோ இல்லையோ, சப்ரிஜிஸ்டிரார் எழுதியதை மறக்க முடியவில்லை.

"நான் சொல்வது சத்தியம். எல்லாம் நிஜம். சத்தியத்தைத் தவிர வேறில்லை.

ஒரு சமயம் இப்புஸ்தக ஆசிரியரின் பெருவிரல் ரேகை புரட்டப்பட்டது. ரேகை சாஸ்திரத்தில் எனக்குப் பயிற்சி உண்டு. அன்று சொன்னேன், இவர் பெரிய எழுத்தாளர் என்று.

அது பொய்யாகவில்லை. எது? என் ரேகை சாஸ்திரம்!

ஒரு நாள்! ஆம், மாலை ஆறு மணி. காப்பி தயாராக இல்லை. அப்போது, ஒரு பத்திரிகையி னுல் அடுப்புப் பற்றவைக்க நினைத்தேன். ஆனுல் அதில் இருந்த கதை என் மண்டையிடியைக் கவர்ந்தது. மாயமாய்ப் போய்விட்டது மண்டை யிடி. அதன்பின் மண்டையிடி வரும்போ தெல்லாம் அதே கதையை இன்னும் படிக் கிறேன்.

நான் படித்த கதைபோன்றவை இதில் இருக்கின்றன. ஒற்றைத்தலை மண்டையிடி உள்ளவர்களுக்கு இதைச் சிபார்சு செய்கிறேன்.

இது நான் எழுதியது. இதை நான் அறி வேன்.

இதுதான் தொலைகிறது. என் சகோதரத் தொழிலாளி ஒருவர்,

"ஆண்டவனே, நீ பாக்கியவான். உன்னிடம் யாரும் முன்னுரை கேட்க முடியாது!

கடவுளே! இந்த முன்னுரைக்கு முடிவு காலம் வந்தால், ஆம் அப்படி வரும்போது, இப் புஸ்தகத்திற்கு முன்னுரை எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைக்கட்டும்."

என்று எழுதினர். எப்படி இருக்கிறது லோகம்? தொழிலாளிக்குத் தொழிலாளிதான் இந்தவர்மம் என்ருல், கல்வியபிமானிக்கு என் மேல் என்னய்யா வர்மம் இருக்கிறது?

"முன்னுரைக்கு இப்புஸ்தகம் வந்தது. பார்வையிட்டேன். சிற்சில இடங்களில் நன்ருக இருக்கின்றது; இது மாணுக்கர்களுக்கு என்று எழுதப்பட்ட இடம். நடையில், எளிமை வேண் டாம். சந்தி, கமா, செமிக்கோலன் இவைகள் இப்புஸ்தகத்தில் காணப்படவில்லை. முற்றுப் புள்ளிகள்மட்டும் வாக்கியங்களுக்கு முன்னும் பின்னும் இருக்கின்றன. இந்தக் குறை தவிர மற்றபடி குறையில்லை. இலக்கிய ரஸிகர்களுக்கு இது ஒரு கண் விருந்து என்பதில் ஐயமில்லை."

அதன்பின் எழுதியிருந்ததைச் சொல்வது நாகரிகமுள்ளவனுக்குப் பிடிக்காது. ஒரு பெண் மயில் தன் முன்ரையில் கூவுகிறது:

"பெண்கள் என்ருல், கேவலம் அடுப்பு ஊதப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் ஒழிவது எப்போதோ, தெரியவில்லை. அப்படி ஒழியும் போது தான் நாட்டுக்கு விமோசனம்.

பெண் கல்வியே உயர்வு. பெண் கல்வி இல்லாவிட்டால், யார் மட்டும் இப்புஸ்தகத்தைப் படிக்கிறது? ஆண்கள் படிக்கும் இந்தப் புஸ்தகம் இருந்தால் என்ன? இல்லாமற் போனுல் யாருக் கென்ன லாபம்?

நீங்கள் அதைப் படிக்க ஆரம்பிக்கு முன், உங்கள் ஊரில் பெண் பாடசாலை இருக்கிறதா என்று பாருங்கள். இல்லாவிடில் ஏற்படுத்துங்கள். அதுவும் இல்லாவிடில் மனைவி மக்களுக்கு, ஆனா ஆவன்னா ஆரம்பியுங்கள். ஆண்-பெண் சமம், இந்த நோக்கம் இருந்தால், பெண்கள் கல்வியில் சிரத்தை எடுப்பார்கள். அல்லாதவர்கள் இதைப் படிப்பார்கள்.

நீங்கள் செய்யப் போவதென்ன?"

முடிவாக காந்திமதி எழுதிய முன்னுரையைப் பின்னுரையாகச் சேர்க்கிறேன்.

"நீங்கள் இது வரை இலக்கியத்திற்குத் தொண்டு செய்து வந்தீர்கள். என்று பேனா பிடித்தீர்களோ, அன்றே இலக்கியத்திற்குப் பிடித்தது சனி!"

எப்படி ஐயா, இருக்கிறது! இப்படி வந்துள்ள ரக ரகமான முன்னுரையைப் பார்த்தவுடன், என்னுடைய புஸ்தகத்தைப் பிரசுரம் செய்யும் நோக்கத்தை விட்டுவிட்டேன். இருந்தாலும், மற்றொரு புஸ்தகம் பிரசுரம் செய்ய யோசனை பிறந்திருக்கிறது.

என் புஸ்தகத்திற்கு வந்த முன்னுரைகளையெல்லாம் திரட்டி, ஒரு புஸ்தகம் போடுகிறது. ஆம்...ஆம். அதற்கு—வந்த முன்னுரைக் கோவைக்கு—ஒரு முன்னுரை நானே எழுதுகிறது!

நீங்கள் என்ன முடிவுரை சொல்லுகிறீர்கள்?